விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com


சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 புரட்டாதி 20 ஞாயிற்றுக்கிழமை (06.10.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 291

Registered as a Newspaper in Srilanka

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

## அமைச்சர்கள் தெரிவு; முதலமைச்சர் ஆணைப்படியே

### அதிகாரத்தை கையிலெடுக்கிறார் விக்னேஸ்வரன்



வடக்கு மாகாண அமைச்சர்கள் யார் என்பது தொடர்பாக முடிவெடுக்கும் அதிகாரம் முதலமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ளது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் நேற்று அறிவித்துள்ளார்.

இதன்பிரகாரம் அமைச்சர்கள் தெரிவுக்குரிய அதிகாரத்தை முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் பொறுப்பேற்றுள்ளார்.

வடக்கு மாகாண அமைச்சர்கள் யார் என்பது தொடர்பாக முடிவெடுக்கும் தெரிவுக்கூட்டம் நேற்றும் கொழும்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைச் செயலகத்தில் மாலை 6.15 மணியளவில் கூட்டமைப்பின் தலைவர் தலைமையில் இடம்பெற்றது. இதன்போதே கூட்டமைப்பின் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்.

வடக்கு மக்களின் ஏகோபித்த ஆதரவின் மூலம் ஒருலட் 24ம் பக்கம் பார்க்க

## இலங்கை வருகிறார் சல்மான் குர்ஷித்

### பீரிஸை தனியாகச் சந்திக்கிறார்!



இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் நாளை 07ஆம் திகதி திங்கட்கிழமை இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளதாக இலங்கை வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

இலங்கையில் இரண்டு நாட்கள் தங்கியிருக்கும் இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித், ஜனாதிபதி மகிந்த 23ம் பக்கம் பார்க்க

## இந்திய அமைச்சர் யாழ். வருவார்

-சுரேஷ்

(யாழ்ப்பாணம்)

இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் சல்மான் குர்ஷித் யாழ்ப்பாணத்திற்கு வருகை தரவுள்ளதாக கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் பேச்சாளருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணசபையை தமிழ்த் தேசிய கூட்டமைப்பு கைப்பற்றியுள்ள நிலையில் மாகாணத்தின் நிலை குறித்தும், மாகாண்சபையின் தேவைகள் குறித்தும் இதன் போது ஆராயவுள்ளார்.

நாளை 7-ம் திகதி இலங்கைக்கு வரும் வெளியுறவுத் துறை அமைச்சர் அன்றைய தினமே கொழும்பில் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களை சந்தித்து சமகால அரசியல் நிலைமைகள் குறித்து கலந்துரையாடவுள்ளார்.

மறுநாள் 8-ம திகதி யாழ். 23ம் பக்கம் பார்க்க

## விக்னேஸ்வரன் பதவியேற்பில் சல்மான் குர்ஷித்தும் பங்கேற்பார்!

(கொழும்பு)

வட மாகாண முதலமைச்சராக க.வி.விக்னேஸ்வரன் பதவியேற்கும் நிகழ்வில் இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித்தும் கலந்து கொள்வார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நாளை 07ஆம் திகதி திங்கட்கிழமை அலரி மாளிகையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் முன்னிலையில் வடமாகாண முதலமைச்சராக விக்னேஸ்வரன் பதவியேற்கவுள்ளார்.

அதேவேளை, இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித்தும் அன்றைய தினம் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இந்நிலையில் வடமாகாண முதலமைச்சராக விக்னேஸ்வரன் பதவியேற்கும் முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வில், இந்திய வெளிவிவகார அமைச்சர் சாட்சியாகக் கலந்து கொள்வார் என கொழும்பு இராஜதந்திர வட்டாரங்களில் எதிர்பார்க்கப்படுகிறது.

இதனிடையில், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் முன்னிலையில் வடமாகாண முதலமைச்சராக விக்னேஸ்வரன் பதவியேற்பது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுத்துள்ள முடிவை வெளிநாட்டு இராஜதந்திர வட்டாரங்கள் வரவேற்றுள்ளன.

அத்துடன், தமிழ்த் தேசியக கூட்டமைப்பின் இந்த முடிவை ஐக்கிய தேசியக் கட்சியும், ஜே.வி.பியும் வரவேற்றுள்ள அதேவேளை, இம்முடிவு குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் கருத்து முரண்பாடுகள் காணப்படுகின்றன.

இதனால் முதலமைச்சர் பதவியேற்பு நிகழ்வில் தமிழ்த 02ம் பக்கம் பார்க்க

## உழவு இயந்திரம் ஏறியதில் இளம் குடும்பஸ்தர் பலி

### கொலையா? விபத்தா? மர்மம்



யாழ். பளை-முள்ளியான்-போக்கறுப்பு பிரதேசத்தில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் கழுத்தில் உழவு இயந்திரம் ஏறிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டதாக பளை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதில் போக்கறுப்பு முள்ளியானைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான 24ம் பக்கம் பார்க்க

## பல்கலை மாணவன் விபத்தில் பலி



கனரக வாகனம்-மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளாகியதில் யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இவ்விபத்துச் சம்பவம் நேற்று மதியம் பருத்தித்துறை வீதி புத்தூரில் இடம் 23ம் பக்கம் பார்க்க

## ஐக்கிய தேசியக் கட்சிக்குள் மோதல் துப்பாக்கிச் சூடு; 7 பேர் காயம்

(மாத்தறை)

ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை கட்சித் தலைமையிலிருந்து விலகும்படி வலியுறுத்தி போராட்டம் நடத்தியவர்களுக்கும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக போராட்டம் நடத்தியவர்களுக்கும் இடையே மோதல் ஏற்பட்டுள்ளது.

மாத்தறை நகரில் ஏற்பட்ட இந்த மோதலில் குறைந்தது 7 பேர் காயமடைந்துள்ளதாகவும் ஒருவரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாகவும் தெரிய வருகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டிருந்த மாகாணசபை உறுப்பினர்கள் இருவர் தலைமையில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக மாத்தறையிலிருந்து கொழும்பு நோக்கி இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒழுங்குசெய்யப்பட்டிருந்தது.

அதேநேரம் ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீரவின் ஏற்பாட்டில் ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவான பேரணியும் நடந்துள்ளது. 02ம் பக்கம் பார்க்க

## படகு மூழ்கியதில் 5 பேர் உயிரிழப்பு

மன்னார் பலுகஸ்துறை கடலில் படகொன்று மூழ்கியதில் 5 பேர் கடலில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக கடற்படைப் பேச்சாளர் கமாண்டர் கோசல வர்ணகுலசூரிய தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த மூன்று வயது பெண் குழந்தை, மூன்று பெண்கள் மற்றும் ஒரு ஆண் உட்பட 5 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாக புத்தளம் பொலிஸார் குறிப்பிட்டனர்.

மூழ்கிய படகில் 16 பேர் இருந்துள்ளனர். இவர்களில் 11 24ம் பக்கம் பார்க்க

## தற்காலிக மூடலில் நாசா ஆய்வுகூடம்

அமெரிக்காவில் கடுமையான நிதிநெருக்கடி ஏற்பட்டுள்ளதால் ஏராளமான அரசுத் துறைகள் மூடப்பட்டு வருகின்றன.

தற்போது அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான நாசா நிறுவனமும் சம்பளம் கொடுக்க நிதி இல்லாமல் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

நாசாவில் சுமார் 20 ஆயிரம் பேர் வேலை பார்த்து வருகிறார்கள். இவர்களில் 97 சதவீதம் பேருக்கு கட்டாய விடுமுறை கொடுக்கப்பட்டுள்ளது.

இதனால் நாசாவின் செயல்பாடு முற்றிலும் முடங்கியுள்ளது. இது அமெரிக்காவில் மட்டுமன்றி மற்ற நாட்டு விண்வெளி ஆய்வுத் திட்டப் பணிகளிலும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் செவ்வாய் கிரகத்தை 24ம் பக்கம் பார்க்க

வெறும் 7 இலட்சம் மட்டும் செலுத்தி ஐரோப்பிய நாடு ஒன்றில் மாதம் 125000/- சம்பாதிக்க படிக்க

அரியவாய்ப்பு

- உணவு, இருப்பிடம், ரிக்கற் இலவசம்
- 12 பேருக்கு மட்டுமே அரியவாய்ப்பு.
- 7 நாட்களும் காலை 8.30 மணி முதல் மாலை 6.00 மணிவரை திறந்திருக்கும்.

(C-5021)

திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 0212219016, 0215689090

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விக்னேஸ்வரன்...

தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகள் அனைத்தும் கலந்து கொள்ளுமா என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் எழுந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)




(C-5030)

**Green card lottery**

2015 அமரிக்க லொத்தர் விண்ணப்பம் தற்போது ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

**திருமுருகன் கொம் நெற்**

271A, கே.கே.எஸ் வீதி, யாழ்.
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி
18, பிரதான வீதி, நெல்லியடி.
30, கனகபுரம் வீதி, கிளிநொச்சி.
தொ.பே.: 021 222 7835

**தளபாடங்கள் மலிவு விலையில்**

புதிய அலுவலக மேசை, Excecutive Chair, Projector, விரைவுரைக் கதிரைகள், Box Set.

**021 568 9090**

(சி-5021)


## ஐக்கிய தேசிய...

இதன் போது இரண்டு தரப்பினருக்கும் இடையே மாத்தறை நகரில் ஏற்பட்ட மோதனிலேயே துப்பாக்கிப் பிரயோகம் நடந்துள்ளது.

துப்பாக்கிச் சூட்டு சம்பவம் தொடர்பில் மாகாண சபை உறுப்பினர் மைத்திரி குணரத்னவின் தந்தை ஹேர்மன் குணரத்ன கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (செ-11)


**Study in Malaysia**
Victoria University Switzerland

**HOTEL MANAGEMENT** With GCE(O/L)

கட்டுப்படியான கட்டணத்தில்
பகுதி நேர வேலை வாய்ப்புடன்

O/L தகுதியுடன் விமான துறையில் உங்கள் கனவினை அடைய

EASA Part 147 Approved Training Centre

**Air Craft Maintenance Engineering**

Conducting EASA Part 66 License Examination - Category B 1
Placement Training 80 days in Germany / 90 Days in Malaysia

புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.

STUDENTS CAN CHOOSE TO PERFORM THEIR FINAL YEAR IN GERMANY

**LANKA PACIFIC AVIATION ACADEMY & ACS Education Consultancy**

114, Brown Road, Jaffna, Sri Lanaka
202/60, Royal Pearl Garden, Hendala, Wattala, Sri Lanka.
Tel:77 301 7147 / 77 007 1835 / 77 9123 826
www.facebook.com/AcsEducationConsultancy, www.lpaa.lk, www.easaexams.net




**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

2013-ம் ஆண்டு 5-ம் தர
புலமைப் பரிசில் பரீட்சையில்
சித்தி - 178 புள்ளி

**திருமுரளி - பானுசன்**

கிளி/ அன்னை சாரதாதேவி வித்தியாலயத்தில் (பாரதிபுரம்) கல்வி கற்கும் எமது அன்புக்குரிய "பானு" பரீட்சையில் சிறந்த பெறுபேற்றினையும் கிளி/ மாவட்டத்தில் 15-வது Rank-ஐப் பெற்று சித்தியடைந்துள்ளார். பாலையடி விநாயகன் துணையுடன் சகல நலன்களும் பெற்று கல்வியில் மேலும் சிறப்புற வாழ்த்துகிறோம். அதிபர் ஆசிரியர்களுக்கும் எமது நன்றிகள்.

வாழ்த்துவோர் :
அ. இரகுபதி (அப்பப்பா), அப்பம்மா, பாட்டி,
மாமா, அத்தை, மைத்துனர்மார், சித்தப்பா, சித்தி, சகோதரி.

(C-5028)


**வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு:**
T.P : 021 321 0815, 021 567 1532
E-mail : valampuri@yahoo.com,
valampurijaffna@gmail.com



**தொடர்ந்தும் உங்கள் சேவையில்....**

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்

- கடிதங்கள்
- அன்பளிப்பு பொருட்கள்
- உடுபுடவைகள்
- CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமி ருந்து

Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.

(C-5004)

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-021222 5392

WESTERN UNION
MONEY TRANSFER


**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



05.10.2013 அன்று
மகரகம தேசிய கல்வி
நிறுவகத்தில் ஆசிரியர்களுக்கான
"பிரதீபா பிரபா" விருது பெற்ற
எமது பாடசாலை ஆசிரியை
திருமதி

**ஞானகுமாரி இராஜேந்திரகுமார்**

அவர்களை
பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/ கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித
வித்தியாசாலை.

(4106)


தீபாவளியை முன்னிட்டு
விசேட சலுகை

**உலக நாடுகளுக்கான**
**துரித தபால்கள் பொதிகள் சேவை**

- 220 ற்கு மேற்பட்ட நாடுகளுக்கான சேவை
- சகல நாடுகளுக்கும் 3 - 5 வேலைநாட்களில் சேவை
- மிக குறைந்த கட்டணம் மிக விரைவான சேவை.

(C-5032)

வாடிக்கையாளர்களுக்கான
விசேட சலுகை U.K. 3Kg
பொதிக்கு 2700/= ரூபா மட்டுமே


பல நாடுகளுக்கு
கட்டணங்கள்
குறைக்கப்பட்டுள்ளன



**கிரிஷான்** Worldwide Courier Service

499/1, பருத்துறை வீதி, நல்லூர், (நல்லூர் கோவில் முன்பாக)
Hot Line: +94770569642, +94770166746


**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



2013-ம் ஆண்டு 5-ம் தர
புலமைப்பரிசில் பரீட்சையில்
165 புள்ளிகளைப் பெற்று
சித்தி எய்திய யா/புலோலி மெ.மி.த.க.
பாடசாலை மாணவியான

**செல்வி**
**யோன் சத்தியராசன் யெறோமி**

அவர்களைப் பாராட்டுவதுடன்,
அவருக்கு ஊக்கமளித்த ஆசிரியரான
பங்கயச்செல்வி, அதிபர்
திருமதி தயாநிதி புவனேஸ்வரி
அவர்களிற்கும் நன்றியினைத்
தெரிவிப்பதுடன், அவர்
மேன்மேலும் பல சித்திகளைப்
பெற்று முன்னேற
வாழ்த்துகின்றோம்.

- வாழ்த்துவோர் -
யோன் சத்தியராசன், ஞானேஸ்வரி
(அப்பா, அம்மா)


மாதா கோவிலடி
துன்னாலை வடக்கு, கரவெட்டி.
(சி-5022)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

**புலமைப் பரிசில் பரீட்சை - 2013**

**சித்தியடைந்தோர்**

யா/ வல்லை அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை



குமாரவேல் பகீரதி (163 புள்ளிகள்)
வீரசுரேந்திரன் பாலகுமாரன் (172 புள்ளிகள்)
தவனேஸ்வரன் அபிஷேக் (176 புள்ளிகள்)

யா/ வல்லை அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் 2013-ம் ஆண்டு 5-ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றி சித்தியடைந்த மாணவர்களை பாராட்டி வாழ்த்துவதோடு, இவர்களுடன் பரீட்சையில் தோற்றி 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களையும் வாழ்த்துகிறோம். அத்துடன் இவர்களின் முன்னேற்றத்திற்கு உதவிய பாடசாலையின் அதிபர், ஆசிரியைகள் மற்றும் ஏனைய ஆசிரியர்களையும் வாழ்த்துகின்றோம்.

(சி-5026)

வாழ்த்துவோர் : பாடசாலைச் சமூகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளின் அடையாளங்களை வைத்திருக்க வேண்டிய தேவையில்லை

## இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு

தமிழீழ விடுதலைப் புலிகளின் அடையாளங்களைத் தொடர்ந்து வைத்துக் கொண்டிருக்க வேண்டிய தேவையில்லை. அதனால் புதுக்குடியிருப்பு பகுதியிலிருந்து புலிகளின் நிலக்கீழ் பதுங்கு குழியுடனான வீடு தகர்க்கப்பட்டது என்று இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் பாரிய பதுங்கு குழியுடன் அமைந்திருந்த வீடு கடந்த வியாழக்கிழமை தகர்த்தப்பட்டது தொடர்பில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

புதுக்குடியிருப்பு பகுதியில் தகர்க்கப்பட்ட பதுங்கு குழியுடனான வீடு புலித் தலைவருடையதா என்பது குறித்து எமக்கு சரியாக கூறமுடியாது. எனினும் அது புலிகளின் சுரங்கத்துடனான மூன்று மாடிகளைக் கொண்ட கட்டடமாகும்.

விடுதலைப் புலிகளின் தலைவரின் பதுங்கு குழியுடனான வீடும் இந்த பிரதேசத்திலேயே இருந்தது. மூன்று மாடிகளைக்கொண்ட இந்த வீட்டிலிருந்து அவசரமாக வெளியேறுவதற்கான சுரங்கப் பாதையும் இருந்தது.

இந்த வீட்டைச் சுற்றி மிதிவெடிகள் புதைக்கப்பட்டிருந்தன. அவற்றை அகற்றாது கட்டடத்தைத் தகர்ப்பதனால் ஏற்படும் சேதங்களைக் குறைத்துக் கொள்வதற்கே கண்ணிவெடிகளை அகற்றியதன் பின்னர் இந்தக் கட்டடம் தகர்க்கப்பட்டது என்றார்.(அ-2)

# இலங்கை கைதிகளை சுவிஸ் அதிகாரிகள் சந்திக்கலாம்

## அரசாங்கம் அறிவிப்பு

இலங்கை கைதிகளை சந்திக்க சுவிட்சர்லாந்து அதிகாரிகளுக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

புகலிடம் மறுக்கப்பட்ட நிலையில் நாடு கடத்தப்பட்ட இரண்டு இலங்கைப் பிரஜைகள் நாடு திரும்பியவுடன் விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள் ளனர். இவ்வாறு தடுத்து வைக்கப்பட்ள்ள இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்களிடம் சுவிட்சர்லாந்து அதிகாரிகள் விசாரணை நடத்தவுள்ளனர்.

குறித்த இரண்டு புகலிடக் கோரிக்கையாளர்களும் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் இலங்கை அதிகாரிகள் கைது செய்து தடுத்து வைத்துள்ளனர்.

கடந்த 2011 ஆம் ஆண்டில் குறித்த இலங்கைப் பிரஜைகளின் புகலிடக் கோரிக்கையை சுவிட்சர்லாந்து குடிவரவுத் திணைக்களம் நிராகரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

கைதிகளைப் பார்வையிட்டு அவர்களின் சுக நலன்களை விசாரிப்பதற்கு சுவிட்சர்லாந்து அதிகாரிகளுக்கு அனுமதியளிப்பதாக இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளது.

சொந்த நாட்டில் குறித்த புகலிடக் கோரிக்கையாளர்கள் துன்புறுத்தப்படுகின்றார்களா என்பதனை சுவிஸ் அதிகாரிகள் விசாரணை செய்வார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் புகலிடக் கோரிக்கையாளர்களை நாடு கடத்தும் நடவடிக்கைகளை சுவிட்சர்லாந்து தற்காலிக அடிப்படையில் இடைநிறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.(அ-2)

# கவிதை நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

"உயில்" ஏற்பாட்டுக் குழுவினரால் நடத்தப்படும் சமரபாகு சீனா உதயகுமார் எழுதிய "என் பேனாவின் நிதர்சனம்" எனும் கவிதை நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.16 மணிக்கு யா/கொற்றாவத்தை அ.மி.த.க பாடசாலை மண்டபத்தில் அ.அன்பழகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நூல் வெளியீட்டுக்கான வெளியீட்டுரையை கவிஞர் த.ஜெயசீலன் வழங்க நயப்புரைகளை கவிஞர்களான சு.குணேஸ்வரன், வேல் நந்தன் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

நூலின் முதற்பிரதியை வைத்திய கலாநிதி மா.பிரபாகரனும் சிறப்பு பிரதியை விரிவுரையாளர் எம் அனந்தகிருஸ்ணாவும் பெற்றுக் கொள்ளவுள்ளனர். (அ-5)

# நவராத்திரி விழா

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தான நவராத்திரி விழா நேற்றைய தினம் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இந்நிகழ்வில் எதிர்வரும் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு இடம் பெற்று இரவு 7 மணிக்கு மாவைக்கந்தன் அலங்கார பவனி ஆரம்பமாகவுள்ளது.

மறுநாள் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு வாழை வெட்டு நிகழ்வும் 9.30 மணிக்கு ஏடு தொடக்கம் நிகழ்வும் நடைபெற்று முற்பகல் 11.30 மணிக்கு கேதாரகௌரி விரத பூஜைகளின் ஆரம்ப நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (அ-7)

# வாரம் ஒரு தகவல்

## மருத்துவ சோதிடம்

"ஐயா... சோதிடர் வீடு இது தானே!"

"ஆமாம், நான் தான் சோதிடர்... உங்களுக்கு என்ன வேண்டும்?"

"ஜாதகம் பார்க்க வேண்டும்."

"உட்காருங்க... உங்களுடைய ஜாதகக் குறிப்பு கொண்டு வந்திருக்கிறீர்களா?"

"இந்தாங்க!"

"இந்தக் காலத்தில் பலர் சோதிடத்தை நம்புவதில்லை. ஆனால் அந்தக் காலத்தில் சித்தர்களுக்கே இதில் நம்பிக்கை இருந்தது. சித்த மருத்துவத்தில் சத்திர விதிவிலக்கு என்று ஒன்று உண்டு. அந்த விதிப்படி அமாவாசைக்குப் பின்னர் குறிப்பிட்ட திகதிகளில் வரும் நாட்களில் மனித உடம்பின் சில இடங்களில் அறுவைச் சிகிச்சை செய்யக்கூடாது."

"சமீபத்தில் கூட மருத்துவ சோதிட இயல் சம்பந்தமாக ஒரு சர்வதேச மாநாடு நடந்தது. அங்கே ஓர் அறுவைச் சிகிச்சை நிபுணர் பௌர்ணமி தினங்களில் அறுவைச் சிகிச்சை செய்யும் போது நோயாளிகளுக்கு வழக்கத்தை விட அதிகளவு இரத்தப் பெருக்கு இருப்பதாகவும் அதற்கு என்ன காரணமென்று சரியாகத் தெரியவில்லை என்றும் கூறியிருக்கிறார். சத்திர சிகிச்சைக்கு முன்னர் சோதிடம் பார்ப்பது நல்லது என்றும் கூறியிருக்கிறார்."

"அப்படியா"

"ஆமாம் அதனால் தான் நான் இப்பொழுது உங்களைத் தேடி வந்திருக்கிறேன். எதிர்வரும் சனிக்கிழமை எனக்கு ஒரு ஒபரேஷன் அது நல்லபடியாக முடியுமா?"

"கவலையே படாதீங்க... உங்களுக்கு ஒன்றும் ஆகாது..."

"எனக்கு ஒன்றும் ஆகாது என்று தெரியும்"

"உங்களுக்குத் தானே ஒபரேஷன்"

"இல்லை"

"அப்படியானால்... நீங்க..."

"அந்த ஒபரேஷன் பண்ணப் போற டாக்டர்."

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# இராசி பலன்

06.10.2013
(புரட்டாதி 20, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.58 மணிக்கு
பிரதமை காலை 6.10 மணிவரை
துதியை பின்னிரவு 4.59 மணிவரை
சித்திரை பிற்பகல் 5.09 மணிவரை
இராகுகாலம் 4.32-6.02 மணிவரை
சுபநேரம் 9.02-10.32 மணிவரை

**மேடம்** தேக நலன் சீராகும், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், வருமானம் திருப்தி தரும்.

**இடபம்** பிள்ளைகள் வழியில் பெருமையான சம்பவங்கள் இடம்பெறலாம், சந்தித்தவர்களால் சந்தோசங்கள் கிடைக்கலாம், உடல் நலனில் கூடிய அக்கறை காட்டுவீர்கள்.

**மிதுனம்** உள்ளன்போடு பழகியவர்களின் எண்ணிக்கை கூடும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், உறவினர்களின் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**கடகம்** சுப காரியப் பேச்சுக்கள் முடிவாகலாம், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், தொல்லை தந்தவர்களே தோள்கொடுத்து உதவ முன் வரலாம்.

**சிங்கம்** சிந்திக்காமல் செய்த காரியங்களில் கூட சிறப்புக்கள் வந்து சேரலாம், குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் அகலும், தொழில் நலன் கருதி நல்ல முடிவெடுப்பீர்கள்.

**கன்னி** திறமை மிக்கவர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, வாக்கு மேன்மையுண்டு, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், புதிய தகவல்கள் வந்து சேரலாம்.

**துலாம்** பெரியோர்களின் சந்திப்புக்கள் இடம் பெறலாம், புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்றுக் கொள்வது நல்லது, கற்பனை மிகுதியான நாள், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்** தொழில் ரீதியாக எடுத்த முயற்சிகள் வெற்றி தரும், சஞ்சலங்கள் தீர கதிரவனை வழிபடவேண்டிய நாள், சயன சுகக் குறைவான நாள், கலகலப்பாக தகவல்கள் வந்து சேரலாம்.

**தனுசு** காரிய அனுகூலமுண்டு, கலகலப்பான சூழ்நிலை உருவாகும், விருந்துகளில் கலந்துகொள்ள அழைப்பு வந்து சேரலாம், பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயர்வடையும்.

**மகரம்** கௌரவமான நாள், எடுத்த காரியத்தை முடிப்பதில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், சுப தகவல்கள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு, அந்நியர் உதவியுண்டு.

**கும்பம்** தொலைபேசி வழித்தகவல் மனக் குழப்பத்தை அகற்றும், நேற்றைய பணி ஒன்று இன்றும் தொடரலாம், ஆன்றோர் சந்திப்புண்டு, பயணங்களால் பலனுண்டு.

**மீனம்** போசன சுகமுண்டு, கௌரவக் குறைவான நாள், திருடர் பயமுண்டு, செலவுகள் அதிகமாகும், முயற்சிகள் தாமதமாகும், குடும்பத்தில் சிறுசிறு கருத்து முரண்பாடுகள் தோன்றி மறையும்.

வளவன்

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி ரூபா | திருநெல்வேலி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 60 | 50 | 50 |
| உருளைக்கிழங்கு | 100 | 100-120 | 100 |
| பச்சைமிளகாய் | 60 | 100 | 100 |
| தக்காளி | 100 | 80 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 40 | 50 |
| கோவா | 50 | 50 | 80 |
| கரட் | 50 | 40 | 80 |
| பூசணி | 20 | 30 | 40 |
| புடோல் | 40 | 60 | 60 |
| வாழைக்காய் | 40 | 30 | 60 |
| சின்ன வெங்காயம் | 160 | 140 | 160-200 |
| பெரிய வெங்காயம் | 70 | 70 | 100 |
| பாகற்காய் | 100 | 100 | 80 |
| வெண்டிக்காய் | 40 | 50 | 60 |
| கருணைக் கிழங்கு | 40 | 40 | 80 |
| பயற்றங்காய் | 70 | 100 | 80 |
| லீக்ஸ் | 100 | 90 | 100 |
| பீற்றூட் | 15 | 15 | 40 |
| கறிமிளகாய் | 50 | 50 | 80 |
| முருங்கைக்காய் | 50 | 40 | 120 |
| போஞ்சி | 90 | 80 | 120 |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 30 |
| தேசிக்காய் | 400 | 400 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 30-60 | 50 | 40-50 |
| இராசவள்ளி | 80 | 70 | 120 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதவிக் கல்விப் பணிப்பாளர் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்

(சாவகச்சேரி)


தென்மராட்சி கல்வி வலயத்தினால் கடமை நிறைவேற்றும் தமிழ் பாடத்திற்கான உதவிக் கல்விப் பணிப்பாளர் பதவிக்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

இப்பதவிக்கான தகைமையாக ஆகக் குறைந்தது 3 வருடங்களேனும் சேவையாற்றக் கூடிய வயதெல்லையை உடையவராகவும் இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு -I அல்லது இலங்கை ஆசிரியர் சேவை தரம் 2-I சேர்ந்தவராகவும் இலங்கை கல்வி நிர்வாக சேவை பிரமாணக் குறிப்பில் குறித்த பாடத்துக்கு தேவையென பிரசுரிக்கப்பட்ட கல்வித் தகைமை கொண்டவராக இருத்தல் வேண்டும்.

ஆயினும் இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு-I இல் சேவைக்கால ஆசிரிய ஆலோசகரிடமிருந்து பொருத் தமானவர்கள் தெரிவு செய்யப்படாத சந்தர்ப் பத்தில் மாத்திரமே இலங்கை ஆசிரியர் சேவை 2-I உள்ள ஆசிரியர்களிடமிருந்து தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.

இவ் வலயத்திற்குள் சேவையாற்றும் தகைமைகளையுடைய விண்ணப்பதாரர்களை வலயக் கல்வி அலுவலக நிர்வாகக் கிளையில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று பூரணப்படுத்தி எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு நேரடியாகவோ பதிவுத் தபாலிலோ அனுப்பி வைக்குமாறு தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் அறிவித்துள்ளார். (அ-9-29)

13 ஆவது திருத்தச் சட்டத்தை செயற்படுத்துவதற்கே இந்தியா விரும்புகின்றது என்று இலங்கைக்கு தெரியும் - மன்மோகன்சிங்



# சித்தன்கேணி சந்தியில் பேருந்து தரிப்பிடம் அமைக்குக

(சித்தன்கேணி)

சித்தன்கேணி சந்தியில் பேருந்து தரிப்பிடம் இதுவரை அமைக்கப்படாமையினால் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

சித்தன்கேணி சந்தியில், இருந்து தமது தேவையின் நிமிர்த்தம் வட்டுக்கோட்டை, வடலியடைப்பு, தொல்புரம், பிலவத்தை, சிந்துபுரம் போன்ற பல கிராமங்களைச் சேர்ந்த பயணிகள் பேருந்து சேவையை பெற்றுக் கொள்கின்றனர்.

இச்சந்தியினூடாக 782,787,789,785 போன்ற வழித்தட இலக்கங்களைச் சேர்ந்த பேருந்துக்ள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றன.

அன்றாடம் மாணவர்கள், அலுவலர்கள், நோயாளர்கள், பொதுமக்கள் என அதிகளவானோர் வீதியோரங்களில் நின்றே பேருந்து சேவையைப் பெற்றுக்கொள்கின்றனர்.

இந்நிலையில் மழை, வெயில் காலங்களில் நெருக்கடிகளைச் சந்தித்து வருகின்றனர்.

எனவே,சம்பந்தப்பட்டோர் இதனைக் கருத்திற் கொண்டு பேருந்து தரிப்பிட மொன்றை அமைத்துத் தருமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-9-17)

# விழிப்புணர்வு வீதி நாடகம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் கீழ் தெல்லிப்பழை பிரதேச செயலக கலாசார பிரிவினால் நடத்தப்படும் மக்களிடையே கலாசார விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமான பண்படு விழிப்புணர்வு வீதி நாடகம் இன்று ஞாயிற்றுக்கிழமை முதல் எதிர்வரும் 15 ஆம் திகதிவரை குறித்த தினங்களில் நடைபெற்றவுள்ளது.

இதன்படி இன்று ஞாயிற்றுக்கிழமை அளவெட்டி கிழக்கிலும் நாளை திங்கட்கிழமை கட்டுவன்புலம் மகாவித்தியாலயத்திலும் எதிர்வரும் 11 ஆம் திகதி பட்டிக் கடவை மாவிட்டபுரத்திலும் 14 ஆம் திகதி தந்தை செல்வாபுரத்திலும் 15 ஆம் திகதி மல்லாகம் பழம்பதி பிள்ளையார் ஆலயத்திலும் மேற்படி விழிப்புணர்வு நாடகம் நடைபெறவுள்ளது. (அ-5)

# அபிவிருத்திச்சங்க பொதுக்கூட்டம்

(கரவெட்டி)


வடமராட்சி வட.இந்து மகளிர் கல்லூரியின் வருடாந்த அபிவிருத்திச் சங்கப் பொதுகூட்டம் எதிர்வரும் 18 ஆம் திகதி வெள்ளிக் கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் அதிபர் திருமதி தேவராணி நவரட்ணம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள், அபிவிருத்திச் சங்க உறுப்பினர்க ள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-9-24)









புங்குடுதீவு இறுப்பிட்டி உப தபாலகத்தின் புதிய கட்டடத் திறப்பு விழா நேற்று காலை10.30 மணியளவில் நடைபெற்றது. இந் நிகழ்வில் கலந்து கொண்ட விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் தபாலகத்தின் பெயர்ப் பலகையை யாழ்.மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் திறந்து வைப்பதையும் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வடமாகாண பிரதி அஞ்சல்மா அதிபர் என்.இரட்ணசிங்கம் தபாலகத்தை நாடாவெட்டித் திறந்து வைப்பதையும் தபாலகத்தின் உத்தியோகபூர்வ பணிகள் ஆரம்பிக்கப்படுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- உ.சாளீன்)

# நெல்லியடி பொலிஸாரின் அறிவுறுத்தலுடன் துண்டுப்பிரசுரம்

(கரணவாய்)

நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தினரால் ஜே-366 கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட சிவில் பாதுகாப்பு அங்கத்தவர்களிடம் சில அறிவுறுத்தல்கள் அடங்கிய துண்டுப் பிரசுரத்தை வழங்கி கிராமங்கள் தோறும் காட்சிப்படுத்துமாறு கூறப்பட்டுள்ளது.

அத்துண்டுப் பிரசுரத்தில் அடங்கியுள்ள விடயங்களாவன, நெல்லியடியில் உள்ள கோயிற் குளத்தில் மீன்களை ஏற்றுச் செல்லும் வாகனங் கள், மோட்டார் சைக்கிள் உட்பட ஏனைய வாகனங்களைக் கழுவுதல், அழுக்கான உடைகளைக் கழுவுதல் போன்றன வற்றை தவிர்க்க வேண்டும்.

அத்துடன் குளத்தில் ஆண்கள் அநாகரிகமான முறையில் நீராடுதல், கோயிலின் குளக்கட்டுகளிலிருந்தும் உள்ளூர் சந்தை ஒழுங்கையிலும் இருந்து மதுபானம் அருந்துதல், குளத்துக்கு அருகில் குப்பைகளை கொட்டுதல் போன்ற செயற்பாடுகள் இடம்பெறுவதாக சிவில் பாதுகாப்பு குழுவினர் நெல்லியடிப் பொலிஸாரின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளனர்.

எனவே இவ்வாறான விடயங்களைத் தவிர்க்குமாறே அத்துண்டு பிரசுரம் மூலம் மக்களுக்குகோரிக்கை விடப்பட்டுள்ளது. (அ-9-60)

# கிராம சேவையாளர் பதிலீட்டு நியமனம்

(தும்பளை)

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட ஜே-400,ஜே-415 ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளுக்கு புதிய கிராம சேவையாளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

மேற்படி கிராம அலுவலர் பிரிவுகளில் சேவையாற்றிய சோ.கிருஸ்ணராஜா என் பவர் கடந்த வாரம் விபத்தில் இறந்ததனா லேயே இப் புதிய நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி தற்போது கே.யோகேந்திர நாதன் ஜே-400 கிராம அலுவலர் பிரிவுக் கும் ஜே-415 கிராம அலுவலர் பிரிவுக்கும் பதில் கடமை புரிய நியமிக்கப்பட்டுள்ளார்.

புதிய கிராம சேவையாளர் நாளை திங்கட் கிழமை முதல் கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளார்.

அத்தோடு கே.யோகேந்திரநாதன் முன் னர் கடமையாற்றிய ஜே-401 கிராம அலு வலர் பிரிவில் ச.வதனரூபன் கடமையாற்றவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (அ-9-19)

# தேசிய மர நடுகை 15 ஆம் திகதி

ஜனாதிபதியின் பிறந்த தினத்தை முன்னிட்டு இவ்வருடமும் எதிர்வரும் 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேசிய ரீதியாக மர நடுகைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

அத்துடன், கடந்த வருடம் மரநடுகைத் திட்டத்தை மேற்கொண்டமையினால் ஏற்பட்ட முன்னேற்ற அறிக்கையை கிராம அலுவலர் ஊடாக சமர்ப்பிக்குமாறு ஒவ்வொரு பிரதேச செயலகங்களுக்கும் சுற்றுச் சூழல் அமைச்சு அறிவித்துள்ளது. (அ-9-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பிரத்தியேக வகுப்புகள்**

க.பொ.த (சா/த) கணிதம், விஞ்ஞானம் என்பன தங்கள் வீடுகளுக்கு வந்து இலகுவான முறையில் கற்பிக்கப்படும்.

**தொடர்புகளுக்கு:**

**0774014345**

(சி-5018)

**வாடகைக்கு விடப்படும்**

3 அறைகள் கொண்ட சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு (பெண்களுக்குரிய அறையும் வாடகைக்கு உண்டு)

பலாலி வீதி,
02 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

**தொடர்புகளுக்கு: 0772365351**
**021 222 7684**

(சி-5019)

# ஆசிரியர் தினம்

வடமராட்சி வட இந்து மகளிர் கல்லூரியில் சர்வதேச ஆசிரியர் தின நிகழ்வு நாளை திங்கட்கிழமை மதியம் 12 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் அதிபர் திருமதி நவரட்ணம் தேவராணி தலைமையில் இடம்பெறவுள்ளது

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக இலங்கை வங்கியின் பருத்தித்துறை கிளை முகாமையாளர் எஸ்.தர்மராஜா கலந்து கொள்ளவுள்ளார்.

* * * *

பருத்தித்துறை மெதடிஸ்த பாடசாலையில் சர்வதேச ஆசிரியர் தின நிகழ்வு நாளை திங்கட்கிழமை காலை காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் திருமதி செல்வமலர் சுந்தரேசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.ஸ்ரீகரன் கலந்து கொள்ளவுள்ளார். (அ-9-24)

**KUMAR PRINTERS**

**குமார் பிறிண்டேர்ஸ்**

- ஓவ் செற் பிறிண்டிங்
- கொம்பியூட்டர்ரைப்பிங் & டிசைனிங் மற்றும் சகல விதமான பிறிண்டிங் வேலைகளையும் செய்து பெற்றுக்கொள்ள உயர் தொழில்நுட்பத்தின் மூலம் உங்கள் தேவைக்கான சகலவித அளவுகளிலும் **பேப்பர் கட்டிங்** செய்திட

(அச்சகங்களுக்கு விசேட விலை சலுகை வழங்கப்படும்)

**தொடர்புகளுக்கு : ஆனைக்கோட்டை வீதி,**
ஆறுகால்மடம் (ஆறுகால்மட சந்தி, யாழ்ப்பாணம்)

**தொ.பே : 0773920797**

(4089)



**குறைந்த கட்டணத்தில்**
**24 மணி நேர சேவை**

24/7 ONLY MULTI SPECIALITY HOSPITAL IN JAFFNA

Northern Central Hospitals

**நொதன் சென்றல் வைத்திய சாலை வழங்கும் பிரத்தியேக வைத்திய சேவைகள்**



வட பகுதி மக்களின் தேவை கருதி நொதன் சென்றல் வைத்தியசாலை பல நவீன பிரத்தியேக வைத்திய மற்றும் சத்திர சிகிச்சை சேவைகளை நோயாளிகள் கொழும்பு செல்ல வேண்டிய அவசியமில்லாது இங்கேயே வழங்கி வருகின்றதென்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றது.

இங்கு வழங்கப்படும் நவீன சேவைகளாவன:

- கண் சத்திர சிகிச்சை
- காது மூக்கு தொண்டை சத்திர சிகிச்சை
- சகல விதமான பற்சிகிச்சைகள் Dentel Surgery (Orthodontic)
- சாதாரண மகப்பேறு, மகப்பேற்று சத்திர சிகிச்சை
- பொது சத்திர சிகிச்சை
- சிறு நீர் தொகுதி சத்திர சிகிச்சை, கற்கள் அகற்றுதல் உட்பட (Urology)
- நரம்பியல் சிகிச்சை (EMG, EEG, Sleep Disorders)
- லாபறஸ்கோப்பி (Laporoscopy)
- முறிவு தெறிவு , மூட்டுக்கள் சத்திர சிகிச்சை

(சி/5005)

**342, பலாலி வீதி, திருநெல்வேலி,யாழ்ப்பாணம்.**
T.P: 021 221 9988, 021 221 9977,021 222 2263 Fax: 021 222 2263
Web : www.nchjaffana.com E-mail: nchjaffna@gmail.com

# இந்தியத் திருத்தல யாத்திரை

நாட்கள்: 12, யாத்திரிகர்கள் 10 பேர்,
ஆரம்பம் 25.10.13 - 05.11.13

## தரிசிக்கும் ஆலயங்கள்

மலைக்கோட்டை விநாயகர், பிள்ளையார் பட்டி, குன்றக்குடி முருகன், ஏகாம்பரேஸ்வரர், காமாட்சி அம்மன், வரதராஜப் பெருமாள், நவசீரடி பாபா, பொற்கோவில், திருப்பதி, அலமேலுமங்கா, காளகஸ்திரி, திருவெண்ணாமலை, சிதம்பரம், நவக்கிரக ஆலயங்கள் 9, இராகு, கேது, சுக்கிரன், செவ்வாய், புதன், சூரியன், சந்திரன், வியாழன், சனி பகவான், வைரவன்பட்டி, குபேரன் கோயில், தஞ்சாவூர், மதுரை மீனாட்சி, சுந்தரேஸ்வரர், திருப்பரங்குன்றம், அழகர்கோயில், பழமுதிர்ச்சோலை, நாகாத்தம்மன், மேல் மருவத்தூர், தோணியப்பர், ஸ்ரீ ரெங்கம், திருவானைக் காவல், சமயபுரம், மாங்காடு, திருவேற்காடு, அஷ்டலெட்சுமி, ஆறுபடை முருகன், (ஒரே இடத்தில்), பார்த்தசாரதி, கபாளீஸ்வரர், தன்வந்திரி விஸ்ணு, 408 சிவலிங்கங்களை ஒரே இடத்தில் தரிசிக்கலாம். வெக்காளி அம்மன், உட்பட 40 இற்கு குறையாத ஆலயங்களை தரிசிக்கலாம். 1 நாள் சொப்பிங் சென்னையில் எமது சேவை.

இருவழி விமான ரிக்கெட். காலை காப்பி பலகாரம், மதிய உணவு சாதம், 4 மணி காப்பி, ரீ, இரவு காப்பி, பலகாரம், தங்குமிடங்கள் 2 பேருக்கு கட்டில் மெத்தை குளியல் அறையுடன் கூடிய அறைகள், யாத்திரை முடியும்வரை A.C. வாகன வசதி இவை அனைத்தும் எமது சேவை. விருப்பமுடையவர்கள் பாஸ்போட் படமுன் பக்க போட்டோக் கொப்பியும் 1 பாஸ்போட் சைஸ் கலர் புகைப்படமும் அனுப்பி பதிவு செய்யவும். விபரம் கேட்டறிந்து பதிவு செய்க.

மட்டக்களப்பில்
கே.ராஜகோபால்
தொ.பே: 0653653719,
0752621141

திருகோணமலையில்
திரு.ரி.சிவபாலன்
0777293271

**மேல் விபரங்கட்கு:**
கலாநிதி ரி.ஸ்ரீரெங்கநாதன்
#59, C/3/3 மூன்றாம்மாடி,
செட்டியார் தெரு, கொழும்பு 11

யாழ்ப்பாணத்தில்
எஸ்.பிரசாத் 021 222 8155
எம்.குமாரசிங்கம்
0213206314, 0786144476

**கல்யாண மாலை**

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1974 இந்து (V)
நட்சத்திரம்: அனுஷம் 1
கி.பா: 29.25 செவ் 1
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: Businees Management (Manager Dubai)
தொ.இ:B2382

பிறப்பு: 1972 இந்து (V)
நட்சத்திரம்: சுவாதி 4
கி.பா. 34.25 செவ். 7இல்
உயரம்: 5'6"
தகைமை/ தொழில்: தையல் (வாய் பேச முடியாதவர்)
தொ.இ:B2386

பிறப்பு: 1985 இந்து (V)
நட்சத்திரம்: ரோகினி 1
கி.பா:31.5 செவ், சூரி. 1
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: A/L Uk Citizen
தொ.இ:B2387

பிறப்பு: 1962 இந்து (V)
நட்சத்திரம்: சுவாதி 4
கி.பா:39.5
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: Electronic Australia citizen
தொ.இ:B2388

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1988 இந்து (V)
நட்சத்திரம்: அத்தம் 2
கி.பா :55.25 செவ்: 7ல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:HNDA Qualified
கணக்காளர் (தனியார்)
தொ.இ:G2395

பிறப்பு: 1977 இந்து (V)
நட்சத்திரம்: புனர்பூசம் 1.
கி.பா :52 4இல் சூரி, செவ்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: (BA) ஆசிரியர்
தொ.இ:G2399

பிறப்பு: 1988 இந்து (V)
நட்சத்திரம்: கேட்டை 3
கி.பா :48 செவ்: 7ல்
உயரம்: 5'1"
தகைமை/தொழில்:Software Engineering
தொ.இ:G080

பிறப்பு: 1970 இந்து (V)
நட்சத்திரம்: உத்தராடம்
கி.பா :14.25, 4 இல் செவ்.
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: A/L
தொ.இ:G027

**சகல தொடர்புகளுக்கும்:-**

**கல்யாண மாலை**

**(சர்வதேச இலவச திருமண சேவை)**
**இல. 144, பிறவுண் வீதி,**
**யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
(ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்)

ஊடக அனுசரணை வலம்புரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்சாரம் வழங்கப்படாமையால் இருளில் மூழ்கும் பெரியகுளம் கிராமம்

(புளியம்பொக்கணை)

**கிளிநொச்சி மாவட்ட கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் உள்ள பெரியகுளம் கிராமத்துக்கு இதுவரையில் மின்சாரம் வழங்கப்படவில்லை. இதனால் அக்கிராமம் இரவு வேளைகளில் இருளில் மூழ்கிக் கிடப்பதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.**

கடந்த 2010 ஆம் ஆண்டு மீள்குடியேற்றம் செய்யப்பட்ட மேற்குறித்த கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட கிராமங்களுக்கான வெலிக்கண்டல், பழைய வட்டக்கச்சி, பெரியகுளம், கட்டைக்காடு, ஆகியவற்றில் மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

மீள்குடியேற்றம் செய்யப்பட்டு மூன்று வருடங்கள் கடந்த நிலையிலும் இன்னமும் இக்கிராமங்களுக்கு மின்சாரம் வழங்கப்படவில்லை.

இதன் காரணத்தால் இங்கு கல்வி பயிலும் மாணவர்கள் குப்பி விளக்குகளிலேயே தமது கல்வியைத் தொடர வேண்டியுள்ளனர்.

மேலும் பரீட்சைக்கு தோற்றுகின்ற மாணவர்கள் அதற்காக தம்மை ஆயத்தம் செய்வதற்கு மின்சார வெளிச்சமின்றி பெரும் சிரமப்படுகின்றனர்.

இக்கிராமத்தில் 300இற்கு மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் தமது வாழ்வாதாரத்தை முன்னெடுப்பதற்கு மின்சாரத்தைப் பயன்படுத்த முடியாது பெரும் சிரமப்படுகின்றனர்.



போரினால் அனைத்தையும் இழந்து நிர்க்கதியாக்கப்பட்ட நிலையில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ள தமக்கு உரியதரப்பினர் மின்சாரத்தையாகிலும் வழங்கி ஒளியூட்டுவர்களா? என அப்பகுதி மக்கள் கவலையுடன் காத்திருக்கின்றனர்.

இக்கிராமத்திற்கு அருகில் உள்ள புளியம்பொக்கணை, நாகேந்திரபுரம், தர்மபுரம் கிழக்கு, தர்மபுரம் மேற்கு ஆகிய கிராமங்களுக்கு மின்சாரம் வழங்கப்பட்ட போதிலும் தாம் மட்டும் புறக்கணிக்கப்படும் காரணம் என்னவென அப்பகுதி மக்கள் கவலையுடன் கேள்வி எழுப்புகின்றனர்.

இக்கிராமத்திற்கு மின்சாரம் வழங்குவதற்கான எவ்வித நடவடிக்கையும் இதுவரை முன்னெடுக்கப்படவில்லை. எனவே துறைசார்ந்த அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுத்து இக்கிராமத்திற்கு மின்சாரத்தை வழங்கி ஒளியூட்ட வேண்டுமென அப் பகுதி மக்கள் வேண்டுகோள் ஒன்றை முன் வைத்துள்ளனர். (ம-263)

## "வளை ஓசை" நூலிற்கு ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன

(புளியம்பொக்கணை)

கண்டாவளை பிரதேச செயலக கலாசார பேரவையினால் இவ்வருடம் நடத்தப்படவுள்ள கலாசார விழாவில் வெளியிடப்படவுள்ள வளை ஓசை நூல் வெளியீட்டுக்கான ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

கண்டாவளை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட அனைவரும் இந்நூலுக்கான ஆக்கங்களை அனுப்ப முடியும். பிரதேச அபிவிருத்தி சம்பந்தமான கவிதை, கட்டுரை மற்றும் அக்கிராம ஆலய வரலாறு தொடர்பான ஆக்கங்களை அனுப்புதல் வேண்டும்.

இவ் ஆக்கங்களை கலாசார பேரவை, பிரதேச செயலகம், கண்டாவளை என்னும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். (ம-263)

## புனரமைக்கப்படாத வீதியால் பயணிப்போர் சிரமம்



(புளியம்பொக்கணை)


தர்மபுரம் 7ஆம் யுனிற் வீதி புனரமைப்பு செய்யப்படாமையால் பயணிகள் சிரமத்தின் மத்தியிலேயே பயணிக்க வேண்டிய நிலை உள்ளது.

இவ்வீதி புனரமைக்க படாது குன்றும் குழியுமாக காணப்படுவதால் பயணிப்போர் விபத்துக்களை எதிர் கொள்ள வேண்டிய நிலை உள்ளது.

தர்மபுரம் கிழக்கு, தர்மபுரம் மேற்கு ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளை பிரிக்கின்ற வீதியாக இவ்வீதி காணப்படுகின்றது.

இவ்வீதியால் பாடசாலை மாணவர்கள் மற்றும் விவசாயிகள் ஏனைய அலுவலகங்களுக்கு செல்வோர் மற்றும் பயணிகள் பயணிக்கின்றனர்.

மழைகாலத்தில் இவ்வீதியால் பயணிக்க முடியாதநிலை உள்ளது. எனவே மழை காலத்திற்கு முன் இவ்வீதியைப் புனரைமத்து போக்குவரத்துக்கு உதவ வேண்டுமென பயணிகளும் அப்பகுதி மக்களும் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளனர். (ம-263)



சிறுவர் தினத்தை முன்னிட்டு கிளிநொச்சி கனகபுரத்தில் இயங்கும் றோயல் முன்பள்ளி சிறுவர்கள் கல்விச் சுற்றுலா மேற்கொண்டனர். இக்கல்விச் சுற்றுலாவை மேற்கொண்ட முன்பள்ளி சிறுவர்கள், ஆசிரியர் மற்றும் பெற்றோர்களைப் படத்தில் காணலாம். (படம்:- சிவநகர் செய்தியாளர்)




## முதியோர் தினப் போட்டியில் வெற்றி பெற்றோர் விபரம்

(பூநகரி)

முதியோர் தினத்தையொட்டி பூநகரி கோட்டத் திற்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கிடையே நடைபெற்ற முதியோர் தினப்போட்டி முடிவுகள் பூநகரி கோட்டக்கல்விப் பணிப்பாளரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விபரம் வருமாறு.

**கீழ்ப்பிரிவு–பேச்சு**

கி.யாகத் – (முழங்காவில் ம.வி.), க.அபிசாயின்– (பூநகரி விக்னேஸ்வரா வித்தியாலயம்), ச.யதுஷன் – (பரமன்கிராய் அ.த.க பாடசாலை).

**மத்திய பிரிவு – பேச்சு**

பு.நிறோஜினி – (முக்கொம்பன் அ.த.க. பாடசாலை), பா.நீலாம்பரி – (பூநகரி ம.வி), ஜெ.றம்மியா – (முழங்காவில் ம.வி).

**மேற்பிரிவு– பேச்சு**

க.பிரவீனா – (பூநகரி ம.வி), ர.துவாரகன் – (முக்கொம்பன் அ.த.க பாடசாலை), ம.மாறன் – (முக்கொம்பன் அ.த.க பாடசாலை).

**கீழ்ப்பிரிவு–கட்டுரைப் போட்டி**

க.சாளினி – (முக்கொம்பன் அ.த.க பாடசாலை), இ.சதுர்யன் – (சுன்னாவில் அ.த.க பாடசாலை), ஜே.ஜெயாளினி – (முழங்காவில் ஆரம்ப வித்தியாலயம்).

**மத்திய பிரிவு–கட்டுரைப் போட்டி**

ச.சஜந்தா – (ஞானிமடம் அ.த.க பாடசாலை), ந.அகல்யா – (முழங்காவில் ம.வி), பா.சர்மிளா – (முக்கொம்பன் அ.த.க பாடசாலை).

**மேற்பிரிவு–கட்டுரைப் போட்டி**

த.ஜெலானி – (வேரவில் ம.வி), க.[illegible]ஜன் – (முழங்காவில் ம.வி), ம.மேரி [illegible]ரினா – (பூநகரி ம.வி) (ம-84)

## ஓய்வூதியர் கௌரவிப்புக்கு நிபந்தனைகள் விதிப்பு

### கிளி.மாவட்ட ஓய்வூதியர் சங்கம் அறிவிப்பு

(பூநகரி)

கிளிநொச்சி மாவட்ட கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பச்சிலைப்பள்ளி ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் எதிர்வரும் 15 ஆம் திகதி கௌரவிக்கப்படவுள்ள 15 அரச ஓய்வூதியர்களும் தகைமை அடிப்படையிலேயே தெரிவு செய்யவேண்டுமென கிளிநொச்சி மாவட்ட ஓய்வூதியர் சங்கத்தினர் கிளி. மாவட்ட பிரதேச செயலக ஓய்வூதியர் சங்கங்களுக்கு அறிவித்துள்ளனர்.

1)இதன்படி ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தில் குறித்த ஓய்வூதியர்கள் அங்கத்தவராக இருத்தல் வேண்டும்.

2)முன்னர் எப்போதுமே இத்தகைய கௌரவிப்புக்கு உள்ளாகாதவராக இருக்க வேண்டும்.

3)அவ் ஓய்வூதியர் வாழும் பிரதேச செயலக பிரிவில் அவரே வயது அதிகமுடையவராக இருத்தல் வேண்டும்.

4)அவர் அதிக காலம் ஓய்வூதியர் நிர்வாக சபையில் உறுப்பினராக இருந்திருத்தல் வேண்டும்.

5)குறித்த நபர் ஏதாவதொரு நோயினால் பாதிக்கப்பட்டிருப்பின் அவருக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்.

அத்துடன் இயற்கை அனர்த்தம் மற்றும் விபத்துக்களினால் பாதிக்கப்பட்டவருக்கும் முன்னுரிமை அளிக்கப்படல் வேண்டும்.

இத்தகைய தகுதிகளைக் கொண்டிருக்கின்ற 15 அரச ஓய்வூதியர்களே கௌரவிப்புக்குட்பட வேண்டும் என மாவட்ட ஓய்வூதிய சங்கம் பிரதேச ஓய்வூதிய சங்கங்களுக்கு அறிவித்துள்ளது. (ம-84)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களை உசுப்பேத்தும் கலாசாரத்தை முடிவுறுத்துங்கள்!


முப்பது வருடகால விடுதலைப் போராட்டம் தமிழ் மக்களுக்குக் கற்றுத் தந்த பாடங்கள் ஏராளம். அவை சாதாரணமானவை அல்ல. ஒரு காலத்தில் தமிழ் மக்களை உசுப்பேத்தி அதில் இலாபம் அடைந்த அரசியல் வாதிகளின் கபடத்தனங்கள் இனிமேல் தமிழ்மக்கள் மத்தியில் அரங்கேறப் போவதில்லை என்பது நிறுத்திட்டமான உண்மை.

இதற்குச் சான்றாக வடக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ் மக்கள் ஒற்றுமைப் பலத்தோடு வாக்களித்ததைக் கூறமுடியும்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிற்கு வாக்களித்ததன் மூலம் சர்வதேச சமூகத்திற்கு தங்களின் நிலைப்பாட்டைத் தமிழ் மக்கள் தெட்டத் தெளிவாக எடுத்துரைத்துள்ளனர்.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பிற்கு அளிக்கப்பட்ட வாக்கு என்பது கூட்டமைப்பிற்கானதல்ல. அது தமிழ் மக்கள் தங்கள் உரிமைகளைப் பெற்றெடுப்பதில் உறுதியாக இருக்கின்றனர் என்பதை மீண்டுமொரு தடவை உறுதிப்படுத்துவதாகவும் இது விடயத்தில் சர்வதேச சமூகம் தலையிடவேண்டும் என்பதை வலியுறுத்துவதாகவும் போராயுதம் கொண்டு எங்களைத் துவம்சம் செய்தபோதும் உயிரை இழந்து, உறவை இழந்தபோதிலும் தமிழ்த்தேசிய உணர்வை நாம் இழக்கவில்லை என்பதை ஆணித்தரமாக உலக ச்மூகத்திற்குத் தெரியப்படுத்தவுமே தமிழ்மக்கள் திரெண்டெழுந்து வடக்கு மாகாணசபைத் தேர்தலில் வாக்களித்தனர்.

இதன்காரணமாகவே, சிங்கள இணையத்தளம் என்று தனது முகப்புச் செய்தியில், தென்பகுதி சிங்கள மக்கள் ஒற்றுமை என்றால் என்ன



என்பதை வடபகுதி தமிழ் மக்களிடம் சென்று கற்றுக்கொள்ளவேண்டும் எனத் தெரிவித்திருந்தது.

இதுமட்டுமன்றி தமிழ் மக்கள் வாக்களித்த உணர்வு கண்டு இலங்கை அரசு அதிர்ந்து போயுள்ளதென்பதும் மறுக்கமுடியாத உண்மை.

நிலைமை இதுவாக இருக்கும் போது வடக்கின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையில் சத்தியப்பிரமாணம் எடுப்பதற்குக் கூட்டமைப்பின் சில உறுப்பினர்கள் எதிர்ப்புத் தெரிவித்து அமளிதுமளி செய்ததாக அறியவருகிறது.

எதிர்ப்புத் தெரிவிப்பது அவர்களின் ஜனநாயக உரிமை என்பதில் மாற்றுக் கருத்திற்கிடமில்லை.

எனினும் ஜனாதிபதி முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்வதால் ஏற்படக்கூடிய சாதக, பாதக நிலைமைகள் என்ன? என்பதை ஆராய்ந்து அதிலிருந்து முடிவெடுப்பதே அறிவுடைமை.

அந்த வகையில் வடக்கின் ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறியிடம் இருந்தே முதலைமைச்சருக்கான நியமனக் கடிதம் பெறப்பட்டுள்ளது. அது தொடர்பில் நாம் எவரும் எதிர்ப்புக் காட்டவில்லை. இது ஒரு நல்ல சூழ்நிலை என்றே கூறவேண்டும். இந்த வகையில் ஜனாதிபதிக்கு முன்பாகச் சத்தியப்பிரமாணம் செய்வதில் எந்தத் தவறும் இருக்கமுடியாது.

இதுதவிர, ஜனாதிபதிக்கு முன்பாகச் சத்தியப்பிரமாணம் செய்வதா



னது அரசுடன் நடத்தப்படும் பேச்சு வார்த்தைகளின்போது முகச்சுழிப்பு இல்லாத ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தும் என்று நம்பமுடியும்.

இவ்வாறு நாம் கூறும்போது பேச்சு வார்த்தை நடத்துவதால் இலங்கை அரசு ஏதும் தந்துவிடுமா? என்று யாரேனும் கேள்வி எழுப்பினால், அதிலும் நியாயம் இருக்கவே செய்கிறது.

ஆனாலும் நேரான சிந்தனையே வெற்றியைத்தரும் என்பதைத்தான் இந்த உலகின் ஞான அறிவுடையவர்கள் கூறிவைத்துள்ளனர். எனவே எதுவும் நடக்காது என்று நினைக்காமல் நல்லது நடக்கும் என்று நம்புவோம். அந்த நம்பிக்கைகள் மிகவும் முக்கியமானவை. அவை வீண்போவதில்லை.

## செய்யவேண்டிய இடத்தில் நாம் செய்து காட்டவில்லை

ஜனாதிபதிக்கு முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்வதென்பது ஒரு சம்பிரதாய நிகழ்வுமட்டுமே. இதற்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பதென்பது அப்பாவித் தமிழ்மக்களை உசுப்பேற்றும் செயலாகும்.

பொதுவில் இப்போது ஒரு நடைமுறை எங்கள் மத்தியில் உண்டு. அதாவது தமிழ்த்தேசியம் பற்றிக் கதைப்பதே தமிழ்மக்களின் மனங்களை வெல்வதற்கான ஒரு வழியாகப் பின்பற்றப்படுகிறது.

இது உண்மையில் மக்களை ஏமாற்றும் ஒரு நடிப்பு வித்தையே. நாங்கள் தமிழர்கள், எங்களுக்கு உரிமை கிடைத்தாகவேண்டும்.

வன்னிப்போரில் தங்கள் செங்குருதியால் தமிழ்மண்ணை நனைத்த அத்தனை தமிழ் உறவுகளினதும் தியாகமே சர்வதேச சமூகத்தை எங்கள்பால் திருப்பியுள்ளது.

ஜெனீவாத்தீர்மானம் கொண்டு வரப்பட்டதன் அடிப்படையும் அதுவே.

பச்சிளம்பாலகன் பாலச்சந்திரனை சிறுவன் என்றும் பாராமல் ஈனர்கள் சுட்டுக்கொன்றனர்! அந்தக் கொடூரமும் தான் எங்கள் பக்கம் சர்வதேசத்தை இழுத்துக்கொண்டது.

இதுதவிர, புலம்பெயர்ந்துள்ள எங்கள் தமிழ் உறவுகளின் ஒற்றுமையும் கடும் குளிரிலும் ஊர்வலமாய் ஐரோப்பிய வீதிகளில் நடந்த பயணங்களும் நாடு கடந்த தமிழீழம் என்ற இராஜதந்திர வியூகங்களும் தமிழ் நாட்டுச் சோதரர்களின் அக்கினிப் பிரவேசங்களுமே உலக நாடுகள் இலங்கையை உறுக்குவதற்கும் அதட்டுவதற்கும் காரணமாயிற்று.

ஆனால் வடக்கு மாகாண சபைத் தேர்தலுக்காக தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு தயாரித்த தேர்தல் விஞ்ஞாபனத்தில் விடுதலைப்புலிகள் செய்த கொலைகள் தொடர்பில் போர்க்குற்ற விசாரணை தேவை என்றவாறு இடம்பெற்ற அனுபந்தத்தை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் எந்த உறுப்பினர்களும் எதிர்க்கவும் இல்லை. அதற்காகக் கூச்சல் போடவும் இல்லை. இவர்கள் ஏன்? அவ்வாறு செய்யவில்லை

தமிழீழ விடுதலைப்புலிகள் இல்லாத நேரத்தில் அவர்கள் மீது போர்க்குற்ற விசாரணை தேவை என்றால் அந்த விசாரணையானது மக்கள் சமூகத்துடன் இணைந்துள்ள முன்னாள் போராளிகள் மீதல்லவா நடத்தப்படும்.

அப்படியானால் தமிழீழ விடுதலைப் புலிகளை ஓரங்கட்டிவிட்டு ஒரு தமிழ்த்தேசியம் பற்றி நீங்கள் பேசுகின்றீர்களா? குறித்த அநுபந்தத்தை நீங்கள் தேர்தல் விஞ்ஞாபனத்தில் சேர்ப்பதாக இருந்திருந்தால், அரசுடன் இணைந்துள்ள விடுதலைப் புலி உறுப்பினர்கள் மீது விசாரணை நடத்தவேண்டும் என்று சுட்டிக் காட்டியிருக்கவேண்டும். ஆனால் அதை நீங்கள் செய்யவுமில்லை அதற்காக கூச்சல்போடவுமில்லை.

ஜனாதிபதிக்கு முன்பாக சத்தியப்பிரமாணம் செய்யக்கூடாது என்று கோசம் இடுவோர் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் வரிச் சலுகையுடனான உயர்ரக வாகன பெர்மிற்றுகளைத் தூக்கி எறிந்திருக்கலாம் அல்லவா? அப்படியாராவது செய்தீர்களா?

இவ்விதம் இலங்கை அரசு உங்களுக்கு வழங்குகின்ற எந்தச் சலுகையையாவது நீங்கள் புறந்தள்ளியதான கதைகள் உண்டா?

உங்கள் விடயத்தில் விழிப்பாகச் செயற்படும் நீங்கள் அப்பாவித் தமிழ் மக்களிடம் உங்களைத் தமிழ்த் தேசிய உணர்வாளர்களாகக் காட்டிக்கொள்வதற்காக சத்தியப்பிரமாணச் சங்கதியை கையில் எடுத்துக்கொண்டு கூப்



பாடு போடுகிறீர்கள்.

உண்மையில் உங்களின் கூப்பாடு அமைச்சுப் பதவி வழங்கலில் நடக்கும் இழுபறி நிலையை எதிர்ப்பதாக இருந்திருக்கவேண்டும்.

இலட்சோப இலட்சம் தமிழ்மக்கள் எங்கள் மீது நம்பிக்கை கொண்டு வாக்களிக்க, நாங்கள் அமைச்சுப் பதவிக்காகச் சண்டை போடலாமா? விட்டுக்கொடுத்து தமிழ் மக்கள் காட்டியதுபோல நாமும் எங்கள் ஒற்றுமையைக் காட்டுவோம் என்று முழங்கியிருக்கவேண்டும். ஆனால் அப்படி எதையும் நீங்கள் செய்யவில்லை.

இப்போது தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளமுடியாது என்று சொல்வதெல்லாம் உங்களின் அமைச்சுப் பதவிக்கான போட்டா போட்டியையும் இழுபறியையுமே ஆகும். ஜனாதிபதிக்கு முன் சத்தியப்பிர மாணம் எடுப்பது தொடர்பில் தமிழ் மக்கள் எந்தவித வாதப் பிரதிவாதங்களையும் செய்யவில்லை. முதலில் நீங்கள் வடக்கு மாகாண சபை நிர்வாகத்தைப் பொறுப்பெடுங்கள். காலம் கடத் தாதீர்கள். நீங்கள் காலம் கடத்துவது அவ்வளவு நல்ல தல்ல என்பதைப் புரிந்துகொள்ளுங்கள்.

அன்புக்குரிய தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் சோதரர்களே! எங்கள் மண்ணில் நாளாந்த வாழ்வுக்காக ஏங்கும் எத்தனையோ ஏழை மக்கள் வாழ்கிறார்கள். நாங்கள் போட்ட கோசங்களால் அவர்களின் வயிறு காய்ந்த நாட்கள்தான் அதிகம்.

எனவே இனிமேலும் உசுப்பேற்றும் கலாசாரத்தைக் கைவிட்டு உரிமையை வென்றெடுத்தல், அபிவிருத்தியை முன்னெடுத்தல் என்ற இருவழிப் பயணம் பற்றிச் சிந்திப்போம். இந்த இருவழிப் பயணத்திற்கான எங்கள் பக்க துணை சர்வதேசம் என்பதை மறந்து போகாமல் சர்வதேச சமூகத்தின் கரங்களைப் பற்றிப் பிடித்து எழுந்துகொள்வோம். புதிய சிந்தனை, புதிய வியூகம், எங்கள் மண், எங்கள் மக்களின் வாழ்வு என்ற பன் முகப்பார்வையில் உங்களின் நினைப்புகள் நாளும் பொழுதும் இருக்கட்டும். இதுவே நிச்சயம் எங்கள் இனத்தின் விடிவுக்கு வழி வகுக்கும்.

விதுரன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



## பாரதி நினைவோடு

பாரதம் ஏறி பராசக்தியுடன்
பார்வலம் வந்தவன் பாரதி
ஊர்வலத்தில் உதிர்ந்த கவிதைக்குள்ளே
வைத்துப்பாடாத பொருள் ஏதுமில்லை
தேச விடுதலை உயிர்மூச்சாம்
பேசும் தமிழே மொழிகளின் இனிதாம்
மண்ணோடு பெண்ணுக்கும் சேரவிடுதலை
செய்யும் தொழில் யாவும் உயர்வே
கல்விச்சாலையே ஊர்தொறும் ஆலயம்
ஒருவருக்கு உணவிலா உலகை அழிப்போம்
வீணில் உண்டு கழிப்போரை மிதிப்போம்
கண்ணும் கவிதைக்கு சேவகன் ஆனான்
பாரதியின் வீணை மீட்டியதோ சில காலம்
பாடலுக்கோ உலகம் உள்ளவரை வாழ்நாள்

சு.சிவராசா,நாவற்குழி

## விண்ணப்பம்

ஒவ்வொன்றாய் அனைத்தையுமே
இழந்து கொண்டிருக்கிறோம்
இனியும் இழக்க என்ன இருக்கு...?
என்ற நிலை வரும் போது
ஆண்டவனே!
நின்னை நினைப்பதில் என்ன இருக்கு?
வாழ வைப்போரெல்லாம் ஒடுங்கி வாழ
சாகடிப்போரெல்லாம்
வாழ்ந்து கொண்டிருந்தால்
ஆண்டவனே!
நீ அதற்கு...?


ம.தேன்மொழி, நெல்லியடி

## தம்பியுடையான்...



தம்பி எழுந்தான்
தனக்குப் பிடித்த ஒன்றை
அடைவதற்காய்
போட்டி பல போட்டு – அதில்
பொய்கள் பல சொல்லி
நோட்டுக்களைக் காட்டி
நோக்கங்களை மாற்றுகின்றான்
குறுக்குவழி தேடுகின்றான்
தன்னைத் தானே குறுக்குவதறியாமல்

- மாவை. நா.கஜேந்திரன்



## அடுப்பங்கரை அரசி

பெரும் காற்றடிக்கா
வீட்டினுள்
பார்த்தெடுத்த பாலையை
விறகாய் வைத்தும்
சிந்தும் தூறலால்
புகைகிறதே அடுப்பு!
அடுப்பங்கரை அரசியே!
கண்களைத் துடைத்துக்கொள்
சிந்தும் தூறல் தணியட்டும்


தமிழ்த்தோழி, இரா.ஜெயரூ

## இதயம்

கண்ணால் பேசும் கதையை
உயிரில் எழுதும் இதயமே...
கனவில் கரைந்ததை
கவிதை வரையும் இதயமே...
தாயாய், சேயாய் இணைந்து
வாழும் இதயமே...
அன்பாய் பண்பாய்
என்னுள் துடிக்கும் இதயமே
எம் நினைவுச் சுமையை
நனவில் சுமக்கும் இதயமே
நீயின்றி இப்பூமியில்
இல்லையே...
மனிதகுலம்!

சிந்து சிவராசா, ஐங்கரன் வீதி

# மௌனத்தின் தேடல் – 172



## தேடல்

தாயே!
எரிந்த கொள்ளிக் கட்டையுடனும்
வெற்றுப் பாத்திரத்துடனான
தேடலின் போராட்டம்
தேடியது என்ற திருப்தியாவது
வாழ்வில் கிடைக்கும்
தேடு தாயே தேடு

யு.சோபியா
விசுவமடு

## அடுப்பங்கரை

பெண் அடிமை விலங்குகள்
அறுபட அடுப்பங்கரையில்
இருந்து ஆரம்பிக்கட்டும்
உன் வேள்வித்தீ...!

உதயம் ரூபன்
நயினை

## விடிவு வரும்

மேசை, கதிரையின்றி
கல்வி கற்கும் பெண்ணே!
நீ டாக்டராய் பொறியியலாளராய்
கணக்காளராய்
எதுவாக வரினும்
பெண்ணின் விடிவுக்கே!

சி.ஜெயருக்ஷன்
சாவகச்சேரி

## விறகடுப்பு

விதம் விதமாய் எத்தனை அடுப்புகள்
விற்பனைக்கு வந்தாலும் விறகடுப்பில்
விறகு வைத்து ஊதிச்சமைத்து
உட்கார்ந்து சாப்பிடுகையில் அதன்
உருசியோ தனி!

நாபி விமலதாஸ்
நவாலி

## சதியா!

பெற்றவர்
காட்டிய வழியோ
மற்றவர்
செய்த சதியோ
படைத்தவன்
எழுதிய விதியோ
பாவம் இந்தப்
பெண்ணுக்கு
இதுதான் சதியோ!

சிந்து சிவராசா
ஐங்கரன் வீதி

## அம்மா

தன்கையே தனக்குதவி
பழமொழியை தன் மொழியாக
பயன்படுத்தும் எம் தாயே
யாருக்காக ஏன்? இவ்வளவு
கஷ்டப்படுகிறீர்கள்
எம் தெய்வமே

ஆ.ஊஷத்தினி
மட்டுவில்

## விடிவு

இன்னும் நீ அடுப்பூதும்
பெண்ணா?
புறப்படு கல்வியில்
முன்னேறி
டாக்டராய்
பொறியியலாளராய்
கணக்காளராய்
வெளியேறு- உன்
விடிவுக்காய்

சி.ருக்ஷன்
சாவகச்சேரி

## துணிந்திடு

பெண்ணே நீ ஆணாதிக்கத்திற்கு
ஒரு பாடம் புகட்டு
அடுப்பங்கரையில் இருக்கும் - நீ
ஆயிரம் சாதித்திடு
உன் உரிமை பெற்றிடு

க.அகிலேஸ்வரன்

## ஆஹா

மண்ணால் கட்டி
ஓலையால் கூரை வேய்ந்த குடிசையும்
விறகு அடுப்பில்
மண்பானை சட்டியில்
வேகவைத்த உணவும்
சாணத்தால் மெழுகிய தரையிலே
ஓலைப்பாயில்
நிம்மதியாக படுத்துறங்கிய
அந்த சந்தோசமான காலப்பகுதிகளை
இன்று நினைத்தாலும் ஆஹா

விலா சிவவடிவேல்
இணுவில் மேற்கு

## பெண் விடுதலை

பெண்ணே!
அடுப்பங்கரையில் அடுப்பூதி -நீ
அடிமையாகி விடாதே
சமுதாயத்தில் நயவஞ்சகர்களது
பிடியிலிருந்து
உன்னை விடுதலையாக்கிக்கொள்ள
துணிந்து போராடு

ச.மைதிலி
துன்னாலை

## வரலாறு படைப்பாய்

காலம் காலமாய் அடுப்பூதிக்
காலத்தைக் கழித்த பெண்ணே!
மாநிலம் போற்றிட நீ
வரலாறு படைத்திடுவாய்
பெண்ணென்றால் பேதையென
அன்று சொன்ன காலமுண்டு
மண்ணாளும் பெண்களும்
பாரினில் இன்று உண்டு

கணபதி தாசன்
கட்டைக்காடு

## அல்லல்

பிஞ்சு வயதில்
பள்ளி சென்று கற்றாள்
பிறவயதில்
ஆடவனை மணந்தாள்
இன்று அடுப்பூதியே
நித்தம் அல்லற்படுகிறாள்

மருதங்கேணியூர்
வே.வே.அகிலேஸ்வரன்

## பாரம்பரிய பண்பாடு

வீட்டுக்கு வீடு இன்று
மின்னடுப்பில் சமையல் செய்யும்
நாகரிகம் வளர்ந்தாலும்
அடுப்பில் விறகிட்டு எரியும்
நெருப்பில் சமையல் செய்யும்
பாரம்பரிய பண்பாட்டைப்பேணும்
பருவ மங்கையரை நாம்
இன்றுந்தான் பார்க்கின்றோம்

துரை, தென்மட்டுவில்

## ஒரு பெண்ணின் கோரிக்கை மடல்

பெண்ணே அடுப்பில்
வைத்த சட்டியைப் பார்த்து
நீ எழுதுவது சமையல்
குறிப்பல்ல காணாமற்போன
உன் உறவுகளை
கண்டுபிடித்து தந்தால்தானே
பகிர்ந்து உண்ணலாம்
என்ற உணர்வுபூர்வமான மடல்

க.அபர்ணா
வட்டுக்கோட்டை

# சங்குநாதம் மௌனத்தின் தேடல் –173



### அன்பு வாசகர்களே !

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை



ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 10.10.2013 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கூட்டமைப்பு யதார்த்தத்தை புரிந்து கொண்டு செயற்படும்

## நம்பிக்கை என்கிறார் அமைச்சர் சுசில்

(கொழும்பு)

**அரசாங்கம் தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் புரிந்துணர்வுடன் செயற் படத் தயாராகவுள்ளது. தமிழ்த் தேசிய கூட்டமைப்பு யதார்த்தமாக சிந்தித்து வடக்கில் அரசாங்கத்துடன் இணைந்து செயற்படும் என எதிர்பார்ப்பதாக ஐ.ம.சு.மு. செயலாளர் அமைச்சர் சுசில் பிரேமஜெயந்த தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், வடமாகாண சபைக்குஐக்கியமக்கள்சுதந்திரமுன்னணி சார்பில் தெரிவான உறுப்பினர்கள் அடுத்த வாரம் பதவிப் பிரமாணம் செய்யவுள் ளனர்.

மக்கள் வழங்கிய தீர்ப்பிற்கு தலைசாய்த்து வடக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து செயற்பட நாம் தயாராகவுள்ளோம். த.தே.கூ.யதார்த்தைப் புரிந்து நியாயமாக சிந்தித்து செயற்படும் என நம்புகின்றோம்.

கிழக்கு மாகாண சபையின் தீர்மானம் குறித்து அலட்டிக் கொள்ளத் தேவையில்லை. 13 ஆவது அரசியலமைப்பை உள்ளவாறே அமுல்படுத்துமாறு கோரி கிழக்கு மாகாண சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதன் மூலம் எதுவித பிரச்சினையும் எழாது.

13 ஆவது அரசியலமைப்பில் எதுவித மாற்றமும செய்யாது அதனை முன்னெடுக்க வேண்டும் என்ற அதே நிலைப்பாட்டில் ஐ.ம.சு.மு.இல் அங்கம் வகிக்கும் இடதுசாரிக் கட்சிகள் அடங்கலான சில கட்சிகள் உள்ளன.

எனவே இது தொடர்பில் அலட்டிக்கொள்ளத் தேவையில்லை.ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் மாநாட்டில் முஸ்லிம் காங்கிரஸின் பங்களிப்புடன் கிழக்கு மாகாணத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் குறித்து வினவப்பட்ட போதே பதிலளித்த அமைச்சர் காணி அதிகாரம் குறித்து நீதி மன்றம் தெளிவான தீர்ப்பை வழங்கியுள்ளது. பொலிஸ் அதிகாரம் மத்திய அரசாங்கத்தின் கீழே உள்ளது.

எனவே அது தொடர்பில் எதுவித பிரச்சினை யும் கிடையாது என்றார். (அ-2)



**2009 ஆம் ஆண்டிலிருந்து பாடசாலை அதிபர்களின் சம்பள முரண்பாட்டுப் பிரச்சினையை தீர்க்காதிருப்பதைக் கண்டித்து அதிபர்கள் கல்வியமைச்சுக்கு முன்பாக நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டபோது...**

## ராஜா ராணி சேவை காப்பக திறப்பு விழா

(தும்பளை)

முதியோர், குழந்தைகள் நலன் பேணும் ராஜா ராணி காப்பகமொன்று பருத்தித்துறையில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

இந் நிகழ்வு வடமராட்சி வடக்கு பிரதேச செயலக மூத்தோர் பேரவைத் தலைவர் சிவா. கிருஸ்ணமூர்த்தி தலைமையில் இடம்பெறவுள்ளது.

இவ் இல்லத்தை திரு.திருமதி விக்டோறியா அப்தலோம் தம்பதியினர் திறந்து வைக்கவுள்ளதுடன்,நிகழ்வின் பிரதம விருந்தினராக, கொழும்பு கம்பன் கழகத் தலைவர் செ.ஈஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக பருத்தித்துறை மறைக் கோட்ட குரு முதல்வர் ஜே.ஜோண் மவுலிஸ் அடிகளார், வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் இ.த.ஜெயசீலன், வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ-9-19)

## தேவாலயத்துக்கு நிதி ஒதுக்கீடு

(தும்பளை)

உதுறு வசந்தய திட்டத்தினூடாக புனரமைப்பு வேலைகளுக்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது.

இதற்கமைய மருதங்கேணிபிரதேசசெயலர் பிரிவுக்குட்பட்ட சென்.பிலிப்மேரிஸ் தேவாலயத்தின் புனரமைப்பு வேலைக்களுக்காக 6 இலட்சத்து 40 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (அ-9-19)

## லயன் குடியிருப்பு முற்றாக எரிந்து நாசம்

வட்டகொடை மடக்கும்புர கீழ் பிரிவில் அமைந்துள்ள லயன் குடியிருப்பு தொகுதியில் ஏற்பட்ட திடீர் தீயினால் 20 வீடுகள் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளன.

இதனால், இங்கு வசித்து வந்த 20 குடும்பங்களைச் சேர்ந்த 96 பேர் நிர்க்கதியான நிலையில் கொத்மலை வலயத்துக்குட்பட்ட கலாபுவனம் தமிழ் வித்தியாலயத்தில் தஞ்ச மடைந்துள்ளனர்.

தீ ஏற்பட்ட சந்தர்ப்பத்தில் குறித்த லயன் தொகுதியில்சிறுவர்கள்மாத்திரமே இருந்துள்ளனர். எனினும் எவருக்கும் எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை. (அ-2)

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் விபரம்

இவ்வாண்டுக்கான ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் சித் தியடைந்த மாணவர்களின் விபரங் களை பாடசாலைகளின் அதிபர்கள் அறிவித்துள்ளனர். இதன்படி சித்தியடைந்த மாணவர்களின் விபரம் வருமாறு,

**யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை**

ஆ.பாலகுருபெருமாள்-190, யோ.சாரணி-189, ர.நிதுஷா-189, தி.கோபிஷாந்-186, ஆ.வித்தியா ஷாகர்-186, சி.வினுஜா-186, து.பிரசன்னன்-184, ம.இளநிலா-184,த.அம லன்-182, க.சஜித்தா-182, பி.லதுசன்-181, ஞா.கஜானன்-181,த.அபிநயா-181, ம.பிரணா ளினி-181, பு.ஜாதவி-181, சி.சேந் தினி-180, சி.ரங்கன்-179, த.நிசாந்திக்கா-179, ரூ.அபி லாஷ்-178, க.சியாமினி-178, ந.அரவிந்தன்-177, சி.கோபிராம்-177, சு.ரமணன்-176, ஜெ.ஜெய ணாஷ்-176, சு.பிரணவன்-176, யோ.யனு சாந்-176, சி.கஜானி-176, மு.பிரஷான்-175, இ.ஓவியா-175, இ.ருவாஷிகா-175, கோ.ரம்சன்-174, தா.குக சாந்-174, ஸ்ரீ.பிரவீனன்-174, ச.டிஷாங்கினி-174, சு.அஜந்திகா-174, செ.ரிஷிகேசன்-174, சு.ஆதவன்-173, உ.கேசாயினி-173, பு.மானசி-173, கு.தஷாயன்-173, ஸ்ரீ.சினேகன்-172, ஜெ.சாம்பவி-172, ப.தமிழினி-172, ச.அபிராம்-172, கே.ஜருன்ஜா-172, ஜெ.சஞ்ஜீவ் சரண்-171, பே.சிவசங்கர்-171, மு.வர்ஷா-171, அ.கம்சிகா-171, மு.சதுசன்-170, ஜெ.ஆத்திகன்-170, கு.தனுசாந்-170, தி.தனகஸ்தன்-170, சி.பிரகானா-170, த.செந்தூமி-170, மு.அருள்குமரன்-169, க.சஜீவன்-169, சி.சிவநாயகி-169, சா.அக்சயா-169, சு.சண்முகபிரியா-169, சி.ஜனகராஜ்-168,நி.டினேஷ்-168, பி.பிறேம்சங்கர்-167, ஜெ.கீர்திகா-167, தி.பீரித்திகா-167, சி.பிருதுவி-166, ரா.கேதாரணி -166, ர.சந்தியா-166, சி.சங்கவி-165, சி.அபிநயா-165, சு.சாமந்தி-165, வை. யதுசா-165, த.தனுகரன்-165, ஆ.துஷியந் தன் -165, க.நிரூஜன்-165, க.சிவகரன்-165, ஞா.சபேசன்-164, து.பிரபாசன்-164, பா.ரனுஜன்-164, சி.ரங்கா-163, க.சாருஜன்-163, லி.சிந்துஜன்-163, க.பவித்திரன்-163, ச.வைஷ்ணவி-163, ரா.மகீபன்-162, பி.பிரபாஷ்-162, ச.பிரணவன்-162, ஞா.கஸ்தூரி-162, த.டினுஜன்-162, சு.கேஷிகா-162, தி.சதுர்ஜன்-161, ச.கிஷாயினி-161, பா.தரங்கினி-161, க.ஹம்சிகா-161, அ.பிரகதீஸன்-160, யோ.நயனி-160, ம.சிவசங்கர்-160, சி.ரிஷிகேஷ்-159, லோ.சரணியா-159, ம.சௌமியா-159, யோ.கலாவர்த்தனன்-159, ப.பகிரேகா-159, ப.கார்த்திகன்-158, ரா.அங்கரேஸ்-158, க.சரணியன்-158, சா.அக்ஷயா-158, வி.சஞ்ஜீவன்-158, ஸ்ரீ.சுஹாஷினி-158, க.விபூஷன்-157, தி.உதிசன்-157, த.கார்த்திகன்-157, வி.பானுயன்-157, ந.மிருணாளினி-157, ஜெ.பிரிமிகா-157, கு.அருணோதயன்-157, உ.கஜலக்ஷன-156, த.யதுர்ஷன்-156, க.அபிநயா-156, கி.பிரணவி-156, ம.சங்கவி-156, ப.அபிஷா-156, ப.சஞ்ஜீகா-155, ம.துசாணிகா-155, பு.அக்ஷலா-155, யோ.ஜெ.ஜெறுஷன்-154, ர.பலராம்-154, சோ.தேனுஜன்-154, ந.ரிஷானி-154.

**யா/இணுவில் மத்திய கல்லூரி**

உதயகுமார் வதுர்ஷன்-178, கருணாகரன் திவாசவன்-175, தயாரத்னம் தனுஜன்-171, பத்தரன் வல்லபை-169, அகிலலோகநாயகம் சிம்மகி-168, குகநாதன் ஜனார்த்தனி-162, தேவிகபாலன் இராகவன்-161, ஸ்ரீராமச்சந்திரன் ஸ்ரீநிவாசினி-159, பாஸ்கரன் தர்மிகா-157, அருள்சிவம் துவாரகா-155, சிவகாமிநாதன் கிக்சா-154.

**வ/வவுனியா தமிழ் ம.ம.வி.**

அருள் ஈசன் அருவி-193, ரணேஸ் ஆதித்தன்-191, ஜெயராசா ஜனுராஜ்-188, அருட்செல்வம் கார்த்திகேயன்-185, விமலராஜா விதுவர்ஷன்-184, மார்க்கண்ட குகநாதன் சிந்தூரி-180, சத்தியசீலன் பபிதா-180, கஜநிதி சஞ்சயன்-180, சத்தியானந்தம் துளசிகன்-178, விஜயகுமார் மிதுன்ராகுல்-177, இந்திரகுமார் டினோசன்-176, திருச்செல்வம் சுஜீகன் -176, கிருஸ்ணரூபன் தேனுபன்-176, சார்ள்ஸ் சுரேன் ஜொய் எடிசன்-175, ஜெயசீலன் சிவலக்ஷன்-174, ஜெஜதர்சன் தஸ்மிதன்-174, இரவீந்திரன் ஸாருகா-173, மகேஸ்வரன் அனுஞ்சயன்-173, மகாராசா பிரியதர்ஷன்-172, ரவீந்திரன் டிலக்ஸன்-172, நிரஞ்சன் சானுஜன்-172, சிவஞானமூர்த்தி டிலக்ஸன்-171, விக்னேஸ்வரன் சர்மிகன்-170, கணேசலிங்கம் அட்சஜன்-170, உதயசங்கர் அனுசங்கர்-170, வசந்தராஜா இயூயின் லதீஸ்கர்-170, ஆறுமுகம் கிசாந்தன்-169, முகுந்தன் பிறவின்-169, குமார் றினோஜன்-168, அருளானந்தம் லினோஜன்-168, கமலநாதன் கௌரிசங்கர்-168, தேவராஜா கோபிகன்-168, கணேஸ்வரன் அபிசாகர்-167, றமேஸ் நிதுஷன்-167, அன்ரனி ஜெயானந் இவோன் சேபா-166, யூட் நேசராஜா துஷான் யூட்ஸ்-166, ஜெயகெனடி கெஜான்-166, சிவநாதன் திக்சிதன்-166, முகம்மது ரபீல் பாத்திமா கஸ்னா-165, பராபரன் பதிமிலன்-164, கிறிஸ்துராஜா அமல் அனோஜன்-163, கிங்ஸ்லி ஜோசப் சார்ள்ஸ் பிறிஸ்லி-162, சுதாகரன் கிருஷ்ணவர்த்தனன்-161, தாமரைச் செல்வன்-161, ரஜிதரன் சுயாளினி-160, குலேந்திரன் சிபி-159, கருணாகரன் பிரியதர்ஷன்-159, சிவலிங்கம் கீர்த்தனன் -158, தவச்செல்வம் மோகன சூரியா-158, கிருஷ்ணராஜா அக்ஷய்-157, இரவீந்திரகுமார் ஹரீப்திகா-157, உதயராஜன் சண்ஜய்-157, சிவானந்தராஜா ததுஷா-156, மனோரஞ்சிதன் சஞ்சய்-156, கோணேசலிங்கம் பிரணவி-154, சுரேஸ்காந்தன் மிலன்-154.

**யா/இராமநாதன் கல்லூரி**

கலைப்பிரியா பாலகிருஷ்ணன்-169.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டின் பொருளாதார வீழ்ச்சிக்கு மத்திய வங்கி ஆளுநரே காரணம்

## ரவி கருணாநாயக்க எம்.பி.குற்றச்சாட்டு

(கொழும்பு)

**நாட்டில் ஏற்பட்டுள்ள பாரிய பொருளாதார சீர்குலைவுக்கும் நிதி நிறுவனங்களின் வீழ்ச்சிக்கும் காரணமான மத்திய வங்கியின் ஆளுநரை, உடனடியாக தடுப்புக் காவலில் வைக்க வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரும் கொழும்பு மாவட்ட அமைப்பாளருமான ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.**



நாட்டில் என்றுமில்லாத அளவு இன்று பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இதற்கு அரசாங்கமும் மத்திய வங்கியின் ஆளுநருமே பொறுப்புக்கூற வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஸ்ரீகொத்தாவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால், திட்டமிடல் இன்றி, தூரநோக்கின்றி முன்னெடுக்கப்படுகின்ற நிதித் திட்டங்களே நாட்டின் நிதி நிறுவனங்கள் மூடப்படுவதற்கும் நாடு எதிர்நோக்கியுள்ள பொருளாதார சீரழிவுக்கும் காரணமாகும்.

உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் என்பவற்றிலும் உலக நாடுகளில் இருந்தும் தேவைக்கு அதிகமான கடன்களைப் பெற்று நாட்டு மக்களை கடனாளியாக்க மத்திய வங்கியும், அரசாங்கமும் முயன்று கொண்டிருக்கின்றன.

மக்களுக்குச் செல்ல வேண்டிய நிதியை ஊழல் மோசடி செய்து தம்மவரின் குடும்ப நலன்களுக்கு அரசாங்கம் பயன்படுத்துகிறது. ஜனாதிபதியின் குடும்பமும் அரசாங்கமுமே மக்களது நிதியை தனது சட்டைப் பைக்குள் நிரப்பிக் கொண்டிருக்கின்றனர்.

சீனா, இந்தியா ஆகிய நாடுகளிடம் கடன்களைப் பெற்று அபிவிருத்தி என்ற பெயரில் நாடு அடகு வைக்கப்படுகிறது.

மில்லியன் கணக்கான டொலர்களை வெளிநாடுகளுக்கும் உலக நிதி நிறுவனங்களுக்கும் செலுத்த வேண்டிய கடனாளியாக நாட்டு மக்களை அரசாங்கம் மாற்றியுள்ளது.

இன்று வடமேல் மாகாணத்தில் அரசாங்கம் அதிக வாக்குகளுடன் வெற்றி பெற்றதாகக் கூறுகின்றது. உண்மையில் அது ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து சென்ற தயாசிறிக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்கள் பெற்றுக் கொடுத்த வெற்றியே ஆகும்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவம் தொடர்பில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு மக்கள் விருப்பப்படி எதிர்காலத்தில் சிறந்த ஒரு தீர்வினை முன்னெடுப்போம் என்றும் அவர் தெரிவித்தார். (அ-2)

# விக்டோரியா மகாராணியின் உருவச்சிலை புதுப்பொலிவு பெறுகிறது!

(கொழும்பு)

கொழும்பில் எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டை முன்னிட்டு, கடந்த ஏழு வருடங்களாக கொழும்பு நூதனசாலையில் வைக்கப்பட்டிருந்த பிரித்தானிய மகாராணி விக்டோரியா எலிசபெத்தின் உருவச்சிலைக்கு புதுபொலிவு கிடைக்கப்பெற்றுள்ளதாக தமிழோசை இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த 1897 ஆம் ஆண்டு பிரித்தானிய ஆட்சியாளர்களால் நிர்மாணிக்கப்பட்ட குறித்த சிலை, ஜனாதிபதி மாளிகைக்கு முன்னால் முன்னர் வைக்கப்பட்டிருந்தது.

எனினும் இந்த சிலை கடந்த ஏழு வருடங்களுக்கு முன்னர் அங்கிருந்து அகற்றப்பட்டு, கொழும்பு நூதனசாலைக்குப் பின்புறமாக வைக்கப்பட்டது.

இந் நிலையில் அடுத்த மாதம் கொழும்பில் பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாடு நடைபெறவுள்ள நிலையில், இச் சிலையை கொழும்பு விகாரமகாதேவி பூங்காவில் வைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கான நடவடிக்கைகளை கொழும்பு மாநகரசபை மேற்கொண்டுள்ளது.

இலங்கையில் உள்ள பிரித்தானிய உயர்ஸ்தானிகரகமும் இதற்கான கோரிக்கையை முன்வைத்ததாக கொழும்பு மாநகர சபையின் பிரதி முதல்வர் டைடஸ் பெரேரா தெரிவித்துள்ளார். (அ-2)


# வாகன இலக்கத் தகடுகளை விரைவாக பெற்றுக் கொள்க

(யாழ்ப்பாணம்)

மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தினால் வழங்கப்பட்ட, புதிதாக புதிவு செய்யப்பட்ட மற்றும் உடைமை மாற்றத்திற்கான வாகனப் பதிவுப் புத்தகம் கடந்த ஜுலை மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் கிடைக்கப் பெற்றும். இதுவரையில் வாகன இலக்கத்தகடுகளை பெற்றுக் கொள்ளாத உரிமையாளர்கள் எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் யாழ்.மாவட்ட மோட்டார் போக்குவரத்து திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு அவற்றை அலுவலக நாட்களில் பிற்பகல் 2 மணி முதல் 4 மணிவரையிலும் பெற்றுக் கொள்ளமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு இலக்கத் தகடுகளை குறித்த திகதிக்கு முன்னர் பெற்றுக் கொள்ளத் தவறும் பட்சத்தில் அவை மீளவும் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் தலைமைக் காரியாலயத்திற்கு திருப்பி அனுப்பி வைக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)





யாழ்.வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையின் பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட பாடசாலையின் முன்னாள் அதிபர் க.பொன்னம்பலம் மாணவி ஒருவருக்கு சான்றிதழ் வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-என்.குமார்)

# நாடு இருளை நோக்கி சென்று கொண்டிருக்கிறது

(கொழும்பு)

நாடு இருளை நோக்கி சென்று கொண்டிருப்பதாகவும் நீண்டகால திட்டங்கள் இன்றி வேலைகள் முன்னெடுக்கப்படுவதாகவும் எவரும் அறியாதபடி நாடு இருளின் இருளுக்குள் சென்று கொண்டிருப்பதாகவும் மேல் மாகாண அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

மேல் மாகாண சபையில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்ட போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் இந்த நிலைமைக்கு எதிர்க்கட்சிகளே பொறுப்புக்கூற வேண்டும். வன்முறை மற்றும் தகாத செயல்களில் ஈடுபட்டால் அடுத்த தேர்தலில் தாம் தோற்றுப்போவோம் என்ற பயம் அரசியல்வாதிகளுக்கு உள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியும் ஜே.வி.பியும் ஒழிந்து விட்டன என்று சந்தோஷப்படுத்தப்பட்டாலும் உண்மையில் நான் அது பற்றி கவலைப்படுகிறேன்.

எதிர்க்கட்சிகள் தமது குறைபாடுகளை நிவர்த்தி செய்துகொண்டு முன்னோக்கி வரவில்லை என்றால் நாட்டின் ஜனநாயகம் இருளில் விழுந்து விடும் என்றார். (அ-2)

## குச்சவெளியில் மோட்டார் குண்டு மீட்பு

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டம் குச்சவெளி பிரதேசத்தில் 61 மில்லிமீற்றர் மோட்டார் குண்டு ஒன்றை பொலிஸார் மீட்டுள்ளனர்.

இந்தக் குண்டு நேற்று முன்தினம் காலை மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வீட்டு உரிமையாளர் ஒருவர் தங்களுடைய வீட்டு காணியில் மர்மமான பொருளொன்று கிடப்பதாக பொலிஸாருக்கு தகவல் தெரிவித்தார்.

அவ்விடத்திற்கு விரைந்த பொலிஸார் இது தொடர்பில் இராணுவத்தின் கவனத்திற்கு கொண்டு வந்தனர். இராணுவத்தினர் அந்த குண்டை மீட்டு பொறியியலாளர்கள் உதவியுடன் செயலிழக்கச் செய்தனர். (அ-2)

# போர்க்குற்றங்களை மறைக்கும் தோல்வியான முயற்சியில் இலங்கை

## கெல்லம் மெக்ரே தெரிவிப்பு



நேபாளத்தில் நடைபெறும் தெற்காசிய திரைப்பட விழாவில், தமது திரைப்படங்கள் திரையிடப்படுவதைத் தடுக்கும் தோல்வியான முயற்சியில் இலங்கை அரசாங்கம் ஈடுபட்டுள்ளமை தொடர்பில், இலங்கையின் கொலைக்களம் மற்றும் போர் தவிர்ப்பு வலயம் ஆகிய விவரணப்படங்களின் தயாரிப்பாளர் கெல்லம் மெக்ரே கண்டனம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையின் கொலைக்களம் மற்றும் போர் தவிர்ப்பு வயலம் ஆகியவற்றின் மூலம் நாம் வெளியிட்ட போர் மற்றும் மனிதகுலத்திற்கு எதிரான தீவிரமான குற்றச்சாட்டுக்களை அடுத்து அந்த குற்றங்கள் குறித்து விசாரணை நடத்துவதாக இலங்கை அரசாங்கம் சர்வதேச சமூகத்திற்கும் பொதுநலவாயத்தின் சில உறுப்பினர்களுக்கும் உறுதியளித்தது.

உலக நாடுகளுக்கு சென்று எமது விவரணப்படங்களை தடுப்பதற்கு முயற்சிகளை மேற்கொள்வது நடைமுறையில் இருந்தாலும் இந்த குற்றங்களின் ஆதாரங்களை எவராவது காண்பதைத் தடுக்க முடியாது. நீண்ட காலத்திற்கு அவர்கள் வெற்றியடைய முடியாது என்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன் என்றார். போர் தவிர்ப்பு வலயம் திரைப்படம் மலேசியாவில் திரையிடப்பட விருந்த நிலையில் அதனை இலங்கை அரசின் கோரிக்கைக்கு அமைய மலேசிய அதிகாரிகள் தடுத்து நிறுத்தினர்.

இந் நிலையில் போர் தவிர்ப்பு வலயம் உள்ளிட்ட இலங்கை சம்பந்தமான மேலும் இரண்டு விவரணப்படங்களை தெற்காசிய திரைப்பட விழாவில் திரையிட திட்டமிட்டிருந்த நிலையில் அதனை நிறுத்துமாறு நேபாள அதிகாரிகள் ஏற்பாட்டாளர்களுக்கு அறிவித்திருக்கின்றனர். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னை சித்தர் இராஜ் குமார் அவர்களின் பிரம்மரிஷி மலை வாசம்



## ஆன்மீகம் 135

...அன்று அங்கு சித்தரின் அன்பர் வீணைசாமி இருந்தார். அவர் இரவு ஒரு சொப்பனம் கண்டேன். சித்தர் உன்னை தேநீர் கலக்கி மலைக்கு கொண்டு வரச் சொன்னார் என்றார்.

அன்று காலையில் பிரசாதம் செய்து கோமாதா பூஜை முடிந்ததும் மார்பு பக்கம் குறுகுறு என்று இருப்பதும், தலை பாரமாக இருப்பதும் உடல் வேர்த்து கொட்டுவதுமாய் இருந்தது. உடனே சிங்கப்பூர் அன்பர் பூத ராஜா வண்டியை எடுத்து கொண்டு என் மனைவியுடன் திருச்சியில் ஒரு மருத்துவமனைக்கு சென்றதும் அட்டாக் வந்திருக்கிறது சரியான நேரத்தில் வந்தீர்கள் என்று கூறி ஐ.சி வார்ட்டில் போட்டு விட்டனர்.

15 நாள் அவ்விடம் இருந்தேன். ஏற்கனவே என் தாடி எல்லாம் எடுப்பதுபோல் சொப்பனம் கண்டேன். அதேபோல் என் தாடியை எடுத்து விட்டனர். சரி அவர்களுக்கு எனது உடல் சரிப்பட்டு வரவில்லை என்றதும், சென்னை ராமச்சந்திரா மருத்துவமனைக்கு அழைத்துச்சென்று அங்கு லாக்கப்பில் போட்டதுபோல் 25 நாட்கள் தங்க வைத்து விட்டார்கள். என்ன வியாதி என்றால் இருதயத்தில் ஒரு பக்கம் முழுவதும் காய்ந்துவிட்டது. பைப்பாஸ் கூட செய்ய முடியாது என்றார்கள். எந்த கெட்ட பழக்கமும் இல்லை என்றாலும் எப்படி இது போல் ஆனது என்று என் உடலை வைத்து டாக்டர்கள் பரிசோ தனை செய்தார்கள்! ஆஞ்சியோ எடுத்து ஒரு அடைப்பு என்றால் சரி செய்யலாம். இங்கு சுத்தமாகவே நரம்பு மண்டலம் காய்ந்துவிட்டது. இருக்கும்வரை மாத்திரை கொடுப்போம் என்று கூறி சிறிது நாட்கள் என்னை வைத்தி ருந்தனர்.

என்ன குருநாதா? எத்தனையோ பேர்களுக்கு நல்லதும் தைரியமும் சொன்ன எனக்கு இப்படியா? என்று வேதனையுடன் இருந்தேன் என் மனைவியின் முகத்தைப் பார்த்தேன் மிகவும் சோகமாக இருந்தார்கள். இவர்



பிரம்மரிஷிமலையில் அன்னை சித்தர் ராஜ்குமார் சுவாமியுடன் தவயோகி சுந்தர மகாலிங்கம். தவயோகி தவசி நாதன், இலங்கை காரைதீவு கணேஷ் சுவாமி.

சென்றால் எப்படி இரண்டு குழந்தைகளை வைத்துக்கொண்டு காலத்தை ஓட்டுவது என்ற சிந்தனையில் இருப்பது போல் தோற்றம் தெரிந்தது.

வருகிறவர்கள் இறந்தவனை இறக்கப்போகிறவனை பார்ப்பது போல் பார்த்து துக்கம் விசாரிப்பது போல் இருந்தனர். என்னைச்சுற்றி இருப்பவர்களைப் பார்த்தால் நான் தேறுவதே கடினம் என்பதுபோல் எனக்குத் தோன்றியது. ஏற்கனவே இரண்டுமுறை இறந்தவன் என்பது எனக்கு மட்டுமே தெரியும். அதனால் இறப்பது, இருப்பது பற்றி அடியேன் கவலைப்படவில்லை. கைமூடி பிறக்கும் குழந்தை மனிதன் இறக்கும் போது கைதிறந்து எனக்கு ஒன்றுமில்லை என்றே இருக்கின்றான். அரணா கயிறு கூட அறுந்துவிடும். அந்த உடல் பந்தம் என்னை சுற்றி இருக்கும் சுற்றத்தார். இறந்தவுடன் இவ்வுடலை சுட்டெரிக்க காத்திருப்பதுபோல் உணர்ந்தேன்.

போராட்டம், மனப்போராட்டம் இதுதான் வாழ்வா? இத்தனை சீக்கிரம் மடியப்போகும் இவ்வாழ்வா? மனிதக் குலம் ஏன் என்று தெரியாமல் அதிகார போதையும் கொடுமை நிறைந்த புத்தியுடன், பணத்திற்காக எது வேண்டுமானாலும் செய்யும் துணிகர கூட்டம், ஒருநாள் மடியப்போகிறோம். 6 அடி மண் கூட நமக்குப்பிறகு சொந்தம் இல்லையடா! என எண்ணுவதில்லை. ஆனால், கோடி, கோடியாய் பாவம் செய்து பணம் சம்பாதிக்கும் கேலி கூத்தான மனிதனைக் கொண்டு மனம் வருந்தும். ஆனால் எனக்கு. அப்படி இல்லையே. இருந்தாலும் இறந்தாலும் இப்பூவுலகில் வாழ வழிகண்டுவிட்டேன்! சித்தரின் கருணையால்.

ஒருநாள் இரவு பிரம்மரிஷி மலையைப் பற்றிய கனவு கண்டேன். மலையைச் சுற்றி, ஒரே நாளில் வானத்துக்கும் பூமிக்கும் ஏற்றாற் போல் மிகப்பெரிய கூட்டம் கண்டேன். அநேக ரிஷிகள் கூட்டம், அனைவரும் பச்சை வேட்டியுடன் சித்தர் பெருமானை பல்லக்கில் தூக்கிக்கொண்டு வருவதும் மஞ்சள் நிற சேலையுடன் சப்த மாதாக்கள் பூஜை செய்வதும் மிகப்பெரிய பூதங்கள் இம்மலையில் காவல் காப்பதும் போன்ற காட்சிகள் தென்பட்டது.

(தொடரும்)

அன்னை சித்தர்
இராஜ்குமார் குருஜி

# முள்ளிவாய்க்கால் கிராமமும் இராணுவ ஆக்கிரமிப்பும்

தனது நெருங்கிய உறவினர்களில் எட்டுப்பேர் உள்ளடங்கலாக தனது கிராமத்தைச்சேர்ந்த பலர் போரின் இறுதிக்கட்டத்தில் கொல்லப்பட்டதாக இந்த விவசாயி கூறினார். ஐந்து ஏக்கர் நிலப்பரப்பிலுள்ள தனது கிராமத்தின் சுடுகாடானது இறந்த உடலங்களால் நிரம்பியதாகவும் இவர் தெரிவித்தார். பலர் காணாமற் போயுள்ளதாகவும் இந்த விவசாயி விபரித்தார்.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகளுக்கான உயர் ஆணையாளர் நவிபிள்ளை எமது கிராமத்திற்கு வருகை தந்தபோது காணாமற் போன தமது உறவினர்கள் தொடர்பாகவும் இராணுவத்தினரின் கைதுகள் தொடர்பாகவும் பெருமளவிலான மக்கள் அவரிடம் முறையிட்டனர். இது தொடர்பில் தான் நடவடிக்கை எடுப்பதாக நவிபிள்ளை வாக்குறுதி வழங்கியிருந்தார். ஆனால், இது தொடர்பில் இவர் நடவடிக்கை எடுப்பார் என நான் நினைக்கவில்லை. அனைத்துலக சமூகம் எம்மைக் காப்பாற்றும் என போரின் போது தமிழீழ விடுதலைப்புலிகள் எம்மிடம் கூறி எம்மைச் சமாதானப்படுத்த முயற்சித்தனர். ஆனால் இவை எதுவும் நடைபெறவில்லை. என குறித்த விவசாயி அதிருப்தி வெளியிட்டார்.

இலங்கை மீது அமெரிக்கா தலைமையில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையானது தீர்மானம் நிறைவேற்றிய பின்னர் ஓகஸ்ட்டில் நவிபிள்ளை இலங்கைக்கான தனது பயணத்தை மேற்கொண்டிருந்தார். இலங்கையில் மனித உரிமைகளைப் பாதுகாப்பதில் அமெரிக்கத் தீர்மானமானது எதனையும் செய்யாது விட்டாலும்கூட ஆசியப் பிராந்தியத்தில் அமெரிக்காவானது தனது இராஜதந்திர செல்வாக்கை மீள நிலை நிறுத்துவதை நோக்காகக் கொண்டுள்ளது என்பதை இத்தீர்மானம் உறுதிப்படுத்துகிறது.

மாகாணசபை தேர்தல் பரப்புரைக்காகவும் வீதிப் புனரமைப்பு, வங்கிகளின் செயற்பாடுகளுக்காகவும் இலங்கை அரசாங்கம் பல மில்லியன் ரூபாய்களை செலவிடுகிறது. ஆனால், மக்களின் அடிப்படை வாழ்வியலை அபிவிருத்தி செய்வதற்காக இலங்கை அரசாங்கம் எதனையும் மேற்கொள்ளவில்லை. முள்ளிவாய்க்காலைச்சேர்ந்த என பிறிதொரு கிராமவாசி குறிப்பிட்டிருந்தார்.

நாங்கள் எமக்கான நாளாந்த உணவுகளைப் பெற்றுக்கொள்வதற்காகப் போராடுகிறோம். போரின்போது அழிவடைந்த வாகனங்களின் உதிரிப் பாகங்களை விற்று எமக்குத் தேவையான உணவுப்பொருட்களை வாங்குவதற்குக்கூட அனுமதி வழங்கப்படவில்லை. தனியார் ஒப்பந்தங்காரர்களுக்கு இதற்கான அனுமதி வழங்கப்படுகிறது. அண்மையில் இரும்புக் கம்பிகள் மற்றும் இரும்புத் துண்டுகளை சேகரித்த மக்களிடமிருந்து அவற்றை இராணுவத்தினர் பலவந்தமாகப் பறித்தனர். இதனை எதிர்த்த மக்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது என அக்கிராமவாசி கூறினார்.

தற்போது 24 வயதேயான இளம் தாயொருவர், இறுதிக்கட்ட யுத்தமானது எமக்குப் பல துன்பங்களைத் தந்தது. இதனை விபரிப்பதற்கு எம்மிடம் வார்த்தைகளில்லை. பொதுமக்கள் மீது இலங்கை இராணுவத்தினர் கண்மூடித்தனமாக எறிகணை வீச்சுக்களை மேற்கொண்டிருந்த போது எமது கண் முன் னால் பல ஆயிரக் கணக்கான மக்கள் படுகொலை செய்யப்பட்டனர். நாங்கள் இறந்த உடலங் ளுக்கு மேலால் ஓடிக் கொண் டிருந்தோம். நல்வாய்ப்பாக நாங்கள் இதில் தப்பித்தோம். நாங்கள் மீளவும் பிறவியெடுத்துள்ளோம் என கூறி னார்.



இராணுவத்தின் எறிகணையின் போது தச்சுத் தொழிலாளி ஒருவர் தனது கையை இழந்திருந்தார். போரின் போது நாம் எல்லாவற்றையும் இழந்துவிட்டோம். இலங்கை இராணுவத்தினரால் எமது வீடு அழிக்கப் பட்டது. இதனைத் திருத்துவதற்கு எம்மிடம் பணம் இல்லை. நாங்கள் தற்போது சிறிய குடிசையில் வாழ்கிறோம். மழைக்காலத்தில் இந்தக் குடிசைக்குள் மழை நீர் வருகிறது. என தச்சுத் தொழிலாளி தெரிவித்தார்.

எனது கையை இழந்ததால் என்னால் எந்தவொரு வேலையையும் செய்ய முடியவில்லை. நான் இதற்கு முன்னர் நாளொன்றுக்கு 1500 ரூபாய் வரை சம்பாதிப்பேன்.எனது மனைவி தற்போது கூலித் தொழில் செய்கிறார். நாளொன்றுக்கு 200 அல்லது 300 ரூபாய்களைப்பெறுவார். எனது மகள் உட்பட நாங்கள் அனைவரும் இந்தச் சிறிய வருமானத்திலேயே வாழ வேண்டியுள்ளது என அத்தச்சுத் தொழிலாளி மேலும் கூறினார்.

இராணுவத்திடம் சரணடைந்த போது ஒரு ஆண்டுக்குள் விடுவித்து விடுவதாக அவர்கள் தன்னிடம் தெரிவித்தபோதும் தான் மூன்று ஆண்டுகள் வரை தடுத்து வைக்கப் பட்டதாக மீன்பிடியில் ஈடுபட்ட ஒருவர் தெரிவித்தார். நான் விடுவிக்கப்பட்ட பின்னர் ஒருவரும் எனக்கு உதவவில்லை. போரின்போது எனது வீடு அழிவடைந்து விட்டது. நான் இங்கு நாளொன்றுக்கு 700 ரூபாய் வரை பெறுகிறேன். இந்தச் சம்பளத்தைக் கொண்டு நான் எவ்வாறு வீடு ஒன்றைக் கட்ட முடியும்? எனஅவர் வினவினார்.

(இணையம்) (முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பாலாபிஷேகம்

ஆக்ராவில் பால் வியாபாரிகள் பொது மக்களுக்கு விற்கும் பால் தரமானது இல்லை. தண்ணீரே அதிகம் கலந்து விற்கிறார்கள். கலப்படம் பால் விற்கப்படுவதால் குழந்தைகளும் நோயாளிகளும் முதியோர்களும் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள் என்று அக்பருக்கு ஏராளமான புகார்கள் வந்தன.

கலப்படத்தை உடனடியாக ஒழிக்க வேண்டும், அதற்கு என்ன செய்யலாம்? என்று அவையோரிடம் மன்னர் ஆலோசனை நடத்தினார். அப்போது பீர்பால் அரசர் அருகில் வந்து காதோடு ஏதோ இரகசியம் பேசினார்.



அதனை அக்பர் ஆமோதித்துவிட்டு, நாளை நமது கோவில் திருவிழாவை முன்னிட்டு பாலாபிஷேகம் செய்ய வேண்டியுள்ளது. அதற்குப் பெருமளவில் பால் தேவைப் படுகிறது. அதனால் நகரின் மையத்தில் மிகப்பெரிய பாத்திரம் வைக்கப்படும்.

நகரிலுள்ள பால் வியாபாரிகள் அனைவரும் ஆளுக்கொரு குவளைப் பாலை அதில் ஊற்ற வேண்டும். இதனை உடனே முரசறைந்து தெரிவிக்க வேண்டும். அதற்கான ஏற்பாடுகளைச் செய்யுங்கள் என்று அதிகாரிகளுக்கு ஆணையிட்டார்.

மறுநாள் காலையில் நகரின் மையப்பகுதியில் மிகப்பெரிய அண்டா வைக்கப்பட்டது. பால் வியாபாரிகள் ஆளுக்கொரு குவளையுடன் வரிசையில் நின்று கொண்டிருந்தனர். எல்லோரும் பால் ஊற்றுகிறார்கள். நாம் ஒருவர் மட்டும் தண்ணீர் ஊற்றினால் தெரியாது என்று எண்ணி அவர்கள் ஒவ்வொருவரும் ஆளுக்கொரு குவளைத் தண்ணீரைப் பாத்திரத்தில் ஊற்றினார்.

அனைத்து பால்காரர்களும் ஊற்றி முடித்த பிறகு பாலை குவளையால் முகர்ந்தபொழுது அதில் தண்ணீர் மட்டுமே இருந்தது. இதனைக் கண்ணுற்ற அக்பர் கடுமையான கோபம் கொண்டார். அனைத்து பால் வியாபாரிகளையும் அழைத்தார். அனைவரும் மோசடி செய்துள்ளதால் அவர்களுக்குத் தலா நூறு ஆயிரம் அபராதமும் ஐந்தாண்டுகள் கடுங்காவல் தண்டனையும் அளித்தார். அன்று முதல் ஆக்ராவில் கலப்படம் அடியோடு ஒழிந்தது.

★★★★★★★★★★★★★

# கழுதைகளின் பாரம்

அக்பர் சக்கரவர்த்தியும் அமைச்சர் பீர்பாலும் மாலை வேளைகளில் உலாவச் செல்வது வழக்கம். ஒரு புழுக்கமான கோடை கால மாலை வேளையில் உலாவப் புறப்பட்டார். அப்போது அரசரின் மகனான இளவரசன் குர்ரமும் அவர்களுடன் வருவதாக அடம்பிடித்தான்.

அதனால் அவனையும் அழைத்துக்கொண்டு மூவரும் உலாவச் சென்றனர். அப்போது காற்று அதிகம் வீசாமல் வியர்த்ததால் அக்பர் தனது மேலங்கியைக் கழற்றி பீர்பாலிடம் கொடுத்தார். இளவரசனும் அவ்வாறே தனது மேலங்கியைக் கழற்றி பீர்பாலின் கைகளில் கொடுத்தான்.



மறுக்க முடியாமல் மிகவும் கனமான அங்கியைச் சுமந்து கொண்டு பீர்பால் அவர்களுடன் நடந்தார். அவர் சுமந்து வருவதைக் கண்ட அக்பர் கேலி செய்ய நினைத்தார். பீர்பால் நீர் இப்போது சுமந்து வரும் ஆடைகள் ஒரு கழுதைப் பாரம் இருக்கும் போல் தெரிகிறதே என்று சிரித்துக்கொண்டே அக்பர் கூறினார்.

மன்னர் தன்னைக் கழுதையாக்கிவிட்டதை எண்ணிய பீர்பால் அரசே இது ஒரு கழுதைப் பாரமல்ல. இதில் இரண்டு கழுதைகளின் பாரமல்லவா இருக்கிறது என்று கூறினார்.

இதனைக் கேட்ட மன்னர் பீர்பாலை மடக்க முடியாது என்பதை உணர்ந்து அசடு வழிந்தார்.

★★★★★★★★★★★★★★




- ❖1683- வில்லியம் பென் தன்னுடன் 13 ஜெர்மனியக் குடும்பங்களை பென்சில்வேனியாவுக்கு அழைத்துவந்து குடியேற்றினார். இவர்களே முதன் முதலாக அமெரிக்காவுக்கு குடியேறிய ஜெர்மன் மக்களாவர்.
- ❖1795- கேணல் பாபற் என்பவரின் தலைமையில் பிரித்தானியப் படையினர் மன்னாரை ஒல்லாந்தரிடம் இருந்து கைப்பற்றினர்.
- ❖1847- சாமுவேல் பிஸ்க் கிறீன் பருத்தித்துறையை வந்தடைந்தார்.
- ❖1849- ஹங்கேரிய விடுதலைப் போரின் முடிவில் போராளிகள் 13 பேர் அராட் (தற்போது ருமேனியாவில்) என்ற இடத்தில் தூக்கிலிடப்பட்டனர்.
- ❖1870- உரோம் இத்தாலியின் தலைநகரானது.
- ❖1889- தான்சானியாவின் கிளிமஞ்சாரோ மலையின் உச்சி முதன்முதலில் எட்டப்பட்டது.
- ❖1889- தோமஸ் அல்வாஎடிசன் தனது முதலாவது அசையும் படத்தைக் காண்பித்தார்.
- ❖1890- யாழ்ப்பாணம் நகரில் சின்னக்கடை எனப்படும் முக்கிய சந்தையில் கடைத் தொகுதி ஒன்று இடிந்து வீழ்ந்ததில் பலர் கொல்லப் பட்டுப் பலர் காயமடைந்தனர்.
- ❖1903- ஆஸ்திரேலியாவின் உயர் நீதிமன்றத்தின் முதலாவது அமர்வு இடம்பெற்றது.
- ❖1908- ஆஸ்திரியா தன்னுடன் பொஸ்னியா ஹெர்செகோவினாவை இணைத்துக் கொண்டது.
- ❖1922- முதலாம் உலகப்போர்: இஸ்தான்புல்லில் இருந்து பெரும் வல்லரசுகள் வெளியேறின.
- ❖1927- முதலாவது பேசும் படம் த ஜாஸ் சிங்கர் வெளியானது.
- ❖1966- எல்எஸ்டி ஐக்கிய அமெரிக்காவில் தடை செய்யப்பட்டது.
- ❖1973-80 ஆயிரம் எகிப்தியப் படைகள் சூயஸ் கால்வாயைக் கடந்து இஸ்ரேலிய பார் லேவ் கோட்டை அழித்து யொம் கிப்புர் போரை ஆரம்பித்தனர்.
- ❖1977- தாய்லாந்தில் அரசுக்கெதிராக இடம்பெற்ற மாணவர் போராட்டம் இராணுவத்தினரால் நசுக்கப்பட்டது. நூற்றுக்கணக்கான மாணவர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.
- ❖1981-எகிப்திய ஜனாதிபதி அன்வர் சதாத் கொலை செய்யப்பட்டார்.
- ❖1987- பிஜி குடியரசாகியது.
- ❖1995- சூரியனுக்கு அடுத்ததாக கோளைத் தன்னகத்தே கொண்ட பெரும் விண்மீன் 51 பெகாசி கண்டறியப்பட்டது.

**இறப்புக்கள்**

- ❖1661- குரு ஹர ராய், ஏழாவது சீக்கிய குரு (பி.1630)
- ❖1892- அல்பிரேட் லார்ட் டென்னிசன், ஆங்கிலேய கவிஞர் (பி.1809)
- ❖ 1905-பேர்டினண்ட் வொன் ரிசதோஃபென், ஜெர்மனிய புவியியலாளர் (பி.1833)
- ❖1981- அன்வர் சதாத், எகிப்திய ஜனாதிபதி நோபல் பரிசு பெற்றவர் (பி.1918)
- ❖ 2007- லக்சுமி மால் சிங்குவி, இந்திய சட்ட வல்லுநர் மற்றும் எழுத்தாளர் (பி.1931)

**பிடல் காஸ்ட்ரோ**



பிடல் காஸ்ட்ரோ கூபாவைச் சேர்ந்த பொதுவுடமைப் புரட்சியாளரும் பொதுவுடமை அரசியல்வாதியும் ஆவார். கியூபாவில் 1959 இல் புரட்சியை வழிநடத்தி புல்ஜென்சியோ பாட்டிஸ்ட்டாவின் அரசை வீழ்த்தி தலைமை அமைச்சர் பொறுப்பை ஏற்ற காஸ்ட்ரோ, 1959 முதல் 1976 வரை கியூபாவின் பிரதமராகவும், 1976 முதல் 2008வரை ஜனாதிபதியாகவும் பொறுப்பு வகித்தார். கூபாவின் பொதுவுடமைக் கட்சியின் முதல் செயலாளராக 1965 இல் பதவியேற்ற இவர்கூபாவை ஒன்றைக் கட்சி சமூகவுடமைக் குடியரசாக்கினார்.49 ஆண்டுகள் கியூபாவை ஆண்ட காஸ்ட்ரோ பெப்ரவரி 24.2008 அன்று பதவியிலிருந்து விலகினார். உலகத்தில் நீண்ட காலத்துக்கு தலைமைப்பொறுப்பில் இருந்த தலைவர் காஸ்ட்ரோ மட்டுமே. சர்வதேச அளவில், காஸ்ட்ரோ 1979 இல் இருந்து 1983 வரை மற்றும் 2006 முதல் 2008 வரை அணி சேரா இயக்கத்தின் பொதுச் செயலாளராக இருந்துள்ளார்.

அமெரிக்காவில் இருந்து 93 மைல் தூரத்தில் இருந்தாலும் கியூபாவை ஒரு சோசலிச நாடாகப் பேணிய பெருமை இவரைச் சாரும். இதைவிட ருசியா- அமெரிக்க பனிப்போர் நடந்த வேளையில் இவர் ருசியாவிற்குச் சாதகமாகப் பல பணிகளைச் செய்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு காணி, பொலிஸ் அதிகாரம் வழங்குக

## தமிழ்நாடு மாநில செயலாளர் தா. பாண்டியன்

(சென்னை)

**தமிழ் மக்களின் தேர்தல் தீர்ப்பை மதித்து காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்க வேண்டும் என இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் தா. பாண்டியன் தெரிவித்துள்ளார்.**



அவர் இது தொடர்பாக அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார். அதில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

இலங்கையில் வடக்கு மாகாணத்தில் நடைபெற்ற தேர்தலில் மக்கள் அளித்த தீர்ப்பை ஏற்று இலங்கையின் அரசு நடந்து கொள்ளும் என எதிர்பார்த்ததற்கு மாறாக மாகாண சபைகள் பொலிஸ், காணி சம்பந்தப்பட்ட துறைகளில் அதிகாரம் செலுத்த இயலாது என்றும் அவை மத்திய அரசின் நேரடிப் பொறுப்பில் கொண்டு வரப்படும் என அறிவித்திருப்பது தேர்தல் முடிபுகளை முற்றாக நிராகரிக்கும் செயலாகும்.

பதின்மூன்றாவது சட்டதிருத்தத்தில் மாகாண சபைகளுக்கு உள்ள காணி, பொலிஸ் தொடர்பான அதிகாரங்களை மறுக்கவோ, குறைக்கவோ கூடாது என இந்திய அரசு வற்புறுத்தியதால் இந்த ஆண்டின் ஆரம்பத்தில் இலங்கை அரசால் கொண்டு வரப்பட்ட திருத்தச் சட்டம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

இந்திய- இலங்கை ஆகிய இரு நாடுகளுக்கு இடையிலான ஒப்பந்த அடிப்படையில் 13 ஆவது அரசியல் சட்டதிருத்தம் கொண்டு வரப்பட்டதால் அதை இலங்கை அரசு நிறைவேற்றுவதை இந்திய அரசு கண்டிப்பான நிபந்தனையாக்க வேண்டுமென கோருகிறோம்.

வடக்கு மாகாண சபைகளுக்கு நடத்தப்பட்ட தேர்தலின் போது போட்டியிட்ட தமிழ்த் தேசியக் கூட்டணி அதிகாரங்களைப் பெற்று மக்களின் உரிமைகளை மீட்டுத்தருவோம் என்றே பிரசாரம் செய்தது.

அதை ஏற்று மக்கள் பேராதரவு அளித்து வெற்றி பெற செய்துள்ளனர். இந்நிலையில் கிழக்கு மாகாண சபையில் ராஜபக்ஷ கூட்டணியில் உள்ள இலங்கை முஸ்லிம் காங்கிரசைச் சேர்ந்த உறுப்பினர் மாகாணங்களுக்கு 13 ஆவது சட்டதிருத்தப்படி பொலிஸ், காணி சம்பந்தப்பட்ட முழு அதிகாரம் வேண்டும் என்று தீர்மானம் கொண்டு வந்தார்.

அந்தத் தீர்மானம் அவையில் இருந்த 17 உறுப்பினர்களில் 16 உறுப்பினர்களின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டுள்ளது. இது வரவேற்கத்தக்கது.

வடக்கு மாகாண தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 75 வீத வாக்குகளைப் பெற்றுள்ளது.

தேர்தல் அறிக்கை வற்புறுத்துவதே மாநில அதிகாரங்கள் தான். இதை ராஜபக்ஷ அரசு நிராகரித்து தமிழின அழிப்பை தொடர்ந்து சட்ட ரீதியில் செய்ய முற்படுவது கண்டிக்கத்தக்கது.

இந்திய அரசு தனது அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி தமிழின அழிப்பை தடுத்து வடக்கு, கிழக்கு மாகாண சபைகளுக்கு முழு அதிகாரம் பெற்றுக் கொடுக்க வேண்டுமென அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# பொதுநலவாய நாடுகளின் தேசிய கீதங்கள் இசைப்பு

(கொழும்பு)

எதிர்வரும் நவம்பர் மாதம் கொழும்பில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டினை முன்னிட்டு எம்.ரி.வி.மற்றும் எம்.பீ.சி. நிறுவனங்கள் தேசிய இளைஞர் சேவை மன்றத்துடன் இணைந்து வாகனப் பவனியொன்றை நடத்தி வருகின்றது.

நாடளாவிய ரீதியில் கிழக்கு மாகாணங்களிலுள்ள மாவட்டங்களுக்குச் சென்று வரும் இந்த வாகன பவனி ஒவ்வொரு மாவட்டங்களுக்கும் வரும் போது அம் மாவட்டங்களிலும் பொதுநலவாய நாடுகளில் இடம்பெற்றுள்ள ஒவ்வொரு நாட்டினதும் தேசிய கீதம் இசைக்கப்பட்டு அந்த நாட்டைப் பற்றிய குறிப்பொன்றும் மும்மொழிகளிலும் கூறப்பட வேண்டுமென்ற செயற்றிட்டம் அமையப் பெற்றுள்ளது.

பொதுநலவாய நாடுகளில் அங்கத்துவம் பெற்றுள்ள 54 நாடுகளின் தேசியக் கீதங்கள் இலங்கையில் 54 பகுதிகளில் இசைக்கப்பட்டு அவற்றைப் பற்றி சிறு குறிப்புகள் மும்மொழிகளிலும் தெரிவிக்கப்படவுள்ள குறித்த வாகன பவனி பருத்தித்துறையிலி ருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ-2)



சிறுவர் மற்றும் முதியோர் தினத்தை முன்னிட்டு கைதடி முதியோர் இல்லத்தில் உள மகிழ்வு அனுபவக்களம் என்னும் தலைப்பிலான நிகழ்வு நடைபெற்றது. இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் சண்முகலிங்கம் மற்றும் சமூகவியல்த்துறை விரிவுரையாளர்கள், பல்கலை மாணவர்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் யாழ். மாவட்ட முதியோர் சங்க உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# உலகத் தலைவர்களுக்கு விசேட அணுப் பாதுகாப்பு

(கொழும்பு)

பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டில் பங்கேற்கும் உலகத் தலைவர்களுக்கு விசேட அணுப் பாதுகாப்பு வழங்கப்படவுள்ளது. இலங்கை அணு சக்தி அதிகார சபை குறித்த விசேட பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

மாநாட்டில் பங்கேற்கும் தலைவர்களுக்கு பாதுகாப்பு வழங்க சர்வதேச அணுசக்தி முகவர் நிறுவனத்தின் ஒத்துழைப்பு பெற்றுக் கொள்ளப்படவுள்ளது.

அத்துடன் இராணுவ, பொலிஸ் பாதுகாப்பிற்கு மேலதிகமாக அணுசக்தி பாதுகாப்பும் வழங்கப்படவுள்ளது.

அணு கதிர்வீச்சுக்கள் மூலம் உலகத் தலைவர்களுக்கு ஏதேனும் ஆபத்துக்களை விளைவிக்க முடியும் என இலங்கை அணுசக்தி அதிகார சபையின் தலைவர் டாக்டர் ரஞ்சித் விஜேவர்தன தெரிவித்துள்ளார்.

இவ்வாறான தாக்குதல்களைத் தடுக்க ஏற்கனவே பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். உலகத் தலைவர்கள் பங்கேற்கும் ஹோட்டல்கள், அவர்கள் செல்லும் இடங்கள் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளை உள்ளடக்கி[illegible] அணுப் பாதுகாப்பு திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. (அ-2)

# இலங்கையின் அமைவிடத்தை கண்டு மேற்குலகம் அஞ்சுகின்றதாம்

## தேசப்பற்றுள்ள பிக்கு முன்னணி கூறுகின்றது

அரசாங்கத்திற்குள் இருக்கும் சில அரசியல்வாதிகள் பழைய அரசியல் கொள்கைகளை கொண்டுள்ளதுடன் இனவாதிகளையும் தமிழ் அரசியல்வாதிகளையும் மகிழ்வித்து வருவதாக தேசப்பற்றுள்ள பிக்கு முன்னணியின் செயலாளர் பொங்கமுவே நாலக்க தேரர் தெரிவித்துள்ளார்.

தேசிய அமைப்புக்களின் ஒன்றியம் கொழும்பு சவ்சிறிபாயவில் நேற்று முன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையை மற்றுமொரு சூடானாகவும் [illegible] மாற்றும் சர்வதேச சூழ்ச்சிகள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

கியூபாவும் வெனிசூலாவும் தமது சொந்த காலில் நின்று வெற்றி பெற்றது போல் இலங்கையாலும் தனித்து நின்று வெற்றி பெற முடியும்.

இலங்கையின் அமைவிடம் காரணமாக இலங்கை தனித்து வெற்றி பெற்று விடும் என்ற அச்சம் மேற்குலக நாடுகளுக்குள்ளது.

இதன் காரணமாகவே அந்த நாடுகள் பல்வேறு சூழ்ச்சித் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றன.

சர்வதேச ரீதியில் சதித்திட்டங்களை மேற்கொண்டு இலங்கையை ஸ்தம்பிதமடைய செய்ய முயற்சித்து வருகின்றனர் என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராஜதந்திரப் போர் தமிழர்களுக்குப் புதிதல்லவே



உலக இராஜதந்திரக்களம் எப்போதும் தமிழர்களுக்கு சார்பானதாகவோ, அல்லது தமிழர்கள் மீதான அனுதாபம் மிக்கதாகவோ இருந்தது எனக் கொள்ள முடியாது. அதுபோலவே, அது எல்லா வேளைகளிலும் தமிழர்களுக்கு எதிரானதாகவே இருந்தது என்றும் கருத முடியாது.

தமிழர்கள் மீது கரிசனையும் அனுதாபமும் கொண்டதாக உலக அரசியல்- இராஜதந்திரக் களம் தோற்றமளித்த சந்தர்ப்பங்களை மீள்வாசிப்புச் செய்தல் இன்றைய களநிலைமையின் கனதியையும் காலம் கையளித்துள்ள கடமையையும் உணர உதவும். போருக்குப் பிந்திய இந்தக் காலகட்டத்தில் ஈழத்தமிழர்கள் அரசியலில் எதைச் சாதித்தனர். எதைச் சாதிக்கப்போகின்றனர். ஈழத்தமிழரின் இலக்கை அடையும் முயற்சிகள் சரியான திசையில் செல்கின்றனவா என்று ஒரு மதிப்பீட்டை செய்வதற்கு இது பொருத்தமானதாக இருக்கும்.

ஈழத்தமிழர் தொடர்பாக உலக அரசியல் பற்றிப் பேசுமிடமெங்கும் இந்தியாவைப்பற்றிப் பேசாமல் அப்பால் நகர முடியாது. இலங்கைத் தமிழர் தொடர்பான இந்திய நிலைப்பாடு தொடர்பில் 1990 களுக்கு முன் இந்தியா எப்போதும் ஈழத்தமிழருக்கு ஆதரவாகச் செயற்பட்டதுபோலவும், ராஜீவ்காந்தியின் மரணத்தின் பின்பாகவே நிலைமை எதிராக மாற்றமடைந்தது போலவும் ஒரு உண்மையற்ற எண்ணக்கரு பல அரசியல் சிந்தனையாளர்களால் எடுத்தாளப்படுவது வேதனையானது. ஈழப்போராட்டத்தின் திசை வழியொன்று அடைபட்டது, விடுதலைப்புலிகளின்ராஜீய அணுகுமுறையின் தோல்வியினாலதான் என தொடர்புகளை எழுதுகின்ற ஆய்வாளர்கள் கடந்தகாலத்தை வசதிக்காக மறந்துவிடுகின்றனர்.

ஆயுதப்போராட்டம் தோற்றம் பெறுவதற்கு முன்பாகவே இந்தியாவினால் பல சந்தர்ப்பங்களில் ஈழத்தமிழர் நலன் மட்டுமன்றி இந்தியத் தமிழரின் நலன்களும் புறக்கணிக்கப்பட்டது என்ற யதார்த்தத்தைப் புறக்கணிக்கும் அபத்தமான அரசியல் ஆய்வுகள் பொருத்தமான செல்திசையைக் காட்டவோ கடந்த காலத்தின் நடுநிலையான மீள்வாசிப்பிற்கோ உதவப்போவதில்லை.

பிரித்தானியர் வெளியேறிய போதே தமிழருக்கு எதிரான சிங்கள இனவாத அரசியலும் தொடங்கி விட்டது. அப்போதிருந்தே பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இந்திய வெளியுறவுக்கொள்கை இலங்கை அரசுக்கு ஆதரவாகவும் தமிழர் நலன்களுக்கு எதிராகவும் செயற்பட்டு வருவதான தோற்றப்பாட்டினை மறுதலிக்க முடியாது. இலங்கையில் இந்தியத் தோட்டத் தொழிலாளர்களின் குடியுரிமை பறிக்கப்பட்டபோதும் அவர்கள் நாடற்ற மக்கள் ஆனபோதும் இந்திய அரசு கண்டுகொள்ளவில்லை. 1964 இல் சிறிமா- சாஸ்திரி ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டபோதும் 150,000 தமிழ்த் தோட்டத் தொழிலாளர்கள் நாடற்றவர்களாவே இலங்கையில் விடப்பட்டனர். 1956 ஆம் ஆண்டு சிங்களம் அரசகரும மொழி என அரசியல் சட்டம் திருத்தப்பட்டபோதும் 1972 ஆம் ஆண்டு பௌத்த மதம்அரசமதம்ஆனபோதும்இந்தியா மௌனம் காத்தது. பாரம்பரியமாகத் தமிழர் வாழ்ந்துவரும் பிரதேசங்களில் 1972 முதல் இலங்கை அரசு பல சிங்களக் குடியேற்றங்களை நிறுவியபோதும் இந்தியா கண்டிக்கவில்லை. இவற்றின் உச்சமாக 1974 இல் தமிழகத் தமிழரின் பாரம்பரியச் சொத்தான கச்சதீவு இலங்கைக்கு வழங்கப்பட்டது.

2009 மே மாதத்தின் பின்னர் உலகின் மனச்சாட்சி ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாக திரும்பியவேளைகளிலும் இந்திய இராஜதந்திர நகர்வுகள் இலங்கைக்கு ஆதரவானதாகவும் நெருக்கடியிலிருந்து தப்பிப் பிழைக்க உதவும் வகையிலுமே அமைந்தது. ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்கா இலங்கைக்கு எதிராக தீர்மானம் கொண்டு வந்தபோது ஸ்பெயின், கனடா, மெக்சிக்கோ, இங்கிலாந்து, செக்குடியரசு, நெதர்லாந்து, டென்மார்க் போன்ற பல நாடுகள் நிபந்தனையின்றி ஆதரித்த போதும் இந்தியா முதற்கட்டத்தில் இலங்கையைப் பாதுகாக்கும் வகையில் செயற்பட்டமையையும் இரண்டாம் கட்டத்தில் தீர்மானத்தை மென்போக்குடையதாக மாற்ற அழுத்தம் கொடுத்து மாற்றத்தின் பின் ஆதரித்தமையையும் ராஜீவ் காந்தியின் மரணத்தோடும் சோனியாவின் பிடிவாதத்தோடும் மட்டும் தொடர்புபடுவதல்ல.

1983 ஆம் ஆண்டு நடந்த இனப்படுகொலையைக் கண்டித்து அர்ஜன்டீனா, மொரிசியஸ் நாடுகள் ஐ.நா. பொதுச் சபையில் இலங்கைக்கு எதிராகக் கண்டனத் தீர்மானம் கொண்டுவருவதாக அறிவித்தபோது இந்தியா நடந்துகொண்ட விதத்தையும், 1986- செப்டொம்பர் மாதம் இங்கிலாந்தும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளும் ஐ.நா. பொதுச்சபையில் இலங்கைத் தமிழர் பிரச்சினை பற்றிப் பேசிய விவாதத்தின்போது இந்தியா இலங்கை அரசுக்கு ஆதரவாகப் பேசியதையும் 1987- மார்ச் மாதம் ஐக்கிய நாடுகள்சபையின் மனித உரிமைகள் பேரவையில் ஆர்ஜென்டீனா, கனடா, நோர்வே மற்றும் செனகல் நாடுகள் இலங்கைக்கு எதிராகக் கொண்டு வந்த கண்டனத் தீர்மானத்தின் மீதான விவாதத்தில் இந்தியா கலந்து கொள்ளாமல்ஒதுங்கியிருந்ததையும்அறிந்தவர்கள் சிறுபிள்ளைத்தனமாக ராஜீவ் காந்தியின் மரணத்தோடும் சோனியாவின் பிடிவாதத் தோடும் விடுதலைபுலிகளின் இராஜதந்திரக் கையாளலின் தவறுகளோடும் மட்டுமே இந்திய இராஜதந்திரத்தை மட்டுப் படுத்திவிடமாட்டார்கள்.

முதன்முதலாக உலகின் மனச்சாட்சி 2009 மே மாதத்தின் பின்னர் தான் ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாகத் திரும்பியிருப்பது போன்ற தோற்ற நிலையைத் தரும் அரசியல் கலந்துரையாடல்கள் இன்னொரு அபத்தம். அவ்வாறு கூறுவதும் எம்மை நாமே ஏமாற்றிக் கொள்வதற்குச் சமம். இத்தகைய கருத்துநிலைகள் சர்வதேச தொடர்பான மிகையான எதிர்பார்ப்புகளையும் யதார்த்தத்தை விஞ்சிய அதீத நம்பிக்கைகளையும் விதைத்துவிடும் அபாயம் மிக்கவை. இதன் அர்த்தம் முள்ளிவாய்க்காலில் உரிமைப்போருக்காக தம்மைக் கொடையாக்கி- தங்கள் உயிர்களை அர்ப்பணித்து சர்வதேசத்தின் மனச்சாட்சியை உலுக்கிய மக்களினதும் போராளிகளினதும் தியாகத்தை மலினப்படுத்துவதல்ல.

கடந்த 70 ஆண்டுகால உரிமைப்போரில் தமிழர்கள் மீது வன்முறைகள் ஏவப்பட்ட போதும் தமிழர் தாயகப் பகுதிகளிலும் அதற்கு வெளியேயும் தமிழர்கள் நிம்மதியாக வாழ முடியாமல்- தமிழர்களுக்கென்று பாதுகாப்பு அரண் ஒன்று இல்லாமல் இனக்கலவரங்களின் பெயரால் தமிழர்கள் அடித்து விரட்டப்பட்டு அவர்கள் இன அழிப்புச் செய்யப்பட்ட போதும் பல தடவைகள் உலக மனச்சாட்சி தமிழர்களுக்கான அனுதாபத்தையும் கரிசனையையும் வெளிப்படுத்தியிருக்கின்றது. தவிர்க்கவியலாமலோ, இராஜீயச் சூழலின் புறநிலைகளாலோ சில சந்தர்ப்பங்களில் இந்தியாவின் கரிசனையும் அக்கறையும் கூட தமிழர்கள் சார்பானதாக இருந்திருக்கின்றது.

1950 ஆம் ஆண்டில் பேரறிஞர் அண்ணா அவர்கள் இலங்கையில் தமிழர்கள் கொடுமைப்படுத்தப்படுவதைக் கண்டித்து தமிழகத்தின் சென்னை மாநகரத்தில் பேரணி ஒன்றை நடத்தினார். 1961- இல் தமிழர்கள் தாக்கப்பட்டபோது இலங்கையில் தமிழினமும் தமிழ் மொழியும் பூண்டோடு அழிக்கப்படுவதில் இருந்து காப்பாற்ற- உண்மைநிலை அறிய ஒரு குழுவை அனுப்புமாறு ஐ.நா. சபைக்கு வேண்டுகோள் விடுத்துக் கடிதம் அனுப்பினார்.

இந்திரா காந்தியும் 1977 இல் இந்தியப் பாராளுமன்றத்தில் அனைத்து கட்சி கூட்டத்தை கூட் செய்து அதில்அமிர்தலிங்கத்தைபேசவைத்தவர். ஈழப்போராட்டத்திற்கான சர்வதேச அளவிலான ஆதரவுத்தளத்தின் அவசியத்தையும் வலியுறுத்தியவர். 1983 ஆம்ஆண்டு ஜூலை கலவரம் ஏற்பட்டு தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டபோது வெளிநாட்டு அமைச்சராக இருந்த பி.வி. நரசிம்மராவையும் ராஜாங்க அமைச்சர் ஜி.பார்த்தசாரதியையும் அனுப்பி வைத்தவர். 1983 ஆம் ஆண்டு சுதந்திர தின உரையில் இலங்கையில் திட்டமிட்ட இனப்படுகொலை நடக்கிறது எனக் கண்டித்தவரும் கூட.

இலங்கை இனப்படுகொலையை ஐ.நா மன்றத்துக்கு எடுத்துச் செல்ல வேண்டும் என்ற எம்.ஜி.ஆரின் கோரிக்கையை ஏற்று இந்திராகாந்தி அமெரிக்காவில் ஐந்து நாட்கள் தங்கி, ஐ.நா கூட்டத்திற்கு வந்திருந்த நாடுகளின் பிரதமர்கள், அதிபர்கள், தூதர்கள் அனைவரையும் சந்தித்து இலங்கை தொடர்பான பிரச்சினை தொடர்பாக விளக்கினார். ஐ.நா.சபையின் பொதுச் செயலாளர் பெரஸ் டி கொய்லர் உள்ளிட்ட பல்வேறு நாட்டுத் தலைவர்களுக்கு இலங்கை இனப்பிரச்சினை அப்போதுதான் புரிந்தது. 84 நாட்கள் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபைக் கூட்டத்தில் 70 நாட்கள் பண்ருட்டிராமச்சந்திரன் கலந்து கொண்டு இலங்கை இனப்பிரச்சினைகளை விளக்கினார்.

இவற்றையெல்லாம் கூறுவதன் நோக்கம் கந்த காலத்தில் நடந்த பல நம்பிக்கை தரத்தக்க சம்பவங்கள் வெறும் சம்பவங்களாவே நகர்ந்து போனதை ஞாபகம் கொள்வதற்கே.

இன்று மீண்டுமொரு நம்பிக்கை துளிர்த்திருக்கிறது. ஐ.நா. மனித உரிமை ஆணையர் நவநீதம்பிள்ளையும் அமெரிக்காவும் பொறுப்புக் கூறுவதற்கு இலங்கை அரசாங்கம் அர்த்தமுள்ள நடவடிக்கைகள் எடுக்காது போனால் அனைத்துலக விசாரணைக்கு வலியுறுத்தப்படும் என்று எச்சரிக்கின்றனர்.

மனித உரிமைகளைப் பாதுகாப்பது தொடர்பாக, ஒத்துழைப்பு வழங்கும் ஐ.நா மனித உரிமை ஆணையம் மற்றும் நாடுகளை அமெரிக்கா பாராட்டுகிறது. மூன்று மாகாணங்களுக்கான தேர்தல் வெற்றிகரமாக நடந்துள்ளதற்கு இலங்கை தமிழ் மக்களுக்கு அமெரிக்காவின் வாழ்த்துக்கள் பரிமாறப்படுகின்றது.

மாகாணசபைகளுடன் ஆக்கபூர்வமான முறையில் இணைந்து செயற்படுமாறும் அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்ளும் கடப்பாட்டை நிறைவேற்றுமாறும் இலங்கை அரசாங்கத்தை அமெரிக்கா கேட்டுக் கொள்கிறது. கருத்துவேறுபாட்டு சுதந்திரம் தொடர்பான கட்டுப்பாடுகள், மனித உரிமை ஆர்வலர்கள், ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்கள், நீதித்துறைத் தலையீடுகள் குறித்து மனித உரிமை ஆணையரின் கவலைகளை சர்வதேசமும் பிரதிபலிக்கிறது.

சிறுபான்மையினருக்கு எதிரான வன்முறைகள் மற்றும் பாகுபாடுகள் குறித்தும் மனித உரிமை மற்றும் சட்டமீறல்களை புரிவோர் தண்டிக்கப்படுவதில் இருந்து தப்பித்தல், அமைதியாக ஒன்றுகூடுவதற்கான கட்டுப்பாடுகள், பொறுப்புக்கூறுவதில் முன்னேற்றமின்மை, அனைத்துலக விசாரணையை வலியுறுத்தும் என்ற எச்சரிக்கை விடுக்கப்படுகிறது. பொறுப்புக்கூறவும் மனித உரிமைகள் குறித்த கடப்பாட்டை நிறைவேற்றவும் இலங்கை முன்வரவேண்டும என்று கனேடிய வெளிவிவகார அமைச்சர் ஜோன் பாயர்ட் சத்தமாகவும் தெளிவாகவும் அழைப்பு விடுகின்றார்.

இவையெல்லாம் தமிழர்களின் விடிவுக்கான சமிக்ஞைகளாக, நம்பிக்கை ஒளிக்கீற்றுகளாக கொண்டாடப்படுகின்றன. ஆனால், அன்று முதல்இன்றுவரைஉலகின்அக்கறை என்பது மனித உரிமைகள், போர்க் குற்றங்கள், தேர்தல்கள்பற்றியனவே அன்று தமிழர்களுக்கான தீர்வைப் பற்றியபேசுவனஅல்ல. தமிழர்களுக்காகதிறந்துள்ளசர்வதேசத்தின்இராஜதந்திர நுழைவாயில்கள் மனிதாபிமான நெருக்கடிகளை முறையிடுவதற்கும் 13-வது திருத்தத்திற்குள் நுழைவதற்குமான அளவிற்கேவிசாலமானவை அதைத் தாண்டி அரசியல் அபிலாசைகள், அரசியலுரிமைக் கோரிக்கைகள் எழும்போது இந்தக் கதவுகள் இறுக மூடிக்கொண்டதே கடந்தகால வரலாறு.

எமது விடுதலைப்போராட்டத்தை அழிக்க வேண்டும். தனிநாடு என்ற பேச்சே இருக்கக்கூடாது என்பதே மேற்குலகினமதும் இந்தியாவினதும் நிலைப்பாடு. இதற்கு ஈடாக 13-வது திருத்தச்சட்டத்தை தமிழ் மக்களின் அரசியல் தீர்வாகத் திணித்துவிட வேண்டும் என்ற நிலைப்பாடே அவர்களிடம் இருந்தது. உண்மையான அதிகாரப் பகிர்வு நடக்க வேண்டுமென்றால் 13-வது அரசியல் சாசனத் திருத்தத்தில் இருந்து தொடங்க முடியாது என்பது வெட்ட வெளிச்சம். இதைப் புரிந்திருந்த காரணத்தினால்தான் இத்திருத்தம் வந்த உடனேயே தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் தலைமைப் பொறுப்பில் இருந்த அமிர்தலிங்கம், சிவசிதம்பரம் மற்றும் சம்பந்தன் ஆகிய மூவரும் 28, அக்டோபர் 1987 திகதியிட்டு இந்தியப்பிரதமர்ராஜீவ் காந்திக்கு அவசரக் கடிதம் ஒன்றை எழுதி இதன் குறைபாடுகளை நுணுக்கமாகவும் விரிவாகவும் எடுத்துக்காட்டி அதை நிறைவேற்றுவதை நிறுத்தி வைக்குமாறு ஜெயவர்த்தனா அரசை கேட்டுக் கொள்ளுமாறு ராஜீவ் காந்தியை வலிறுத்தியிருந்தனர. அப்போதிருந்த 13-வது திருத்தச்சட்டம் கழுதை என்றால் இன்று அது கட்டெறும்பு. ஆனால், இன்றோ இத்திருத்தத்தை விட்டால் வேறு வழி ஏதும் இல்லை என்ற அளவிற்கு சென்றுள்ளோம் என்பது வேடிக்கை.

இந்த வலியுறுத்தல் மேற்குலகினதும் இந்தியாவினதும் விருப்பமே எமக்கான உலக அங்கீகாரத்தைத் தக்கவைக்கும் என்பதன் அடிப்படையிலான இராஜதந்திர நிலைப்பாடாகவும் இருக்கலாம். ஆனால், கடந்தகாலத்தில் தமிழர்கள் நலவற்று அனுதாபத்திற்குரியவர்களா இருந்த வேளைகளில் தாம் விரும்பிய தீர்வைத் திணிக்கும்போது உலக இராஜதந்திரக்களம் தமிழர்களுக்கு சார்பானதாகவும் தமிழர்கள் மீது அனுதாபம் மிக்கதாகவும் இருந்தது என்பதும் தமிழர்கள் பேரம் பேசும் வல்லமை கொண்டவர்களாக பலம் பெற்ற வேளைகளில் தமிழர்களின் அரசியல் அபிலாசைகள் சார்ந்து, தமிழர்களுக்கு எதிரானதாகவே இருந்தது என்பது கடந்த பத்தாண்டுகளிலும் நிரூபிக்கப்பட்டது. இது புரிந்துகொள்ளப்படுதல் இராஜதந்திர யுத்தகளத்தில் நிற்கும் தளபதிகளுக்குப் பழைய களங்களுக்கு திரும்பாதிருக்கவும் புதிய பாதைகளைக் காட்டவும் உதவும். இராஜதந்திரப் போர் தமிழர்களுக்குப் புதிதல்லவே.

**குளோபல் தமிழ் இணையம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசாரணை ஆணைக்குழுவுக்கு இதுவரை 60 முறைப்பாடுகள்

(கொழும்பு)

**வடக்கு, கிழக்கில் காணாமற் போனவர்கள் தொடர்பாக கண்டறிய ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டுள்ள விசாரணை ஆணைக்குழு தற்பொழுது முறைப்பாடுகளைப் பெற்று வருகின்றது. இந்நிலையில் விசாரணை ஆணைக்குழுவுக்கு நேற்று முன்தினம் வரை 60 இற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைத்துள்ளதென அதன் தலைவர் மெக்ஸ்வல் பரணகம தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

காணாமற் போனவர்கள் தொடர்பில் கண்டறிந்து அது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்க இலங்கையில் சட்டக்கட்டமைப்பு இருக்கின்றது. அதற்கான சட்டத்தை அமுல்படுத்த திணைக்களமுள்ளது. ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை முன்வைத்துள்ள யோசனைக்கு அமைய காணாமற் போனவர்கள் தொடர்பில் கண்டறிய ஐ.நாவின் விசேட பிரதிநிதிக்கான தேவையில்லை என நினைக்கின்றேன்.

காணாமற் போனவர்கள் உயிருடன் இருக்கின்றனர் என்றால் அதுபற்றி அறிந்து கொள்ளும் தேவை உறவினர்களுக்கு இருக்கின்றது என்பதை நான் அறிவேன். அதனை நிறைவேற்ற நான் கூடியளவான முயற்சிகளை மேற்கொள்வேன்.

காணாமற் போன சம்பவங்களுடன் பாதுகாப்பு தரப்பினருக்கு தொடர்பிருப்பதாக சாட்சியங்கள் முன்வைக்கப்பட்டால் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு சட்டமா அதிபரிடம் கோரிக்கை விடுக்கப்படும்.

அத்துடன் காணாமற் போனவர்கள் பற்றி விசாரித்து அறிந்து அவர்கள் காணாமற் போனமைக்கான காரணம் அதற்கு யார் பொறுப்புக் கூற வேண்டும் என்ற விடயங்களை உள்ளடக்கி உரிய நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் பரிந்துரை செய்யப்படும் என்றார். (அ-2)

# பதவி விலக தயார் தயா கமகே

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளரும் கிழக்கு மாகாண சபை உறுப்பினருமான தயா கமகே தான் தேசிய அமைப்பாளர் பதவியை இராஜினாமா செய்வதற்கு தயார் என்று அறிவித்துள்ளார்.

தமது பதவிக்குரிய ஆள் இருப்பின் தாம் பதவி விலகத் தயார் என்று அவர், கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அறிவித்துள்ளார்.

எவராவது முன்வந்து தமது பதவியை ஏற்று கட்சியின் வளர்ச்சிக்கு உழைப்பார்களாயின் அவர்களைத்தான் வரவேற்பதாக கமகே குறிப்பிட்டுள்ளார்.

கட்சிக்காகதாம்பலஉடைமைகளை இழந்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

# ஏழு வெளிநாட்டு தூதுவர்கள் நியமன கடிதங்களை கையளித்தனர்

இலங்கைக்கான தூதுவர்களாகவும் உயர்ஸ்தானிகர்களாகவும் நியமிக்கப்பட்ட ஏழு வெளிநாட்டு இராஜதந்திரிகள், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் நியமனக் கடிதங்களை கையளித்தனர்.

இந்த வைபவம் நேற்றுமுன்தினம் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

கட்டார் தூதுவராக ரஷீட் பின் ஷஃபிய அல்ஃஹீடா, மியன்மார் தூதுவராக தெயின் சேன், ஐரோப்பிய ஒன்றிய தூதுவராக டேவிட் டெலி, பிரான்ஸ் தூதுவராக ஜின் போல் மொனசாவூ, எகிப்து தூதுவராக ஹிஷாம் மொஹமட் அஸ்ரன், சாம்பியா மக்கள் குடியரசின் உயர்ஸ்தானிகராக பிரிகேடியர் ஜெனரல் (ஓய்வு பெற்ற) பெட்ரிக் ருமேடியா டெம்போ, லேசோதோ நாட்டின் உயர்ஸ்தானிகராக பொதாடோ கிகேனே ஆகியோர் தமது நியமனக் கடிதங்களை ஜனாதிபதியிடம் கையளித்தனர்.

லோசோதோ தென்னாபிரிக்காவிற்கு அருகில் இருக்கும் ஒரு சிறிய மன்னராட்சி நாடாகும். 30 ஆயிரம் சதுர கிலோமீற்றர் பரப்பளவைக் கொண்ட இந்த நாட்டில் இரண்டு மில்லியன் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். நாட்டின் மன்னராக மூன்றாவது லாஸ்சி நாட்டில் ஆட்சி செய்து வருகிறார். (அ-2)

# இலங்கை ஊடகங்கள் அமெரிக்காவின் நிலைமையை புரிந்து கொள்ள வேண்டும்

## அந்நாட்டு தூதரகம் அறிவிப்பு

இலங்கை ஊடகங்கள் அமெரிக்காவின் தற்போதைய நிலைமைகளைபுரிந்து கொள்ளவில்லையா என இலங்கைக்கான அந்நாட்டு தூதரகம் கேள்வி எழுப்பியுள்ளது.

அமெரிக்காவில் அரச நிறுவனங்கள் மூடப்பட்டுள்ள நிலைமை குறித்து, இலங்கை ஊடகங்களில் வெளியாகும் தரவுகள் உண்மை நிலைமையை வெளிப்படுத்தவில்லை என அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் பிரதிப் பேச்சாளர் மேரி ஹார்ப் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அமெரிக்காவில் அரச நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளமையைப் பல நாடுகள் சரியாக விளங்கிக்கொள்ளவில்லை.

அமெரிக்கா எதற்காக குரல் கொடுக்கின்றதோ அதற்கு முரணான வகையில் இலங்கை ஊடகங்கள் தகவல்களை வெளியிட்டு வருகின்றன.

இலங்கையில் குற்றச் செயல்களுக்கு தண்டனை விதிக்கப்பட வேண்டும். நல்லிணக்கம் ஏற்படுத்தப்பட வேண்டும் என்றே பெரும் எண்ணிக்கையிலான காங்கிரஸ் சபை உறுப்பினர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

வோஷிங்டனில் என்ன நடைபெறுகின்றது என்பதனை இலங்கை ஊடகங்கள் அவதானித்து வருகின்றன.

நல்லாட்சி, ஜனநாயகம் பற்றி வலியுறுத்தி வரும் அமெரிக்கா ஊருக்கு உபதேசம் செய்கின்றதே தவிர தான் அக் கொள்கைகளை பின்பற்றுவதில்லை என்ற தொனியில் இலங்கை ஊடகங்கள் செய்தி வெளியிட்டு வருகின்றன.

காங்கிரஸ் சபையுடன் இணைந்து தொடர்ந்தும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் முயற்சியில் அமெரிக்க அரசாங்கம் தீவிரம் காட்டி வருகிறது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ)



மானிப்பாய் மேற்கு இளைஞர் கழகம் மற்றும் யாழ். எய்ட் நிறுவனம் இணைந்து சிறுவிளான் கனகசபை வித்தியாலயத்தில் கல்வி பயிலும் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் மற்றும் புத்தகப் பைகளை அண்மையில் வழங்கியது. இந்நிகழ்வில் பாடசாலை அதிபர், சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் உஷாந்தன், சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் அமைப்பாளர் ஜெபநேசன் ஆகியோர் கலந்து கொண்டு மாணவர்களுக்கான உதவிகளை வழங்கி வைத்தனர். (படம்:- மானிப்பாய் செய்தியாளர்)

# அடுத்த வருடம் முதல் சர்வதேச தரத்திலான கடவுச் சீட்டுக்கள்

இலங்கை கடவுச்சீட்டை சர்வதேச தரத்துக்கு அமைவான புகைப்படத்துடன் அடுத்த வருடம் முதல் வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளர் டபிள்யூ.ஏ.சூலானந்த பெரேரா தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில் அடுத்த வருடம் முதல் கடவுச்சீட்டுக்கான புகைப்படங்கள் இலங்கை குடிவரவு குடியகல்வுதிணைக்களத்தில்பதிவுசெய்யப்பட்ட புகைப்படப்பிடிப்பு நிலையங்களில் மட்டுமேஎடுக்கமுடியும்என்றும்அவர்கூறியுள்ளார்.

புகைப்பட நிலையங்களைப் பதிவு செய்யும் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் எதிர்வரும் 15 ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும் என அவர் குறிப்பிட்டார்.

மேலதிக தகவல்களை அறிந்து கொள்ள 0115 731028 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# இந்திய மருந்து நிறுவனங்களின் தடையை நீக்கியது இலங்கை

(கொழும்பு)

தரம் குறைந்த மருந்துகளை இறக்குமதி செய்த நான்கு இந்திய நிறுவனங்களுக்கு விதிக்கப்பட்டிருந்த தற்காலிக தடையை சுகாதார அமைச்சு நீக்கியுள்ளதென ஔடத கட்டுப்பாட்டு அதிகார சபையின் தலைவர் டாக்டர் பெனரகம தெரிவித்துள்ளார்.

இருப்பினும் குறித்த நான்கு கம்பனிகளிலிருந்தும் இறக்குமதி செய்யப்படும் தரம் குறைந்தவை என உறுதிப்படுத்தப்பட்ட ஆறு வகை மருந்துகளுக்கான தடை தொடர்ந்தும் நீடிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

தற்காலிகத் தடை விதிக்கப்பட்டிருந்த இந்திய நிறுவனங்களான லெபொரேட் பாமா, விவேக் பாமா, பவ்னா பாமா மற்றும் எல்.சி. ஓ.எம். ஆகியவற்றிலிருந்து 122 வகையான மருந்துகள் இறக்குமதி செய்யப்படுகின்றன. இவற்றில் 6 வகையான மருந்துகளே தரம் குறைவானதாக இனம் காணப்பட்டன.

அதனைத் தொடர்ந்து சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன குறித்த 6 வகை மருந்துகளுக்கும் முற்றாக தடை விதித்ததுடன் நிறுவனங்களின் ஏனைய மருந்துகளுக்கும் தற்காலிக தடையை விதித்தார்.

அநேகமான உயிர் காப்பு மருந்துகளையும் இந்நிறுவனங்களிடமிருந்தே நாம் முன்னர் பெற்றுக் கொண்டிருந்தோம்.

விதிக்கப்பட்ட தற்காலிக தடை காரணமாக உயிர் காப்பு மருந்துகளில் தட்டுப்பாடு ஏற்படத் தொடங்கியதையடுத்து நோயாளிகளின் நலன் கருதி தற்காலிகத் தடையை நீக்குவதற்கு அமைச்சு தீர்மானித்துள்ளதெனவும் அவர் தெரிவித்தார். (அ-2)

# மீட்கப்பட்ட வாக்குச்சீட்டுக்களை மீள எண்ணுமாறு உத்தரவு

புத்தளம் மாவட்டத்தில் மீட்கப்பட்ட வாக்குச் சீட்டுக்களை மீள எண்ணுமாறு மாவட்ட நீதவான் ரங்க திஸாநாயக்க நேற்று முன்தினம் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

தேர்தல் நடைபெற்று முடிந்ததன் பின்னர் புத்தளம் புனித அன்ட்றூஸ் கல்லூரியில் வாக்குச் சீட்டுக்கள் மீட்கப்பட்டிருந்தன.

அனைத்து வேட்பாளர்களின் எதிரிலும் இந்த வாக்குச் சீட்டுக்கள் மீள எண்ணப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

புத்தளம் சென் அன்ட்றூஸ் கல்லூரி வாக்களிப்பு நிலையத்திலிருந்து கடந்த 24 ஆம் திகதி மீட்கப்பட்ட வாக்குச் சீட்டுக்கள் அடங்கிய பொதிகள் இரண்டையும் எண்ணுமாறு தேர்தல் அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வே.வே.அகிலேஸ்வரன், மருதங்கேணி

அன்பின் வியாசரே!

அடிக்கடி கனவில் ஏதாவது கண்டால் நியத்தில் நடக்குமா?

அப்படி நடக்கும் என்று இருந்தால் அது முதலில் எனக்குப் பலிக்கட்டும். நான் கண்ட கனவுகள் எண்ணிலடங்கா... சொல்ல முடியா... என்ன வயது தான் கொஞ்சம் போய்விட்டது...

எஸ்.சுதன், மீசாலை

சாதி, மதம் பார்க்காமல் காதலித்தோம். பெற்றோர் சம்மதம் பெற என்ன செய்ய வேண்டும்? நாம் ஒன்று சேர வேண்டும். ஆனால் பெற்றோர் சம்மதமும் வேண்டும்?

பெற்றோரின் சம்மதம் கேட்க நினைப்பது நல்ல விடயம். அவர்கள் சம்மதம் தரவில்லையாயின்? பெற்றோரின் மனங்களை காயப்படுத்திவிட்டு யாருமே நன்றாக வாழ்ந்துவிட முடியாது என்பதை புரிந்து கொண்டால் சரி.

அன்பு வாசகர்களே....!

உங்கள் கேள்விகளை

ஆசிரியர், வியாசர் பதில்கள்

இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி , யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்

கணபதிதாசன், கட்டைக்காடு

கெட்டவர் இருக்கும்வரை நல்லவர் வாழ்வது அரிது என்பர் உமது கருத்து!

உண்மைதான். இராமன் காடு சென்றதும் பாண்டவர் நாடிழந்ததும் அதைத் தான் உணர்த்துகின்றது. ஆனால் இறுதியில் தர்மம்தான் வெல்லும்.

கீரைக் கடைக்கும் எதிர்க்கடை வேண்டும் என்று சொல்ல என்ன காரணம்?




ச.புவித்ரா, சாவகச்சேரி

அன்பின் வியாசரே!

இலங்கைக்கு வரும் வெளிநாட்டவர்கள் ஆடம்பரமாக திரிகின்றார்கள் அது ஏன் அப்படி? எல்லோரும் ஒரே போலதானே உழைக்கின்றோம். ஆனால் அவர்களுக்கும் எங்களுக்கும் வித்தியாசம் இருக்கின்றது. அதற்கான காரணம் என்ன?

கட்டவும் அவிழ்க்கவும் அவர்களின் கலாசாரம் ஒத்துப் போகின்றது. எங்களுக்கு அப்படியா, கட்டினால் அவிழ்க்க முடியாதே...! அதுதான் மூன்று முடிச்சு போடச் சொல்கிறார்கள் போல...

நீங்கள் முதலமைச்சர் ஆனால்?

கே.எஸ்.சிவஞானராசா, கொக்குவில்

நீங்கள் முதலமைச்சர் ஆனால்?

ஐயா அதற்கு தகுதியானவர் நம் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் ஐயா மட்டும் தான். 132255 விருப்பு வாக்குகளைப் பெற்று இமையமாய் நிற்கும் அவருடன் நம்மையெல்லாம்...

எஸ்.விஜிதபாமா, கோண்டாவில்

அன்பின் வியாசரே!

கையடக்க தொலைபேசியால் பெரும் இழுப்புக்களை இழுக்கின்றார்ளே ஏன்?

வீதியில் வைத்து சுண்டல் விற்பது போல சிம்காட்டுகளை விற்றால் இழுப்புக்கள் தொடர்ந்து இழப்புக்கள் ஆகிவிடும்.

கொஞ்சம் சிரிங்கப்பா...



"அந்த வீட்டில் திருடப் போனது தப்பாப் போச்சு."

"என்னாச்சு?"

"ரெண்டு குழந்தைகளை ஸ்கூலில் சேர்த்துட்டு செலவுக்குக்கூட காசில்லாமல் திண்டாடிக்கிட்டிருந்தாங்க; என்னிடமே ஆயிரம் ரூபாய் கடன் வாங்கிட்டாங்க !"

விநேஸ்வரன், உரும்பிராய்

கீரைக் கடைக்கும் எதிர்க்கடை வேண்டும் என்று சொல்ல என்ன காரணம்? இதை வேறு கடைக்கோ அல்லது வேறு பொருளுக்கோ ஒப்பிட்டு இருக்கலாமே? தயவு செய்து பதில் தரவும்.

கீரைக் கடைக்கென்று தனிக்கடை இல்லையே அதனால்தான். நீர் கேட்டது போல துப்பாக்கி கடைக்கும் எதிர்க்கடை வேண்டும் என்று சொன்னால் நிலை என்ன? விற்பனை நடக்காது கொலை தான் நடக்கும்.

சு.ஜெயரூபன், பருத்தித்துறை

அன்பின் வியாசரே!

கடவுளே இல்லையென வாதாடும் நாஸ்திகவாதிகளைப் பற்றி தாங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

கடவுள் இல்லையென்று வாதாடி விட்டு செல்லும்போது *கடவுளே என்னை மன்னித்துவிடு* என்று கடவுளிடத்தே கேட்டுவிட்டுத்தான் செல்வார்கள். ஏனென்றால் நானும் முன்னைநாள் நாஸ்திகன். என் அனுபவமும் கூட.

## சிவசக்தி ச.ச.நிலைய 21 ஆவது ஆண்டுவிழா

சிவசக்தி சனசமூக நிலையத்தின் 21ஆவது ஆண்டு நிறைவு விழாவும் பரிசளிப்பு நிகழ்வும் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இந்நிலையத்தில் நிலையத் தலைவர் ஜ.சிவராசா தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வலி. கிழக்கு கோப்பாய் இணைப்பாளர் இ.ஐங்கரன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக நீர்வேலி வடக்கு ஜே/269 கிராம சேவையாளர் திருமதி எஸ்.பிறைசிலா, நீர்வேலி வலி.கிழக்கு பிரதேச சபை உப அலுவலகப் பொறுப்பதிகாரி தி.தவராசா, நீர்வேலி வடக்கு சமுர்த்தி உத்தியோகத்தர் ப. சேவற்கொடியோன், அச்சுவேலி யா/ இடைக்காடு மகாவித்தியாலய ஆசிரியர் ம.இரங்கநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

அன்றைய தினம் இரவு நிகழ்வாக அன்று முதல் தமிழர்களுடைய கலாசாரத்தை இன்று வரை பேணிக்காத்து வருபவர்கள் ஆண்களா, பெண்களா என்ற தலைப்பில் பட்டிமன்றம் இடம்பெறும். அத்துடன் இசைக்குழுவினரின் இன்னிசை கானங்கள் நடைபெறும். (அ-2)

### பொதுநலவாய அமர்வு குறித்து

# உலக தமிழர் பேரவை மகாராணிக்கு கடிதம்

(கொழும்பு)

இலங்கையில் பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டை நடத்துவதிலுள்ள அவதானம் குறித்து பிரித்தானியாவின் உலக தமிழர் பேரவை பிரித்தானிய மகாராணி எலிசபெத்தின் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளது.

உலகத் தமிழர் பேரவையின் தலைவர் வணக்கத்துக்குரிய இமானுவேல் மகாராணிக்கு கடிதம் மூலம் இந்த அவதானத்தை சுட்டிக் காட்டியுள்ளார்.

அக் கடிதத்தில் அவர் சுட்டிக்காட்டியுள்ள விடயங்கள் வருமாறு,

இலங்கையில் பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டை நடத்துவதன் காரணமாக அந்த அமைப்பின் கொள்கைகளுக்கு பாதிப்பு ஏற்படும்.

இவ்வாண்டின் குறித்த அமர்வை கொழும்பில் நடத்துவதன் மூலம் புதிதாக அந்த அமைப்புக்காக அறிமுகப்படுத்தப்பட்ட பிரகடனம் கேள்விக்குரியதாகியுள்ளது.

அத்துடன் இலங்கைக்கு பொதுநலவாய தலைமைத்துவம் அடுத்த இரண்டு வருடங்களுக்கு செல்லுமானால் அது பொதுநலவாயத்தின் பெயருக்கு பாதிப்பை எற்படுத்தும்.

1948 ஆம் ஆண்டு பிரித்தானியாவிடம் இருந்து இலங்கை சுதந்திரம் பெற்ற பின்னர் தமிழர்களுக்கு நியாயங்கள் மறுக்கப்பட்டுள்ளன.

புறக்கணிப்புக்களும் குடியேற்றங்களும் தொடர்கின்றன.

அத்துடன் போர்க்குற்றங்கள் தொடர்பில் உரிய விசாரணைகள் நடத்தப்படவில்லை என அவர் அதில் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

## அம்பிகை அமுதங்கள் நூல் வெளியீடு

நியூ உதயா ஜுவலர்சின் அனுசரணையுடன் இன்னிசைச் சொற்பொழிவாளர், சக்தி உபாசகர் கவிமணி அன்னைதாசனால் தொகுக்கப்பட்ட சகல கலாவல்லி பாமாலையுடனான நவராத்திரி காலங்களுக்குரிய அம்பிகை அமுதங்கள் எனும் பாடல்கள் அடங்கிய புத்தகம் நாளை திங்கட்கிழமை வெளியிடப்படவுள்ளது.

இதனை இலவசமாகப் பெற விரும்பும் பாடசாலைகள், ஆலயங்கள் என்பன 077 0333396 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

## பட்டிமன்ற போட்டி

மாணவரினது பேச்சு, விவாத ஆற்றலை அரங்கேற்ற அமரர் கணபதி இராஜதுரை ஞாபகார்த்த பட்டிமன்ற சமர் போட்டியை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் எதிர்வரும் 10 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு மாவட்ட மட்டப் போட்டியாக நிகழ்த்தவுள்ளது.

இப் போட்டிகளில் வெற்றியீட்டும் மாணவர்களுக்கு சான்றிதழ், நினைவுக் கேடயம் என்பன வழங்கப்படவுள்ளன. (அ-5)

# வடக்கு மாகாண சபை இயங்க தொடங்கியதும் காணி அதிகாரத்தை கூட்டமைப்பு கோரும்

## தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

வடமாகாணசபை இயங்கத் தொடங்கியவுடன் காணி அதிகாரம் தொடர்பில் உயர் நீதிமன்றத்தில் வியாக்கியானத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரி நிற்கும் என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் பொதுச் செயலாளர் டாக்டர் வசந்த பண்டார தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதியை சம்பந்தன் சந்தித்து பேசுவது நல்லது. ஆனால், பிரிவினைவாத கோரிக்கையை கைவிட வேண்டியது கட்டாயமானது.

இலங்கை அரசியலமைப்பில் 13 ஆவது திருத்தத்தில் மாகாண சபைகளுக்கு காணி அதிகாரங்கள் 33 (ழ) பிரிவின் கீழ் வழங்கப் பட்டுள்ளன.

ஆனால், மாகாண சபைகளால் விவசாயம் மற்றும் அடிப்படை வசதிகள், உட்கட்டமைப்பு அபிவிருத்திகளுக்காக குத்தகைக்கு காணிகளை வழங்க முடியும்.

அதுவும் தற்காலிகமான அடிப்படையிலேயே அதனை மேற்கொள்ள முடியும். அதேவேளை, காணிகளை வேறொருவருக்கு சொந்தமாக வழங்கும் அதிகாரம் மாகாண சபைக்கு கிடையாது. அந்த அதிகாரம் மத்திய அரசாங்கத்திற்கு மட்டுமே உள்ளது.

இதற்கான தீர்ப்பையே அண்மையில் உயர் நீதிமன்றம் வழங்கியது. இவ்வாறானதோர் நிலையில் வடமாகாண சபை இயங்க ஆரம்பித்ததும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு, அபிவிருத்திகளை மேற்கொள்வதற்காக காணிகள் தொடர்பில் மாகாண சபைகளுக்குள்ள அதிகாரங்களைக் கோரியும் அதற்காக உயர் நீதிமன்றத்தின் வியாக்கியானத்தையும் கோரி நிற்பது உறுதியாகும்.

**இந்தியா**

கூட்டமைப்பின் இம்முயற்சிக்கு இந்தியா பூரண ஆதரவை வழங்கும். எப்படியாவது 13 ஆவது திருத்தத்தில் எதுவிதமான மாற்றத்தையும் ஏற்படுத்தாது முழுமையாக அமுல்படுத்துவதே இந்தியாவின் திட்டமாகும்.

**குர்ஷித்**

இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் இலங்கைக்கு விஜயம் செய்வது வடமாகாண சபையுடன் அரசாங்கம் ஒத்துழைப்புடன் செயற்பட வேண்டுமென்பதை வற்புறுத்துவதற்கேயாகும்.

அத்தோடு வடமாகாணத்தின் அபிவிருத்திகளில் இந்தியாவின் நேரடித் தலையீடுகளும் இவ்விஜயத்தின் பின்னர் அதிகரிக்கும்.


**சம்பந்தன்**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இலங்கையின் அரசியல் கட்சியாகும். எனவே, சம்பந்தன் ஜனாதிபதியை சந்தித்து பேச்சுவார்த்தைகளை நடத்துவதில் எவ்விதமான பிரச்சினையும் இல்லை.

ஆனால், சம்பந்தன் பிரிவினைவாதத்தைக் கைவிட வேண்டும். மத்திய அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட வேண்டும் என்றார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் தமிழுக்கு வருகிறார் ஸ்ருதி?




ஏழாம் அறிவு, 3 ஆகிய படங்களுக்கு பின் ஸ்ருதி ஹாசனுக்கு தமிழில் வாய்ப்புகள் கிடைக்கவில்லை. ஆந்திரா பக்கம் போன அவருக்கு சிவப்பு கம்பள வரவேற்பு கொடுத்தனர் தெலுங்கு ரசிகர்கள். இதனால் தமிழில் நடிப்பதை தவிர்த்தார். பின் பாலிவுட்டிலும் அவருக்கு கிராக்கி ஏற்பட்டது.

இதனால் தமிழில் நடிக்க அழைத்தாலும் மற்றைய படவாய்ப்புக்களை காரணத்தை காட்டி மறுத்து வந்தார்.இப்போது ஒரு தெலுங்கு படத்திலும் மூன்று இந்தி படங்களிலும் நடித்து வருகிறார். இந்நிலையில் பிரபல தமிழ் இயக்குநர் ஒருவர் தன்னிடம் வித்தியாசமான கதை இருப்பதாக கூறி, அதில் நடிக்க முடியுமா என ஸ்ருதியை அணுகியுள்ளாராம்.

கதை, ரொம்பவே வித்தியாசமாக இருந்ததால் கண்டிப்பாக நடிக்கிறேன் என உறுதி அளித்து இயக்குனரை மகிழ்ச்சி கடலில் ஆழ்த்தினாராம் ஸ்ருதி.

# புதிய படங்களில் கலக்கும் ஜெய்



சுப்பிரமணியபுரம் படத்தின் வெற்றிக்குப் பின் பல படங்களில் நடித்தார் ஜெய். அதில் எங்கேயும் எப்போதும் படம் மட்டுமே அவரை பேச வைத்தது. அதையடுத்து இப்போது ராஜாராணியில் அவரது வித்தியாசமான நடிப்பு பேசப்பட்டு வருகிறது.

அதோடு, திருமணம் என்னும் நிக்கா, நவீன சரஸ்வதி சபதம், தமிழ்ச்செல்வனும் தனியார் அஞ்சலும் போன்ற சில பேசப்படும் படங்களில் நடித்துக் கொண்டிருக்கிறார். இருப்பினும் எல்லா படத்திலும் ஹீரோவாகத் தான் நடிப்பேன் என்றில்லை. நல்லதாக இருந்தால் சிறிய பாத்திரத்திலும் நடிப்பேன் என்கிறார் ஜெய்.

இதுபற்றி அவர் கூறுகையில், வெங்கட் பிரபு இயக்கிய மங்காத்தா படத்தில் நான்கு பேரில் நானும் ஒரு இயக்குநராக நடிக்க பேசியிருந்தேன். ஆனால் அந்த கதையில் அஜித் நடிப்பதாக உறுதியான பின்பு, அர்ஜூன் நடித்தால்தான் சரியாக இருக்கும் என்று இயக்குநர் முடிவெடுத்தார். இருப்பினும் இன்னொரு வேடத்தில் நடிக்க விரும்பினேன். அதற்கு அது சிறிய வேடம், வேண்டாமென்று கூறி விட்டார் இயக்குநர்.


என்னைப்பொறுத்தவரை படத்துக்குப் படம் ஒரே மாதிரியாக இல்லாமல் வித்தியாசமான கதாபாத்திரங்களை தேடுகிறேன். எங்கேயும் எப்போதும், ராஜாராணியில் ரசிகர்களுக்கு பிடித்த ஜெய்யாக நடித்தது போல் இனி படத்துக்குப்படம் ரசிகர்களுக்கு பிடித்தமான ஜெய்யாக நடிக்க ஆசைப்படுகிறேன் என்கிறார்.

# பாண்டியநாடு படத்தில் ஆசிரியை வேடத்தில் லக்சுமி மேனன்

பாண்டிய நாடு படத்தில் ஆசிரியை கதாபாத்திரத்தில் நடிப்பதால் குஷியில் இருக்கிறாராம் லக்சுமி மேனன்.

கேரளாவில் 9ம் வகுப்பு படித்துக் கொண்டிருந்த போது கும்கி படத்தில் நடிக்க ஒப்பந்தமானவர் லக்சுமி மேனன்.

அதனைத் தொடர்ந்து சுந்தர பாண்டியன் மற்றும் குட்டிப்புலி படங்களில் நடித்தபோது 10ஆம் வகுப்பு படித்த அவர் இப்போது பிளஸ் 1 படிக்கிறார்.



விஷாலுடன் நடிக்கும் பாண்டிய நாடு படத்தில் அவருக்கு பள்ளி ஆசிரியை வேடமாம்.


இதுகுறித்து லக்சுமி மேனன் கூறுகையில், பாடசாலை மாணவியான எனக்கு ஆசிரியை வேடம் கிடைத்தது ரொம்ப சந்தோஷமாக உள்ளது.

என் உடல் வளர்ச்சி, மெச்சூரிட்டியை மனதில் வைத்து என்னை நம்பி இந்த வேடத்தை கொடுத்துள்ளனர்.

அதனால் எனக்கு படிப்பு சொல்லித் தரும் சில ஆசிரியைகளை ரோல் மாடலாக எடுத்துக் கொண்டு இந்த வேடத்தில் நடித்து வருகிறேன்.

நிஜமாகவே ஆசிரியை வேடத்தில் நடிப்பது பெருமையாகவும், மனசுக்கு நிறைவாகவும் உள்ளது என்கிறார் லக்சுமி மேனன்

# பல்கேரியாவுக்குச் செல்லும் ஜில்லா படக்குழு



விஜய் மற்றும் காஜல் அகர்வால் நடிப்பில் நேசன் இயக்கி வரும் திரைப்படம் ஜில்லா. இந்தப்படத்தின் க்ளைமாக்ஸ் சண்டைக்காட்சி ஐதராபாத்தில் தான் படமாக்கப்பட்டு வருகிறது. இதற்காக அதிக எண்ணிக்கையிலான கமராக்களை பயன்படுத்தி இந்த சண்டைக் காட்சியை படமாக்கி வருகிறார் இயக்குநர் நேசன். பொதுவாக ஷங்கரின் படங்களில் தான் இத்தனை கமராக்களை ஒரே நேரத்தில், ஒரே காட்சியை பலவிதமான கோணங்களில் எடுக்க பயன்படுத்துவார்கள்.

அதேமுறையை இப்போது ஜில்லா படத்திலும் கையாளுகிறார் நேசன். மேலும் இந்த சண்டைக்காட்சிக்காக மிக பிரமாண்டமான மரத்தாலான செட் ஒன்றையும் அமைத்து அதில் விஜய்யும் வில்லன்களும் மோதும் காட்சியை படமாக்குகிறார்கள்.

ஹைதராபாத் ஷெட்யூல் முடிந்ததும் அடுத்து பாடல் காட்சிக்காக பல்கேரியா நாட்டுக்கு பறக்கிறது ஜில்லா படக்குழு.

# இந்தியில் ரீமேக் ஆகிறது ராஜா ராணி

தமிழில் வெற்றிபெற்ற ராஜா ராணியை இந்தியில் ரீமேக் செய்கிறார் ஏ.ஆர். முருகதாஸ்.

அட்லீ இயக்கத்தில் வெளியான ராஜா ராணி திரைப்படம் உலகெங்கும் வெற்றிகரமாக ஓடிக் கொண்டுள்ளது. இதில் ஆர்யா, நயன்தாரா, ஜெய், நஸ்ரியா, சத்யராஜ் நடித்துள்ளனர்.


கிட்டத்தட்ட இந்திப் பட உலகுக்கேற்ற மஸ்ர ஸ்டார் படம் இது. மேக்கிங் ஸ்டைலும் கிட்டத்தட்ட அதே மாதிரிதான்.

ராஜா ராணி வெளியானவுடனே இந்தப் படம் பாலிவுட்டில் ரீமேக் ஆவது உறுதி என்றுதான் திரையுலகில் பேசப்பட்டது.

அதை உண்மையாக்கும் விதத்தில் இப்போது இந்தப் படத்தை இந்தியில் ரீமேக் செய்கிறார்கள். இதனை அட்லி உறுதி செய்துள்ளார். இந்தியில் இப்படத்துக்கு 'கிங்அன்ட் குயீன்' என பெயர் வைக்க முடிவாகியுள்ளது.

ராஜா ராணி என்பதன் நேரடி ஆங்கில சொற்களையே தலைப்பாக்கியுள்ளனர்.

ஆர்யா கதாபாத்திரத்தில் ரன்பீர் கபூரும் நயன்தாரா வேடத்தில் தீபிகா படுகோனேயும் நடிக்கின்றனர். ஏ.ஆர்.முருகதாஸ் இப் படத்தை இயக்குவார் என தெரிகிறது. தற் போது படப்பிடிப்பு முடிந்து கிங்அண்ட் குயீன் தொடருமாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆற்றலும் ஆளுமையும் மிக்க மனிதனை ஆசிரியராலேயே உருவாக்க முடியும்

கல்வி என்பது இயற்கையுடன் இணைந்த மனிதனின் ஒன்றிணைந்த செயற்பாடுகளினூடாக உருவான ஒரு அமைப்பெனப்படுகின்றது. இதன் அடிப்படையில் ஒரு நாட்டின் நலன்களை அடையத் தேவைப்படும் சமூக பொருளாதார மற்றும் பண்பாடு தொடர்புடைய மாற்றங்களை உருவாக்கும் வலுவான காரணியாகக் கல்வியைக் கூறலாம்.

ஒரு தனிமனிதனின் வாழ்க்கையையும் அதனூடாக சமூக மேம்பாடுகளையும் திறன்களையும் வளர்ப்பதே கல்வியின் இலக்காக உள்ளது. கல்வியின் நோக்கங்கள் பலவாகினும் இறுதி இலக்கு தனிமனித ஆளுமையை விருத்தி செய்வதே. இதன் அடிப்படையில் இன்றும் கல்வியின் பால் மாணவர்களை வழிப்படுத்தும் பாரிய பணி ஆசிரியருடையதாகவே காணப்படுகின்றது.

தனிமனிதனுக்கு வழங்கப்படும் கல்வி மூலம் புதிய புதிய சவால்களுக்கு முகம் கொடுக்கக்கூடிய ஆற்றலும் ஆளுமையும் மிக்கவர்களை உருவாக்கமுடியும். இத்தகைய பாரிய பணியைச் செய்பவர்கள் ஆசிரியர்களே. இவர்களே பண்டைய காலம் முதற்கொண்டு இன்றுவரை குரு என்றும் ஆசான் என்றும் ஆசிரியர் என்றும் போற்றுகின்றனர். ஆசிரியம் என்பது பொதுவாக குற்றம் களைபவர் என்ற கருத்தில் கொள்ளப்படுகின்றது.

பண்டைக்கால கல்வி முறையான குருகுலக்கல்விமுறை வழக்கிலிருந்த காலம் முதலே குருவைத் தெய்வமாகவும் அன்னை யாகவும் தந்தையாகவும் போற்றி வழிபடும் மரபும் இருந்தது. அன்றைய மாணவனுக்கும் குருவுக்குமிடையான உறவு மிக நெருக்கமாக இருந்தது. இதன் அடிப்படையில் மிகவும் வலுவுள்ள ஒரு காரணகர்த்தாவாக ஆசிரியர் விளங்குகின்றார் என்றால் அது மிகையாகாது.

இவ்வாறான மதிப்பிற்குரிய ஆசிரியரின் நடத்தைக் கோலங்களைப் பின்பற்றும் மாணவர் சமூகம் அவரைப்போல் ஆக வேண்டும் என்று மனந்திருந்தி தம் வாழ்வை ஒருங்கமைத்த பிள்ளைகளும் நம் மத்தியில் உள்ளனர்.

பொதுவாக மாணவனின் ஆற்றலுக்கேற்ப அறிவை வழங்குதலும் சமூக விழுமியங்களை பேணிக்காப்பதோடு இன்றைய நவீன உலகில் ஆசிரியர் என்போர் மாணவர்களின் கற்றல் தொடர்பான மனப்பாங்குகளை விருத்தி செய்யும் முகவராகவும் தொழிற்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. கல்வியின் முன்னேற்றம் என்பது ஆசிரியர்களின் தகுதி, திறன் , அர்ப்பணிப்பு அவர்களின் நிபுணத்துவம், தொழில்நுட்ப திறன் முதலான மனிதப் பண்புகளில் தங்கி இருப்பதாக ஆசிரியர்களின் நிலைமை பற்றிய (1995) யுனெஸ்கோ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதும் இங்கு மனங்கொள்ளத்தக்கது. ஏறக்குறைய ஆறு மணித்தியாலங்களுக்கு மேலாக பாடசாலையில் இருக்கும் பிள்ளைகளுடன் வகுப்பறைகளில் கற்பிப்பது மட்டுமன்றி அவர்களது மனச்சுமைகளை இறக்கி வைக்கும் சுமைதாங்கிகளாகவும் ஆசிரியர்கள் மாறவேண்டும். உயிர்த்துடிப்புள்ள மகத்தான நிறுவனமாக விளங்கும். பாடசாலையில் சேவையாற்றும் ஆசிரியர்கள் மாணவர்கள் பற்றிய தூரநோக்கும் தேர்ச்சியும் தெறிப்புச் சிந்தனையும் செயலாற்றுகையும் மிக்கவர்களாக திகழுகையில் மாணவர்கள் தமது கவனத்தை வேறெங்கும் திசை திருப்ப மாட்டார்கள். மேலும் கட்டிளமைப் பருவமென்பது மாணவர்களை பல்வேறு கோணங்களிலும் சிந்திக்க வைப்பதாகும். அதற்கு கடிவாளமிடும் தகுதியுடையவர்கள் இந்த ஆசிரியர்களே.

ஆசிரியர்களுக்கு தனிப்பட்ட முறையில் எவ்வளவோ பிரச்சினைகள், மன அழுத் தங்கள் இருக்கலாம். குடும்பத்தில் ஏற்படும் பிரச்சினைகள் தமது தொழில் பார்க்குமிடத்தைப் பாதிக்காதவகையில்தன்னைப்பக்குவப்படுத்திக் கொள்ள ஆசிரியர்கள் முயற்சிக்க வேண்டும்.

நடை உடை பாவனைகளிலும் இன்றைய ஆசிரியர்கள் தமது கவனத்தைச் செலுத்த வேண்டும்.

ஒரு ஆசிரியர் எப்பொழுதும் மாணவர்களின் சிந்தனையை தூண்டுபவராகவும் மாணவர்களின் கற்கும் முறைகளை நன்கு திட்டமிட்டு செயற்படுத்துபவராகவும் வழி காட்டல்களை மேற்கொள்பவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

இவற்றுக்காக ஆசிரியர்கள் பின்வருமாறு இருக்கவேண்டும் எனச் சமூகம் எதிர்பார்க்கின்றது.

1. மாணவர்களிடம் அன்பாக அரவணைப்புடனும் நடந்தும் ஒதுங்கி இருக்கும் மாணவனைக் கவனித்து செயற்பாட்டில் ஈடுபடுத்தவும் வேண்டும்.

2. தேசிய இலக்குகளையும் தேர்ச்சிகளையும் வகுப்பறை நடத்தை நோக்கங்களாக பாடங்களினூடாக மாற்றக் கூடிய திறமை பெற்றிருத்தல் வேண்டும்.

3.சமூக மனவெழுச்சி ஆட்சியில் நடத்தை மாற்றங்களை மாணவர்களிடத்தே ஏற்படுத்துவதில் ஆசிரியரின் கற்பித்தல் முறைகள், கற்றலில் வழிப்படுத்தும் விதம், அவர் வெளிக்காட்டும் பண்புகள், மனப்பாங்குகள், விழுமியங்கள் முதலானவை அதிக பங்களிப்புச் செய்யும் முக்கிய கருவியாகச் செயற்பட முடியும்.

4.அவ்வப்போது மாணவர்களுக்குப் பரிசுகளைக் கொடுத்து ஊக்குவிப்புச் செய்தல் வேண்டும்.

5. மாணவருடன் நல்ல இடைத் தொடர்பை கற்றலூடாக ஏற்படுத்த முடியும்.

## இன்று சர்வதேச ஆசிரியர் தினம்

6. கண்டறிதல், ஆராய்தல், விளையாட்டு, எளிய பரிசோதனை போன்ற கற்பித்தல் முறைகளையும் மேல்வகுப்பு மாணவர்களுக்கு கற்பிக்கையில் தர்க்கித்தல் நியாயம் காணல், பிரச்சினை தீர்த்தல், செயற்றிட்டம் போன்ற முறைகளையும் பயன்படுத்தி கற்பிப்பதன் ஊடாக மாணவர்களின் கவனத்தை ஈர்க்க முடியும்.

மாண்புறு சேவையான ஆசிரியர் சேவையில் தம்மை மெழுகாக உருக்கி சுடர் விடும் ஒளித் தீபங்களாக மாணவர்களை புடமிடும் ஆசிரியர்களே நல்லாசிரியர்கள். அந்த வகையில் வாழ்நாள் முழுவதும் கற்றலையும் தேடலையும் முன்னெடுத்துச் செல்ல சிறந்த ஆசிரியர் உயிர்ப்பான இழையாக மாறுவதே தற்போதைய காலத்தின் தேவையாகும்.

**திருமதி மீனலோஜினி இதயசிவதாஸ்**
**அதிபர், கிளி/உருத்திரபுரம் ம.வி.**

### வற்றாத நிலாவரைகள்

ஆன்மீக நெறிநின்று
ஆசகற்றும் ஆசான்களே
ஆசிரியத் தெய்வங்களாக
வணங்கப்படுகிறார்கள்
தான் வாழ எண்ணாது
தன்னினம் வாழ வேண்டி
தம்மை
அடையாளப்படுத்தும்
பெட்டகமே ஆசிரியன்
தேனாகும் கல்வியை
மட்டுமல்ல தேசத்திற்கான
தெவிட்டாத வாழ்வினையும்
ஊட்டவல்ல
பேனாவைத் தானாக
ஊற்றெடுத்து உயிர்பெற
பொறுப்பாகும் பேராசானே
நல்லாசிரியன் ஆவான்.

**கே.எஸ். சிவஞானராஜா,**
**கொக்குவில்.**

### அன்புள்ள ஆசானுக்கு

“அ” என்ற சொல்லெடுத்து
அறிவென்ற பொக்கிஷத்தை
அன்போடு போதித்த என்
அன்புள்ள ஆசானே!
மாண்போடு மண்ணுலகில் மனிதனாய்
வாழவென்று-நீர் போதித்த
போதனைகள் எத்தனை எத்தனை
கவிவரிகளாய்... அகிலம் போற்றும்
இந்நாளில் அயராத உன் சேவையைப்
போற்றி உம்மை நிமிடத்துக்கு ஒரு
தடவை போற்றுகிறோம்
என் அன்புள்ள ஆசான்களே...!

**செ.பாஸ்கரன்**
**(ஆசிரியர்)**
**மு/முள்ளிவாய்க்கால் மேற்கு**
**க.உ.வித்தியாலயம்.**

### ஆசிரிய விருட்சங்களே வாழ்த்துகின்றேன்

ஐந்தாம் வயதினில் பாடசாலை வளாகத்தில்
ஐயமுடன் அடியெடுக்கும் பிஞ்சுப் பாதங்களை
கண்ணும் கருத்துமாய் நோக்கி கரம்பற்றி
கல்விக் களமென்னும் ஊற்றுக்கண் திறப்பவரே

நீங்கள் அறிவின் அரும்பெரும் திறவுகோல்கள்
நீண்ட பயணத்தின் நிதான சாரதிகள்
மாணவச் செல்வங்களை -என்றென்றும்
மாண்புறு சிற்பியாய் செதுக்கிப் பார்ப்போம்

ஆசிரியப் பணி அறப்பணி
அர்ப்பணிப்பு தன்மை கொண்ட தெய்வீகப் பணி
தெய்வீக மாளிகையில் தீபமென நாமிருந்து
தேவையான அறிவொளி கொடுப்போம்.

**கௌ. கிருபாகரன்**
**உதவிக் கல்விப் பணிப்பாளர், துணுக்காய் கல்வி வலயம்.**

## உங்கள் புனிதமான பணிதொடரட்டும்!

### கல்வி அமைச்சின் செயலாளர் வாழ்த்து



எமது சமூகத்தின் எதிர்கால சிற்பிகளாகவும் விலைமதிக்க முடியாத மூலதனங்களாகவும் இருக்கும் எமது மாணவச் செல்வங்களை கல்வி அறிவுடையவர்களாகவும் கலாசார, சமய, பண்பாட்டு விழுமியங்களைப் பேணி நடப்பவர்களாகவும் நல்லொழுக்கமும் நேர்மனப்பாங்கும் உடையவர்களாகவும் உருவாக்குவது ஆசிரியர்களின் கடமையாகும் என வடமாகாண கல்வியமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் தெரிவித்துள்ளார்.

சர்வதேச ஆசிரியர் தினத்தை முன்னிட்டு அவர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவ்வாழ்த்துச் செய்தியில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ள விடயங்கள் வருமாறு,

அறியாமை இருளகற்றி அறிவொளியை உலகெங்கும் பரப்பும் தெய்வங்களான ஆசிரியர்களின் சேவையைப் பாராட்டி கௌரவிக்கும் உயர்வான நாளாக உலக ஆசிரியர் தினம் கொண்டாடப்படுகின்றது. ஆசிரியர் தொழில் மக்களின் வாழ்விற்கு வழிகாட்டும் மிகவும் உயர்வான, புனிதமான தொழிலாகும். இறைவனால் சமூகத்திற்கு சேவையாற்றுவதற்கு கிடைத்த சந்தர்ப்பமாக இதனை கருதி மிகுந்த சமூகப் பொறுப்புடன் தமது பணிகளை ஆசிரியர்கள் மேற்கொள்ள வேண்டும்.

மாதா, பிதா , குரு, தெய்வம் என்பதுதான் எமது அடிப்படையானதும் வாழ்விலே பின்பற்ற வேண்டியதுமான உயர்ந்த கோட்பாடாகும். எமது பெற்றோர்களை மதித்து அவர்கள் சொற்படி நடந்து ஆசிரியர்களின் வழிகாட்டலில் அறிவினைப் பெற்று இறைபக்தியுடனும் தெய்வ நம்பிக்கையுடனும் எமது மனச்சாட்சிக்கு கட்டுப்பட்டு எமது பணியினை மேற்கொள்ளும் போது வாழ்க்கையின் உயரிய குறிக்கோள் நிறைவேற்றப்படுவதுடன் மன நிறைவையும் சிறப்பையும் கீர்த்தியையும் பெற்றுக் கொள்ள முடியும் என்பது எமது முன்னோர்களின் வரலாற்றுப்பாடமாக அமைந்துள்ளது. ஆசிரியர்கள் வினைத்திறனுடன் கூடிய அர்ப்பணிப்பு மிக்க உயர்வான சேவையை ஆற்றுவதன் ஊடாக எமது எதிர்கால சமூக கட்டமைப்பைப் பலமாக இட்டு சமூக அத்திவாரத்தின் அடித்தளங்களாக எமது மாணவர்களை உருவாக்க வேண்டியிருப்பது எம் அனைவரினதும் தார்மீக கடப்பாடாக அமைந்துள்ளது. தன்னலம் கருதாது சமூக உயர்விற்காக தம்மை அர்ப்பணித்து ஏணிகளாக இருந்து எம் சமூகத்தை உயர்த்தி நிற்கும் ஆசிரியர்களாகிய உங்களின் புனிதமான பணி தொடரவும் விலைமதிக்க முடியாத சேவையை வழங்கும் உங்களுக்கு எல்லாம் வல்ல இறைவன் ஒளிமயமான எதிர்காலத்தினை வழங்க வேண்டி பிரார்த்திப்பதுடன் இன்றைய நன்னாளில் உங்களின் சேவையைப் பாராட்டி வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாற்றுவலுவுடையோர் தினப் போட்டியில் வெற்றி பெற்றோர் விபரம்

(பூநகரி)

மாற்றுவலுவுடையோர் தினத்தையொட்டி பூநகரி கோட்ட பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட மாற்றுவலுவுடையோர் தினப் போட்டி முடிவுகள் பூநகரி கோட்டக் கல்விப் பணிப்பாளரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விபரம் வருமாறு,

**கீழ்ப்பிரிவு- பேச்சு**

இ.விதுசா (முழங்காவில் ஆரம்ப வித்தியாலயம்), யோ.யதுஷன் (முக்கொம்பன் அ.த.க. பாடசாலை), சி.நிதும்சா (முழங்காவில் ஆரம்ப வித்தியாலயம்).

**மத்திய பிரிவு- பேச்சு**

அ.சரணியா (முக்கொம்பன் அ.த.க.பாடசாலை), சி.டிலக்ஷனா (முக்கொம்பன் அ.த.க. பாடசாலை), யோ.மதுரா (முழங்காவில் ம.வி.)

**மேற்பிரிவு- பேச்சு**

ச.கிருசாந்தி (முக்கொம்பன் அ.த.க.பாடசாலை), ஸ்ரீ.தாட்சாயினி (பூநகரி ம.வி.), யோ.மேரிசுலக்ஷனா (முழங்காவில் ம.வி.)

**கீழ்ப்பிரிவு- கட்டுரைப்போட்டி**

இ.காவேரி (முக்கொம்பன் அ.த.க.பாடசாலை), உ.காவியா (முழங்காவில் ஆரம்ப வித்தியாலயம்), இ.வினோசா (முழங்காவில் ஆரம்ப வித்தியாலயம்).

**மத்தியபிரிவு- கட்டுரைப்போட்டி**

ப.விபிதா (முக்கொம்பன் அ.த.க.பாடசாலை), க.அஞ்சலா (ஞானிமடம் அ.த.க.பாடசாலை), யோ.மேரிஜெனிஸ்ரா (முழங்காவில் ம.வி).

**மேற்பிரிவு- கட்டுரைப் போட்டி**

ச.கிருஷாந்தி (முக்கொம்பன் அ.த.க.பாடசாலை), து.துளசி (நல்லூர் ம.வி.), இ.நிதர்சன் (பூநகரி ம.வி.) (ம-84)




# வீதி புனரமைப்பை துரிதப்படுத்த கோரிக்கை

கிளிநொச்சி மாவட்ட உதயநகர் மேற்கு கிராம அலுவலர் பிரிவில் உள்ள இந்திராவீதி புனரமைப்பு செய்வதற்கென கிளறிய நிலையில் காணப்படுகின்றது.

1/2 கிலோமீற்றர் தூரத்தைக் கொண்ட இவ்வீதியில் 50 குடும்பங்கள் வரை வசித்து வருகின்றனர். அண்மையில் நடைபெற்ற மாகாண சபை தேர்தலையொட்டி இவ்வீதி புனரமைப்பு செய்யப்படப் போவதாக கூறப்பட்டது. எனினும் இந்த வீதி கிளறப்பட்டுள்ள நிலையில் மணல் நிரம்பி புழுதியாக இருப்பதால் இந்த வீதியால் பயணிக்கும் பாடசாலை மாணவர்களும் துவிச்சக்கரவண்டி மற்றும் வாகனங்களில் செல்வோரும் மிகவும் கஷ்டத்தை எதிர்நோக்குகின்றனர். மழை காலம் ஆரம்பித்து விட்டால் சேற்றிலும் சகதியிலும் தாம் அவலப்பட வேண்டி ஏற்படும் என இவ்வீதியை பயன்படுத்தும் மாணவர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே, மழை காலம் ஆரம்பிப்பதற்கு முன்னதாக மாணவர்களும் ஏனையோரும் நன்மை பெறக்கூடிய வகையில் ஏதோ ஒரு வகையில் சீர்செய்து தர வேண்டுமென அப்பகுதி மக்களும் பயணிகளும் வேண்டுகோள் ஒன்றை முன்வைத்துள்ளனர். (ம-254)

# உள்ளூராட்சி வாரத்தையொட்டி பல செயற்பாடுகள் முன்னெடுப்பு

பூநகரி பிரதேச சபை நிர்வாகத்தினர் உள்ளூராட்சி வாரத்தை ஒட்டி அந்த வாரத்தில்பல செயற்பாடுகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளனர்.

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 21 ஆம் திகதி காலை தொடக்கம் மாலை வரை முக்கொம்பன் கிராமத்தில் ஆயுர் வேத நடமாடும் சிகிச்சையும் மறுநாள் 22 ஆம் திகதி பணியாளர்கள், உறுப்பினர்கள், பொறுப்பாளர்கள் இணைந்து கடந்த கால சபைக்கு வரவேண்டிய நிலுவைகள் அறவிடலும் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 23 ஆம் திகதி கிராம ரீதியான சிரமதானப் பணிகளும் மறுநாள் 24 ஆம் திகதி பூநகரி பிரதேச சனசமூக நிலையங்களுக்கான வலுவூட்டல் போட்டிகளும் இடம்பெறவுள்ளன.

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 25 ஆம் திகதி சுற்றாடலில் மரங்களை நடுதல் நிகழ்வில் ஆயுர்வேத மூலிகை மரங்களும் பயன்தரு மரங்களும் அலுவலக சுற்றாடலிலும் சந்தை தொகுதியிலும் பொது இடங்களிலும் நாட்டப்படவுள்ளன.

இறுதி நாளான 26 ஆம் திகதி பாடசாலை மட்டத்தில் கல்வி, நூலக அபிவிருத்தி சம்பந்தமான நூலக விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக பிரதேச சபை உறுப்பினர்களும் பணியாளர்களும் பாடசாலைகளை தரிசித்து செயற்பாட்டில் ஈடுபடவுள்ளனர். (ம-84)

# விபத்தில் ஒருவர் பலி; ஒருவர் காயம்




மதவாச்சி, கல்கந்தேகம பிரதேசத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அதிகாலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் ஒருவர் கடும் காயங்களுக்குள்ளான நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக மதவாச்சி போக்குவரத்து பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

யாழ். கண்டி ஏ-9 பாதையில் இவ் விபத்து இடம் பெற்றுள்ளது. எண்ணெய் பவுஸர் ஒன்றும் லொறியொன்றும் நேருக்குநேர் மோதிக் கொண்டதில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்விபத்தில், எண்ணெய் பவுஸரை செலுத்திச் சென்ற சாரதி ஸ்தலத்திலே பலியாகியுள்ளதுடன் அதில் பயணித்த் மேலும் ஒருவர் கடும் காயங்களுக்கு உள்ளான நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.முரத்தலாவ, கஹவதுகொட பிரதேசத்தைச் சேர்ந்த சுகன் நிலவீர என்ற 48 வயதுடைய நபரே இவ்விபத்தில் உயிரிழந்துள்ளார்.

லொறியின் சாரதி நித்திரையில் வாகனத்தை செலுத்தியமையால் இவ்விபத்து இடம் பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.விபத்து தொடர்பில், பொலிஸார் தொடர்ந்தும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-250)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் கல்வி கற்கும் **நாகலிங்கம் பிரதாபன்** புலமைப் பரிசில் பரீட்சையில் 172 புள்ளிகளை பெற்று சித்தியடைந்தமையை பாராட்டி வாழ்த்துவதோடு பிரதாபன் பல துறைகளிலும் சிறந்து விளங்க இறைவனை வேண்டுகின்றோம்.

**வாழ்த்துவோர்:**

பேரன் மகாதேவன் பராசக்தி
மாமா தேவன், அத்தை ரதி,
சினேகா - பேருஜன்
சித்தப்பாமார் - கஜேந்திரன்
பாபு கமல்

7ஆம் யுனிட்,
இராமநாத புரம்.

(சி-5016)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



வரதராஜா வர்த்திகா

முதியோர் தின கவிதைப் போட்டியில் பங்குபற்றி தேசிய மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்ட

**யா/மருதனார்மடம் இராமநாதன்**

கல்லூரி மாணவி

**செல்வி வரதராஜா வர்த்திகா**

08.10.2013 செவ்வாய்க்கிழமை அன்று ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி அவர்களால் பரிசு பெறுவதையிட்டு பெருமகிழ்ச்சியடைவதோடு அவர் மென்மேலும் பல பாராட்டுகள் பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**வாழ்த்துவோர்:**

பெற்றோர்,
மாமன்மார்கள்,
அம்மம்மா, அப்பப்பா

சந்தன வைரவர் கோயிலடி,
சுன்னாகம்.

(சி-5017)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவின் கடன் நெருக்கடி உலக பொருளாதாரத்தை பாதிக்கும்

(வோஷிங்டன்)

**அமெரிக்காவில் தற்போது நிலவும் கடன் நெருக்கடி உள்நாட்டை மட்டுமன்றி உலகப் பொருளாதாரத்தையும் பாதிப் படைய செய்யும் என சர்வதேச செலாவணி நிதியத்தின் (ஐ.எம்.எப்.) இயக்குநர் கிறிஸ்டீன் லகார்ட் தெரிவித்துள்ளார்.**

அமெரிக்காவிலுள்ள ஜார்ஜ் வோஷிங்டன் பல்கலைக்கழகத்தில நேற்றுமுன் தினம் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையில்,

அமெரிக்காவில் இப்போதுள்ள சூழல் நிதிச் சுமையைக் குறைக்க உதவாது. அரசுத்துறைகள் மூடப்பட டுள்ளமையால் இன்னும் அதிக பாதிப்பையே அது ஏற்படுத்தும். இது அமெரிக்க பொருளாதாரத்தை மட்டு மன்றி, உலக நாடுகளின் பொரு ளாதாரத்தையும் பாதிப்படைய செய்யும். எனவே, இந்த நிலையை உடனடியாக நீக்க நடவடிக்கை மேற கொள்ள வேண்டும்.

பொருளாதார வளர்ச்சியில் ஏற் பட்டுள்ள தொய்வை சீர்செய்ய, எதிர் வரும் காலங்களில் நிதி சீரமைப்பு நட வடிக் கைகளை அமெரிக்கா மேற் கொள்ள வேண்டும். அதேசமயம், வருவாயை அதிகரிக்க செய்து, கடன் நெருக்கடியை குறைக்கும் நடவடிக்கைகளில் அரசு ஈடுபட வேண்டும் என்றார்.

இதேவேளை, அந்நாட்டின் நிதி அமைச்சர் கூறுகையில், அமெரிக் காவில் கடன் உச்சவரமபை உயர்த் தாவிடின் 2008ஆம் ஆண்டு ஏற் படடதைப் போன்ற அல்லது அதை விட மோசமான நிதி நெருககடி நிலையை மீண்டும் சந்திக்க நேரிடும் என்றார்.

**ஒபாமாவின் ஆசியப் பயணம் இரத்து**

அமெரிக்காவில் ஏற்பட்டுள்ள நெருக் கடியின் எதிரொலியாக, அந்நாட்டு ஜனாதிபதி பராக்ஒபாமா இந்த வாரத்தில் மேற்கொள்ள விருந்த ஆசியப் பயணம் இரத்து செய்யப் பட்டுள்ளது.

இது குறித்து வெள்ளை மாளிகை செய்தித்தொடர்பாளர் ஜேய் கார்னி கூறு கையில், "ஜனாதிபதி ஒபாமா, இந்தோனேசியா, புருணே ஆகிய ஆசிய நாடுகளில் மேற்கொள்ள விருந்த சுற்றுப்பயணம் இரத்து செய்யப்பட்டுள்ளது" என்றார்.

இதேவேளை இந்த வாரம் ஒபா மாவின் மலேசிய மற்றும் பிலிப்பை ன்ஸ் சுற்றுப்பயணமும் இரத்து செய்யப்பட்டுள்ளதாகவும், ஒபாமா வுக்கு பதிலாக வெளியுறவுத்துறை அமைச்சர் ஜோன் கெர்ரி இந்தோ னேசியா மற்றும் புருணே ஆகிய நாடுகளுக்கு செல்வார என்றும் வெள்ளை மாளிகை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2)

# ஈரான் மீது பொருளாதாரத் தடை கடுமையாக அதிகரிக்கப்படும்

## அமெரிக்கா எச்சரிக்கை

ஈரான் யுரேனியப் பயன்பாட்டைக் குறைத்துக் கொண்டு, அணு மூலப் பொருள் கையிருப்பு அளவை ஆய்வுக்கு உட்படுத்தவில்லை எனில் அந்நாட்டின் மீதான பொருளாதாரத் தடை கடுமையாக அதிகரிக்கப்படும் என்று அமெரிக்கா எச்சரித்துள்ளது.

எதிர்வரும் 15ஆம் திகதி ஜெனீவா மாநாட்டின்போது இந்த விவகாரத்தில் நம்பிக்கை ஏற்படுத்தும் அளவுக்கு ஈரான நடக்கும் பட்சத்தில் அதன் மீதான பொரு ளாதாரத்தடை சற்று தளர்த்தப்படும்.

மாறாக அணு ஆயுதங்களை தயாரிக் கமுற்படும் பட்சத்தில் ஈரான் மீதான பொருளாதாரத்தடை மேலும அதிகரிக் கப்படும் என்று அமெரிக்க அணுசக்தித் துறை உயரதிகாரி வென்டி ஷெர்மன் வெளியுறவுத்துறை அமைச்சகத்திடம் தெரிவித்தார். பொருளாதாரத்தடையை தகர்க்கும் விதமாக சீனா, துருக்கி, இந்தியா உள்ளிட்ட ஆசிய நாடுகள் ஈரா னிடம்எண்ணெயகொள்முதல் செய்வ தற்கு அமெரிக்க அரசு வருத்தம் தெரிவித் துள்ளது.

அத்துடன் ஈரானிலிருந்து பாகிஸ்தான் வரை எரிவாயு குழாய்பாதை அமைக்கும் முயறசியைத தவிர்க்காவிட்டால் பாகிஸ் தான மீதும் பொருளாதாரத்தடை விதிக கபபடும் என்று அமெரிக்கா எச்சரித் துள்ளது. (2)

# முதலாம் உலகப் போரில் வீர காவியமான இந்திய வீரர்களுக்கு முகர்ஜி மலரஞ்சலி



(புருசெல்ஸ்)

முதலாம் உலகப் போரில் வீர மரணம் அடைந்த இந்திய இரா ணுவத்தினருக்கு பெல்ஜித்தில் பிர ணாப்முகர்ஜிமலரஞ்சலிசெலுத்தினார்.

பெல்ஜியம் நாட்டில் சுற்றுப் பய ணம் மேற்கொண்டுவரும் ஜனா திபதி பிரணாப் முகர்ஜி புருசெல்ஸ் நகரிலுள்ள முதல் உலகப்போரில் வீரமரணம் அடைந்த இந்திய இராணுவத்தினரின் சமாதிகளில் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்.

உயிர்நீத்த வீரர்கள் நினைவாக அங்கு எரியும் அணையா ஜோதியை தூண்டிவிட்ட பிரணாப் முகர்ஜி அங் கிருந்த வருகையாளர் பதிவேட்டில் தனது கருத்தை பதிவு செய்தார்.

முதலாம் உலகப்போரின் போது ஐரோப்பாவில் போரிட்டு உயிர்நீத்த வீரர்களின் தியாகத்தை நினைவு கூரும் இந்த இடத்தில் இந்திய வீரர் களுக்கு எனது மரியாதையையும், அஞ்சலியையும் சமர்ப்பிக்கிறேன் என்று அந்த பதிவேட்டில் எழுதினார.

28-7-1914 தொடங்கி 11-11-1918ஆம் ஆண்டு நிறைவடைந்த இந்த நான்காண்டு போரில் கடல் கடந்து சென்ற சுமார் 10 இலட்சம் இந்திய வீரர்கள் பங்கேற்றனர்.

அவர்களில் 74 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் வீரமரணம் அடைந்தனர் என்பது குறிப்பிடத் தக்கது. (2)



சென்னை புதிய தலைமை செயலகம் அருகே விலைவாசி உயர்வை கண்டித்து தா.பாண்டியன் தலைமையில் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றபோது...

# தனித்தெலுங்கானா முடிவிற்கு எதிர்ப்பு; சீமாந்திரா மக்கள் போராட்டம்

## ஆறு மத்திய அமைச்சர்கள் இராஜினாமா

(ஐதராபாத்)

தெலுங்கானா மாநிலம் அமைக்க மத்திய அமைச்சரவை கூட்டத்தில் ஒப்பு தல் வழங்கியுள்ளதை எதிர்த்து, சீமாந திராவில் 72 மணிநேர பந்த்(ஹர்த் தாள்) தொடங்கியது.

நாட்டின் 29ஆவது மாநிலமாக தெலுங்கானா உதயமாகவுள்ளது. மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழஙகியதால ஒருங்கிணைந்த ஆந்திராவை வலியுறுத்தி போராட்டம் நடத்தி வரும் மக்கள் மிகவும் அதிர்ச்சி அடைந்தனர். இதையடுத்து, சீமாந்திரா மாவடடங்களில் 72 மணிநேர ஹர்த்தாலுக்கு வை. எஸ்.ஆர். காங்கிரஸ் கட்சி அழைப்பு விடுத்தது.

நேற்று நள்ளிரவு முதலே பல இடங்களில் லொறிகள் நிறுத்தப்பட்டன. வீதிகளில் மரங்களை வெட்டிப் போட்டும், பெரிய கற்களை வைத்தும், டயர்களை கொளுத்தியும் போராட்டக்காரர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தி வருகின்றனர். இதனால், வெளி மாநிலங்களில் இருந்து வருகை தரும் வாகனங்கள் பல கிலோ மீற்றர் தூரத் திற்கு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

போராட்டக்காரர்கள் காங்கிரஸ் தலை வர் சோனியா காந்தி, பிரதமர் மன்மோகன சிங் ஆகியோரின் உருவ பொம்மை களை எரித்து ஆர்ப்பாட்டங்கள் நடத்தி வருகின்றனர். பெற்றோல் நிலைய





ங்கள், வணிக வளாகங்கள், ஹோட்டல்கள், தேநீர்க்கடைகள், சிறிய பெட்டிக் கடைகள் உள்ளிட்ட அனைத்து கடைகளும் முற்றிலுமாக அடைக்கப்பட்டுள்ளன.

ஏற்கனவே, அரசு ஊழி யர்களின் வேலை நிறுத்தம் காரணமாக அரசு பாடசாலை, கல்லூரிகள் மூடப்பட்டுள்ளன. இந்நிலையில் ஹர்த்தாலுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் தனியார் பாட சாலை கல்லூரிகளுக்கும் தொடர்ந்து விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது. அரசு அலு வலகங்களும் மூடப்பட்டன. மத்திய அரசு அலு வலகங்களான தபால் நிலையம், பி.எஸ்.என்.எல் அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டக்காரர்கள் முற்றுகை போராட்டம் நடத்தி வருகின்றனர்.

ஹர்த்தால் காரணமாக கடலோர ஆந்திரா, ராயலசீமா பகுதிகளில் பொது மக்களின் வாழ்க்கை அடியோடு ஸ்தம் பித்துள்ளது. விஜயநகரில் போராட்டம் நடத்தியவர்கள் மீது பொலிஸார் கண் ணீர்புகை குண்டுகளை வீசினார்கள். இதனால் ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்து ஓடினார்கள்.

போராட்டம் காரணமாக சீமாந்திரா முழுவதும் பதற்றம் நிலவுகிறது. துப் பாக்கி ஏந்திய பொலிஸார் குவிக்கப்பட்டு தீவிர ரோந்து பணியில் ஈடுபட்டுள்ளனர்.

**சாகும் வரை உண்ணாவிரதம் ஜெகன் மோகன் அறிவிப்பு**

ஆந்திராவை மத்திய அரசு பிரித்தது வருத்தம் அளிக்கிறது. இதுவரை பிரிக் கப்பட்ட மாநிலங்கள் அனைத்தும், சட் டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற றிய பின்னரே பிரிக்கப்பட்டுள்ளன.

ஆனால், ஆந்திர மாநிலத்துக்கு மட் டும் இந்த முடிவு ஏன்? அரசியல் சுய நலத துக்காகவே இது செய்யப்பட்டுள்ளது. 10 ஆண்டுகளுக்கு பின்னர் ஐதராபாத்தை விட்டுவெளியேற வேண்டும என கூறு வது நியாயமா? 10 ஆண்டுகளில ஐத ராபாத் போன்ற நகரை உருவாக்க இய லுமா? அனைத்து கட்சியினரும் ஒன்று திரண்டு போர் வீரர்களை போல போராட வேண்டும். காங்கிரசின் போக்கை கண் டித்தும், மாநில ஒற்றுமையை வலியுறுத தியும் ஐதராபாத்திலுள்ள கட்சி அலுவல கம் முன்பு நேற்று முதல் சாகும்வரை உண்ணாவிரத போராட்டத்தை ஆரம் பித்துள்ளதாக அவர் கூறியுள்ளார்.

**திருப்பதியில் பக்தர்கள் தவிப்பு**

ஆந்திராவில் நடைபெற்றுவரும் ஹர்த்தால் காரணமாக, திருப்பதி கோயி லுக்கு செல்லும் மலைப்பாதையில் போராட்டக்காரர்கள் போக்குவரத்தை தடை செய்து போராட்டம் நடத்தி வருகின்ற னர் சொந்தவாகனங்களில்வருபவர்களை போராட்டக்காரர்கள் திருப்பி அனுப்பு கின்றனர். ஜீப், மூச்சக்கரவண்டிக ளில்திரு மலைக்கு செல்பவர்களை தடுத்து, டயர்களில் காற்றைப் பிடுங்கி, கண்ணாடிகளை உடைக்கின்றனர். போக்குவரத்து முற்றிலும் ஸ்தம்பித் ததால், 30 ஆயிரம் பக்தர்கள் தரிசனம் முடித்து விட்டு திருமலையில் காத்தி ருக்கின்றனர்.

இதேவேளை தெலுங்கானா தனி மாநில முடிவுக்கு எதிர்ப்புத் தெரி வித்து ஆந்திரப் பிரதேசத்தைச் சேர்ந்த 6 மத்திய அமைச்சர்கள் தங்கள் பதவிகளை இராஜினாமா செய்துள்ளனர்.

மத்திய மனித ஆற்றல் மேம்பாட் டுத்துறை அமைச்சர் பல்லம் ராஜு, மத்திய சுற்றுலாத்துறை அமைச்சர் சிரஞ்சீவி, இராயில்வே இணை அமைச்சர் கோட்லா ஜெயசூரிய பிரகாஷ்ரெட்டி ஆகியோர் இராஜி னாமா கடிதத்தை பிரதமர் மன்மோகன் சிங்கை தனித்தனியாக சந்தித்து அளித்தனர். ஆனால் அவற்றை பிரதமர் ஏற்றுக் கொள்ளவில்லை எனக் கூறப்படு கிறது.

இதேபோல, ஆந்திர பிரதேச த்தை சேர்ந்த மத்தியவர்த்தகத்துறை இணை அமைச்சர் புரந்தேஸ்வரி. மத்திய ஜவுளித்துறை இணை அமைச சர் கே.எஸ். ராவ், மத்திய தொலைத் தொடர்புத்துறை இணை அமைச்சர் கில்லிகிருபாராணி ஆகியோரும் தங்கள் பதவியை இராஜினாமா செய் யும் கடிதங்ளை பிரதமர் அலுவலகத் துக்கு தொலைநகல் மூலம் அனுப்பி யுள்ளதாக கூறியுள்ளனர். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு கல்விச்சாலையைத் திறப்பவன்
ஒரு சிறைச்சாலையை மூடுபவன் ஆகிறான்.

-லா புருயர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## சமூக மரியாதையை இழந்துவரும் ஆசிரியத்துவம்

ஒக்ரோபர் 5-ம் திகதி சர்வதேச ஆசிரியர் தினம். இலங்கையில் ஒக்ரோபர் 6-ம் திகதி ஆசிரியர் தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது.

எனினும் இன்று ஞாயிற்றுக்கிழமை என்பதன் காரணமாக நாளை 7-ம் திகதி இலங்கையில் உள்ள அநேக பாடசாலைகளில் ஆசிரியர் தினம் அனுஷ்டிக்கப்படும்.

இந்நிலையில் ஆசிரியர் தினம் என்ற ஒன்று தேவைதானா? என்ற கேள்விகள் எழுகை பெற்றால் அதில் அர்த்தமில்லாமல் இல்லை.

ஒரு காலத்தில் ஆசிரியத்துவம் என்பது புனிதமான தொழிலாகப் போற்றப்பட்டது.

இன்று ஆசிரியப் பணி பல்வேறு நிலைமாற்றங்களுக்கு உட்பட்டு எங்கள் தமிழ் மண்ணில் ஆசிரியர்களுக்கான சமூக மரியாதைகள் தேய்மானத்தை நோக்கிச் செல்கின்றன.

இதற்கான அடிப்படைக் காரணம் என்ன? என்பது குறித்து ஆணைக்குழுவை நியமித்து ஆராய்ந்தால் சுவ அது தகும்.

மக்கள் சமூகத்தின் உயர்வென்பது ஆசிரியர்களால் மட்டுமே ஏற்படுத்தக்கூடியது. பாடசாலைக் கட்டமைப்பு அது சார்ந்த நிர்வாக ஒழுங்கமைப்பு என்ற அனைத்து விடயங்களும் ஆசிரியர் – மாணவர்கள் என்ற தொடர்புடன் சம்பந்தப்பட்டதாகும்.

ஓர் ஆசிரியர் தனது கற்பித்தல் செயற்பாட்டை மேற்கொள்ளவில்லையாயின் பாடசாலைக் கல்வியின் அத்தனை நிர்வாக ஒழுங்கமைப்புக்களும் தோல்வியடைந்துவிடும்.

எனவே, ஆசிரியர்கள் மதிக்கப்பட வேண்டும். கல்விசார் அதிகாரிகள் எவ்வளவுதான் உச்சமாகத் தங்கள் பணியை மேற்கொண்டாலும் ஓர் ஆசிரியரின் கற்பித்தலில்தான் மாணவனின் அடைவுமட்டம் தீர்மானிக்கப்படுகிறது.

எனவே ஆசிரியர் தவிர்ந்த ஏனைய அனைத்து கல்வி நிர்வாகிகளும் ஆசிரியரின் கற்பித்தல் செயற்பாட்டுக்கு துணை புரிபவர்கள்.

எனினும் எங்கள் மண்ணில் ஆசிரியர்களுக்கான சமூக மரியாதை கவலைக்குரியதாகவே இருக்கிறது.

ஆசிரியர் தினத்தை ஒரு நாள் பொழுதில் அனுஷ்டிப்பதன் மூலம் ஆசிரியர்களின் மரியாதை பாதுகாக்கப்படுவிடாது.

மாறாக, எப்போதும் ஆசிரியர்களின் கௌரவம் பாதுகாக்கப்பட வேண்டும்.

அதிகாரிகள் முதல் பெற்றோர்கள் வரையான சகல மட்டங்களிலும் ஆசிரியர்களுக்கான மரியாதை என்பது பாதுகாக்கப்படுவதும் அவசியம். இந்நிலைமையில் வீழ்ச்சி ஏற்படுமாக இருந்தால் அதன் பொருள் கல்வித் தரம் வீழ்கிறது என்பதாகும்.

துரதிர்ஷ்டவசமாக எங்கள் இனத்தில் இப்போது இருக்கக்கூடிய எதையும் எவரையும் விமர்சிக்கும் நடைமுறையில் ஆசிரியர்களும் விதிவிலக்கல்ல.

ஓர் ஆசிரியரை பொறுப்பற்ற முறையில் விமர்சிக்கும் போது அந்த விமர்சனங்கள் மாணவர்கள் மத்தியிலும் புரையோடி ஒட்டுமொத்தத்தில் ஆசிரியர் – மாணவர் என்ற புனிதமான உறவை சிதைத்துவிடுகின்றது.

இதன்காரணமாக ஆசிரியர்கள் மன அழுத்தத்துக்கு உட்பட, கற்பித்தல் செயற்பாட்டில் பாதிப்பு ஏற்பட்டுவிடுகின்றது.

எனவே ஆசிரியர்கள் மதிக்கப்பட வேண்டும்.

அவர்கள் தொடர்பான நிர்வாக நடவடிக்கைகள் தாமதங்களுக்கோ அல்லது பழிவாங்கல்களுக்கோ உட்படாமல் செம்மையாக நிறைவேற்றப்படுவது அவசியம்.

இவ்வாறான ஒழுங்குமுறைகள் ஏற்படும்போது தான் ஆசிரியர்களிடம் இருந்து நிறைவான பணியை எதிர்பார்க்கமுடியும்.

ஆக, ஆசிரியர் தினம் என்பது ஆசிரியர்களை மதிப்பதற்கான நாள் என்பதை விட ஆசிரியர்கள் மதிக்கப்பட வேண்டும் என்பதை சமூகத்திற்கு எடுத்துக் கூறுகின்ற நாளாக அமைவதே பொருத்தமுடையதாகும்.

## வன்னேரிகுளம் மகாவித்தியில் ஆசிரியர் பற்றாக்குறை

### கிளி. அரச அதிபருக்கு மகஜர் கையளிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி வன்னேரிக்குளம் மகாவித்தியாலயத்தில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை சுட்டிக்காட்டி பெற்றோர்கள் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரனிடம் மகஜர் ஒன்றைக் கையளித்துள்ளனர்.

அம் மகஜரின் பிரதிகள் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், கிளி வலயக் கல்விப் பணிப்பாளர், கரைச்சிக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஆகியோர்க்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அம் மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

கிளிநொச்சி மாவட்டத்தில் பழமை வாய்ந்த விவசாயத்தைக் கொண்ட கிராமமான வன்னேரிக்குளத்தினைச் சேர்ந்த பெற்றோர்களாகிய நாங்கள் தெரியப்படுத்துவதாவது,

இப்பகுதியில் உள்ள பாடசாலையான வன்னேரிக்குளம் மகாவித்தியாலயத்தில் உயர்தர வகுப்புகள் வரை நடைபெறுகின்றன.

முன்னர் தரம் 1 தொடக்கம் க.பொ.த சாதாரண தரம் வரையான வகுப்புக்களுக்கு போதிய ஆசிரிய வளம் இருந்தமையால் பரீட்சைகளில் நல்ல பெறுபேறுகளை மாணவர்கள் பெற்று வந்தனர். இப்பள்ளியில் இவ்வருடமே உயர்தர வகுப்புக்கள் (கலைப்பிரிவு) ஆரம்பிக்கப்பட்டன.

ஆயினும் இதுவரை அவ்வகுப்புகளுக்கான ஆசிரியர்கள் நியமிக்கப் படவில்லை. இப்பாடசாலையில் 33 உயர்தர மாணவர்கள் கல்வி பயில்கிறார்கள். இவ்வருடம் ஆரம்பித்து 9 மாதங்கள் கடந்த நிலையில் இம்மாணவர்கள் எவ்வாறு உயர்தரப் பரீட்சைக்கு தோற்றப் போகிறார்கள் என்பது கேள்விக் குறியாகவுள்ளது.

எமது மாவட்டத்தின் அரச அதிபர் என்ற வகையில் எங்கள் பிரச்சினையினைத் தீர்த்து வைப்பீர்கள் என்ற நம்பிக்கையுடன் தங்களுக்கு இந்த மகஜரை அனுப்பி வைக்கிறோம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-4)

## கலந்துரையாடல்

(கரணவாய்)

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட சனசமூக நிலையங்களின் நிர்வாகங்களுடனான கலந்துரையாடல் எதிர்வரும் 10-ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அலுவலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் சனசமூக நிலையங்களின் தலைவர், செயலாளர் ஆகியோர் தவறாது கலந்து கொள்ளுமாறு பிரதேச சபையின் செயலாளர் ரி. அன்னலிங்கம் அறிவித்துள்ளார்.

(அ-9-60)

## ஆசிரிய தினம்

(விசுவமடு)

மு/ விசுவமடு மகாவித்தியாலயத்தின் ஆசிரிய தின விழா நாளை திங்கட்கிழமை காலை 9.30 மணியளவில் நடைபெறவுள்ளதாக விசுவமடு மகா வித்தியாலயத்தின் அதிபர் அறிவித்துள்ளார். (அ)

## மாட்டு வண்டி சவாரி

எழுதுமட்டுவாழில் கடந்தவாரம் நடைபெற்று இடைநடுவில் நிறுத்தப்பட்ட மாட்டுவண்டி சவாரிப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு எழுதுமட்டுவாழ் மாட்டுவண்டிச் சவாரித் திடலில் இடம் பெறவுள்ளது.

எனவே, போட்டியாளர்களை உரிய நேரத்திற்கு சமுகம் அளிக்குமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (அ-9-29)

## தெய்வீகப் இசைப்பேருரை

வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தான மகோற்சவத்தில் இரவு 7.30 மணிக்கு மூன்றாம் நாளான இன்று ஆசிரியர் கு. பாலசண்முகன் வழங்கும் சடாயு எனும் விடயப் பொருளிலும் நாளை திங்கட்கிழமை ஆசிரியர் ரி. தமிழேந்திரன் வழங்கும் கோதை காட்டிய பாதை எனும் விடயப் பொருளிலும் தெய்வீக பேருரைகள் இடம் பெறவுள்ளன. (அ-7)


## மாணவர் அனுமதி

யா/ கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய 2014-ஆம் ஆண்டின் 6-ஆம் தர அனுமதிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தமிழ், ஆங்கில மொழி மூலத்தில் கல்வியைத் தொடர விரும்பும் மாணவ, மாணவிகள் எதிர்வரும் 20-ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை மேற்கொள்ள முடியும் என வித்தியாலய அதிபர் எஸ். இளங்கோ தெரிவித்துள்ளார். (செ-5)

## தவத்திரு யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை

### சும்மா விருந்துபார் தம்பி



கண்ணல்லக் காதல்லத் தம்பி
கண்ணுக்குக் கண்ணெடா தம்பி
எண்ணிலடங் காதெடா தம்பி
எல்லா மதுவெடா தம்பி
மண்ணாசை வையாதே தம்பி
மற்றிரண்டும் அப்படியே தம்பி
ஒன்றுக்கு மஞ்சாதே தம்பி
ஓடி ஒளியாதே தம்பி

## நம்பிக்கை செபம் நமது வாழ்வின் ஒரு நம்பிக்கையாகட்டும்

### பரமபிதா காட்டிய பாதை

இன்று நமக்குத்தரப்படும் வேதாகமப் பகுதியில் "கடுகளவு நம்பிக்கை உங்களுக்கு இருந்தால் நீங்கள் இந்த முசுக்கட்டை மரத்தை நோக்கி, "நீ வேரோடே பெயர்ந்துபோய்க் கடலில் வேரூன்றி நில்" எனக் கூறினால் அது உங்களுக்குக் கீழ்ப்படியும்." என ,இயேசு கூறுகின்றார்.

"நம்பிக்கை" என்னும் சொல்லுக்குப் பல பொருட்கள் உண்டு. நாம் உண்மை என உறுதியாக ஏற்பதையும் "நம்பிக்கை" என்கின்றோம். இப்பொருளில் இன்று "சமய நம்பிக்கை" பற்றிப் பேசுகின்றோம். இதற்கு நேர்மாறாக "மூட நம்பிக்கை" அமைகிறது. அதாவது நாம் உறுதியாக ஏற கின்ற ஒரு கருத்துக்கு உண்மையான ஆதாரம் இல்லை என்பது இதன் பொருள்.


இன்று,சீடர்கள் இயேசுவிடம் "எங்கள் நம்பிக்கையை மிகுதியாக்கும்" என்று கேட்கின்றனர். கத்தோலிக்க பார்வையில் "நம்பிக்கை" என்பது ஆழ்ந்த பொருள் கொண்டது. இதன் முதல் பொருள் "கடவுளை நாம் உறுதியாகப் பற்றிக்கொள்வதாகும்."

கடைசிவரைக்கும் கடவுளில் உறுதியாக நம்பிக்கைகொண்டதால் உயிர்பிழைத்த 33 சுரங்கத் தொழிலாளர்கள் பற்றி நாம் அறிந்துகொண்ட ஒரு உண்மை சம்பவத்தை இப்பகுதியில் இன்று குறிப்பிடுவது சாலப் பொருத்தம்.

2010 ஆவணி 5ஆம் திகதி சிலே நாட்டில் சிரமமான பகுதியில் 2 ஆயிரத்து 500 அடி ஆழத்தில் தங்கச் சுரங்கம் ஒன்றில் 33 தொழிலாளர்கள் தங்கள் வேலைகளில் ஈடுபட்டிருந்தனர். அப்போது ஏற்பட்ட ஒரு நிலச் சரிவால் ஏழு இலட்சம் தொன் பாறைகள் சுரங்கப் பாதையை அடைத்து விட்டன. அதாவது, இந்த 33 தொழிலாளர்களும் நிலத்திற்கடியில் அரைமைல் தூரத்தில் உயிரோடு புதைக்கப்பட்டனர். போராட்டம் ஆரம்பமானது. அவர்களைக் கண்டுபிடிக்க எடுக்கப்பட்ட அத்தனை முயற்சிகளும் தோற்றுப் போயின. 17 நாட்கள் கடந்த நிலையில் 2010 ஆவணி 22 அவர்கள் உயிருடன் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. உயிரோடு புதைக்கப்பட்ட 33 சுரங்கத் தொழிலாளர்களை மீட்கும் முயற்சிகள் ஆரம்பமாயின. அந்த முயற்சிகளின் பலனாக, ஐப்பசி 14 அதிகாலையில் 33 தொழிலாளர்களும் வெளியேற்றப் பட்டனர்.

ஆவணி 2010 நிகழ்ந்த இந்த விபத்து உலகின் கவனத்தைப் பல வழிகளில் ஈர்த்தது. 33 தொழிலாளர்களும் உயிரோடு பூமிக்கடியில் புதைந்துள்ளனர் என்று அறிந்த பின் உலகமே இத்தொழிலாளர்களுக்கு பல உதவிகள் பல வழிகளிலும் அனுப்பிக் கொண்டிருந்தன. உடல் அளவில் அவர்களுக்குச் செய்யப்பட்ட உதவிகளை விட, அவர்கள் உள்ளத்தில் நம்பிக்கையை வளர்க்க வழங்கப்பட்ட ஆன்மீக உதவிகள், செப உதவிகள் ஏராளம்.

2010 புரட்டாதி தொடக்கத்தில் திருத்தந்தை 16ஆம்பெனடிக்ட் தன் கையால் ஆசீர்வதித்த செபமாலைகளை இத்தொழிலாளர்களுக்கு அனுப்பி வைத்தார். இத் தொழிலாளர்கள் தாங்கள் அடைபட்டிருந்த இடத்தில் சிறு பீடம் ஒன்றை அமைத்து, நம்பிக்கையுடன் செபித்து வந்தனர் என்று செய்திகள் கூறுகின்றன.



சிலே நாட்டின் பல கோவில்களில் நம்பிக்கையுடன் தொடர் செபவழிபாடுகள், முழு இரவு விழிப்புச் செபங்கள், உண்ணா நோன்பு என்ற பல ஆன்மீக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இதன்பலனாக 33 இத் தொழிலாளர்களும் உயிருடன் மீட்கப்பட்டனர்.

இந்த சாதனை முடிந்ததும், அந்நாட்டின் ஆயர் ஒருவர் கூறிய வார்த்தைகள் இவை: "இன்று சிலே நாடு நம்பிக்கையுடன் உயிர்ப்பின் மகிமைக்குச் சான்று பகர்ந்துள்ளது."


கடுகளவு நம்பிக்கை இருந்தால், அந்த நம்பிக்கையுடன் செபங்கள் எழுப்பப்பட்டால், மலைகள் பெயர்ந்துவிடும், மரங்கள் வேருடன் எடுக்கப்பட்டு, கடலில் நடப்படும். எரிக்கோவின் மதில்கள் இடிந்து விழும் என்றெல்லாம் நம்பிக்கை தரும் சொற்கள் வேதாகமத்தில் உள்ளன. நம்பிக்கையுடன் கூடிய செபம் எவ்வளவு கனமானது என்பது கடவுளுக்கு மட்டுமே தெரியும். செபிப்பதைக் குறித்து நமது எண்ணங்களை தெளிவுபடுத்த, உள்ளங்களை உறுதிப்படுத்த, நம்பிக்கை செபம் நமது வாழ்வின் ஒரு நம்பிக்கையாகட்டும்

ம.பிரான்சிஸ்க்
கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகக் கிண்ணக் கிரிக்கெட்; முதன் முதல் ஆப்கான் தகுதி


உலகக் கிண்ணத்திற்கு தெரிவான சந்தோசத்தில் அணி வீரர்கள்



மகிழ்ச்சிக் கடலில் ஆர்ப்பரிக்கும் ஆப்கான் மக்கள்...

உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிக்கான தகுதிச் சுற்றுப் போட்டியில் 2ஆவது இடம்பெற்ற ஆப்கானிஸ்தான் அணி, முதன் முறையாக உலக கிண்ண (2015) தொடருக்கு தகுதி பெற்றது.

ஐ.சி.சி., சார்பில் 12ஆவது உலக கிண்ணத் தொடர், 2015 பெப், 14 முதல் மார்ச் 29 வரை அவுஸ்திரேலியா, நியூசிலாந்தில் நடைபெறவுள்ளது. மொத்தம் 14 அணிகள் இரு பிரிவுகளாக பிரிக்கப்பட்டு போட்டிகள் நடைபெறவுள்ளன.

'ஏ' பிரிவில் இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, இலங்கை, பங்களாதேஸ், நியூசிலாந்து மற்றும் 'பி' பிரிவில் இந்தியா, பாகிஸ்தான், தென்னாபிரிக்கா, மேற்கிந்திய தீவு, சிம்பாப்வே என, 10 அணிகள் நேரடியாக தகுதி பெற்றன.

சார்ஜாவில் முடிந்த உலகக் கிண்ண கிரிக்கெட் தகுதிச் சுற்றுப்போட்டியில் (ஜூன் 2011 முதல் 2013 ஒக்., 4), 2 அணிகள் தேர்வு செய்யப்பட்டன. 8 அணிகள் பங்கேற்ற இத் தொடரில், ஒவ்வொரு அணியும் மற்ற அணிகளுடன் தலா 2 முறை (14 போட்டி) மோதின. புள்ளிப்பட்டியலில் முதலிடம் பெற்ற அயர்லாந்து (11 வெற்றி, 24 புள்ளி) ஏற்கனவே தகுதி ('பி' பிரிவு) பெற்றுவிட்டது.


2, 3ஆவது இடத்தில் தலா 18 புள்ளிகளுடன் ஐக்கிய அரபு எமிரேட்ஸ், நெதர்லாந்து அணிகள் இருந்தன. நான்காவது (9 வெற்றி, 17 புள்ளி) இடத்தில் இருந்த ஆப்கானிஸ்தான, தனது கடைசி போட்டியில் கென்யாவை சந்தித்தது.

முதலில் விளையாடிய கென்ய அணி, 43.3 ஓவரில், 93 ஓட்டங்களுக்கு சுருண்டது. எளிய இலக்கைத் துரத்திய ஆப்கானிஸ்தான், 20.5 ஓவரில், 3 விக்கெட்டுக்கு 96 ஓட்டங்களை எடுத்து, 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதையடுத்து, 19 புள்ளிகளுடன், பட்டியலில் 2ஆவது இடத்துக்கு முன்னேறி, 2015 உலக கிண்ணத் தொடருக்கு தகுதிபெற்றது. 'ஏ' பிரிவில் இடம்பெற்ற ஆப்கானிஸ்தான் அணி, உலக கிண்ணத் தொடருக்கு (50 ஓவர்) தகுதிபெறுவது இதுதான் முதன் முறை. இதற்கு முன் 2010, 2012இல் 'ருவென்ரி-20' உலக கிண்ணத் தொடரில் விளையாடியது. மீதமுள்ள இரண்டு இடங்களுக்கு, 2014இல் நியூசிலாந்தில் நடைபெறவுள்ள தகுதிச்சுற்று போட்டிகளின் மூலம் தேர்வு செய்யப்படும். இதில் நெதர்லாந்து, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், ஸ்காட்லாந்து, கென்யா, நமீபியா, கனடா, உகாண்டா, ஹாங்காங், நேபாளம் மற்றும் பப்புவா நியூ கினியா என, 10 அணிகள் மோதவுள்ளன.


வீதிகளில் திரண்ட மக்கள் வெள்ளத்தால் போக்குவரத்து பாதிப்பு

## தேர்வாளர்களில் இருந்து பதவி விலகியமை சிறப்பான செயல்; கிளார்க்



அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் தேர்வாளர்களில் ஒருவராகக் காணப்பட்டு, அண்மையில் அப்பதவியிலிருந்து விலகியமை என்பது தான் மேற்கொண்ட சிறப்பான செயல்களில் ஒன்று என அவுஸ்திரேலிய அணியின் தலைவர் மைக்கல் கிளார்க் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்களின் அடிப்படையில் அவ்வணியின் தலைவருக்கும் தேர்வாளர் தகுதி அளிக்கப்பட்டிருந்தது. இதைப் பெற்றுக்கொண்ட முதலாவது தலைவராக மைக்கல் கிளார்க் காணப்பட்டார்.

இந்நிலையில் மிக்கி ஆர்தர் அவ்வணியின் தலைவர் பதவியிலிருந்து நீங்கிய பின்னர், தேர்வாளர் பதவியிலிருந்து விலகுவதாக மைக்கல் கிளார்க் அறிவித்திருந்தார்.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த மைக்கல் கிளார்க், அணியின் தேர்வாளர் பதவியிலிருந்து விலக எடுத்த முடிவு, தான் எடுத்த முடிவுகளில் மிகச்சிறப்பான முடிவுகளில் ஒன்று எனக் குறிப்பிட்டார்.

தேர்வாளர் பதவியென்பது முழுநேரத் தொழில் எனக் குறிப்பிட்ட மைக்கல் கிளார்க், அணித்தலைவராகவும், தேர்வாளராகவும் இருக்கும் போது அணியின் வீரர்களோடு நேரத்தைச் செலவிட முடியாது போனதாகவும், ஆகவே தற்போது அணியின் வீரர்களோடு மீண்டும் அதிக நேரத்தைச் செலவிட முடிந்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

தேர்வாளர்களின் கூட்டங்களுக்காகவும், தேர்வு தொடர்பாக மணிக்கணக்காக தொலைபேசியிலும் இருப்பதற்குப் பதிலாக இப்போது சக வீரர்களுடன் கோப்பி அருந்துவதிலும், மதிய, காலை உணவுகளை அருந்துவதிலும் தற்போது நேரத்தைச் செலவிடுவதாக மைக்கல் கிளார்க் தெரிவித்துள்ளார்.

## ஐ.பி.எல். சூதாட்டம் தொடர்பாக சண்டிலாவிடம் விசாரணை

ஐ.பி.எல் கிரிக்கெட் தொடரில் சூதாட்டத்தில் ஈடுபட்ட ராஜஸ்தான் அணி வீரர் சண்டிலாவிடம் மூன்று மணி நேரம் விசாரணை நடத்தப்பட்டது.

இந்தியாவில் நடந்த ஆறாவது ஐ.பி.எல் கிரிக்கெட் தொடரில், சூதாட்டத்தில் ஈடுபட்ட ராஜஸ்தான் அணி வீரர்கள் ஸ்ரீசாந்த், அங்கித் சவானுக்கு இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை (பி.சி.சி.ஐ.,) ஒழுங்கு நடவடிக்கை குழு வாழ்நாள் தடை விதித்தது. மற்றொரு வீரர் சண்டிலா சிறையில் இருந்ததால் அவரிடம் விசாரணை நடத்தப்படவில்லை.

பின் கடந்த செப்டம்பர் 9இல் பிணையில் வெளியில் வந்த சண்டிலாவுக்கு (பி.சி.சி.ஐ) ஒழுங்கு நடவடிக்கை குழு முன் ஆஜராக சம்மன் அனுப்பட்டது. இதையடுத்து ரவி சவானி முன் சண்டிலா ஆஜரானார்.


இவரிடம் சுமார் மூன்று மணி நேரம் விசாரணை நடத்தப்பட்டது. இறுதியில் சூதாட்டம் குறித்து எழுத்துப்பூர்வமாக அறிக்கை சமர்ப்பிக்கும்படி சண்டிலாவிடம், சவான் தெரிவித்தார்.

இதற்கு சண்டிலா ஒருவாரம் அவகாசம் கேட்டதாக தெரிகிறது. இதையடுத்து பி.சி.சி.ஐ ஒழுங்கு நடவடிக்கை குழுவிடம் ரவி சவானி விரைவில் அறிக்கை சமர்ப்பிக்கவுள்ளார். இதன் பின் சண்டிலாவுக்கும் வாழ்நாள் தடைவிதிக்கப்படுவது உறுதியாகும்.



இது குறித்து சண்டிலாவின் சட்டத்தரனி ராகேஷ் குமார் கூறுகையில், எந்த முன் அறிவிப்பு இல்லாமல் சண்டிலாவிடம் விசாரணை மேற்கொண்டது முற்றிலும் தவறானது.

முன்னதாக பி.சி.சி.ஐ., சார்பில் இருவர் தலைமையில் நடத்தப்பட்ட விசாரணையில் சென்னை, ராஜஸ்தான் அணி வீரர்கள் சூதாட்டத்தில் ஈடுபடவில்லை என தெரிவிக்கப்பட்டது.



## இறுதிப் போட்டிக்கு தெரிவானது சானியா ஜோடி

சர்வதேச டெனிஸ் போட்டி பீஜிங் நகரில் நடைபெற்று வருகிறது. இதில் பெண்கள் இரட்டையர் பிரிவில் நடைபெற்ற அரை இறுதியில் இந்தியாவின் சானியா மிர்சா- சிம்பாப்வேயின் காரா பிளாக் ஜோடி, முதல் நிலை இணையான இத்தாலியின் சாரா எர்ரானி - ராபர்ட்டா வின்சியுடன் பலப் பரீட்சை நடத்தியது. 1 மணி 12 நிமி டங்கள் நடைபெற்ற விறுவிறுப்பான இந்த மோதலில் சானியா ஜோடி 6:4, 6:4 என்ற நேர் செட்டில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குள் நுழைந்தது.

இதன் ஒற்றையர் கால்இறுதியில் டுந்து (11 வெற்றி, 24 புள்ளி) ஏற்கனவே தகுதி ('பி வீராங்கனை அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ் 6:1, 6:4 என்ற நேர் செட்டில் வோஸ்னியாக்கியை (டென்மார்க்) தோற்கடித்து அரைஇறுதியை எட்டினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வருகிறார்...

ராஜபக்ஷ, பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ மற்றும் மூத்த அதிகாரிகளைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

அத்துடன், நாளை திங்கட்கிழமை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ்டன் அவர் தனியாகப் பேச்சுவார்த்தை நடத்துவார் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது சம்பூர் அனல்மின் நிலையம் தொடர்பான ஒப்பந்தங்களும் வெளிவிவகார அமைச்சில் வைத்து கைச்சாத்திடப்படவுள்ளதுடன், இவ்விருவரும் இணைந்து செய்தியாளர்களையும் சந்திக்கவுள்ளனர்.

அதேவேளை, வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியை எதிர்வரும் செவ்வாய்க்கிழமை இந்திய வெளிவிவகார அமைச்சர் சந்திக்கவுள்ளார் எனவும் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதனிடையில் இலங்கைக்கு விஜயம் செய்யும் இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களையும், வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனையும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்துவார் என முன்னர் செய்திகள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(செ-11)

# பல்கலை...

பெற்றுள்ளது.

இதில் சாவகச்சேரி கெருடாவிலினைச் சேர்ந்த யாழ்.பல்கலைக்கழகத்தில் கலைப் பிரிவில் கல்வி கற்கும் ஜோகேஸ்வரன் சஜந்தன் (வயது 23) எனும் இறுதி வருட மாணவரே உயிரிழந்தவராவார்.

விபத்துச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

குறித்த பல்கலைக்கழக மாணவர் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருக்கும் போதே கனரக வாகனம் குறித்த மாணவரை மோதியுள்ளது.

இதில் படுகாயமடைந்த இளைஞர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதாக விபத்தினை நேரில் கண்டவர்கள் தெரிவிக்கின்றனர். மாணவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

விபத்து தொடர்பிலான விசாரணைகளினை புத்தூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும் தற்போது யாழில் வீதி விபத்துக்களின் எண்ணிக்கை திடீரென அதிகரித்துள்ளதோடு விபத்துக்களினால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கையும் உயர்வடைந்துள்ளது.

கடந்த வாரத்தில் மட்டும் இவ்வாறு வீதி விபத்துக்களினால் நால்வர் உயிரிழந்துள்ளதோடு அதில் மூவர் இள வயதுடையவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-4)


## பயிற்சி பட்டறை

NALTC – Australian Tamil Management Service ஊடான இலகு வழி (Easy way) ஆங்கிலமொழி பயிற்சிப்பட்டறை ஒன்று நடத்தப்படவுள்ளது. இது மூன்று Programs ஆக நடத்தப்படும் இப் பயிற்சி நடத்தப் படும் இடங்கள் Tilko Hotel, Green Grass, Mangos.

காலம் :- October பதிவுகள் மட்டுப் படுத்தப்பட்டுள்ளது. (பாடசாலை செல்வோர், பாடசாலை விட்டு விலகியோர், வேலை புரிவோர் விண்ணப்பிக்கலாம்)

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி, :- இல. 116, ஆடியபாதம் வீதி திருநெல்வேலி. (C-5033)


# இந்திய...

மாவட்டத்திற்கு விஜயம் மேற்கொள்ளும் அவர், முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் மற்றும் மாகாணசபை உறுப்பினர்களை சந்தித்து பேசவுள்ளார். இதன்போது மாகாணத்தின் நிலைமைகள் மற்றும் மாகாண சபையின் தேவைகள் குறித்து ஆராய்வார் என நாம் எதிர்பார்க்கிறோம்.

மேலும் வெளியுறவுத்துறை அமைச்சரின் வருகை மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக அமையும். இதனடிப்படையில் மேற்படிச் சந்திப்புக்களின் மூலம் இந்திய அரசாங்கத்திடமிருந்து ஆக்கபூர்வமான உதவிகள் வடக்கிற்கு கிடைக்கும் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் நம்புவதாக அவர் மேலும் தெரிவித்திருக்கின்றார். (செ-11)

# மும்பை வெற்றி

ட்ரினிடாட் அணிக்கெதிரான போட்டியில் மும்பை அணி 6 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளது.

சம்பியன்ஸ் லீக் கிரிக்கெட்டின் நேற்றைய போட்டியில் மும்பை இந்தியன்ஸ் மற்றும் ட்ரினிடாட் அன்ட் டோபாகோ அணிகள் விளையாடின.

முதலில் துடுப்பெடுத்தாடிய ட்ரினிடாட் அன்ட் டோபாகோ அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 5 விக்கெட் இழப்பிற்கு 153 ரன்கள் எடுத்தது.

154 ரன்கள் என்ற வெற்றி இலக்குடன் களமிறங்கிய மும்பை அணி 19.1 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்து 157 ரன்கள் எடுத்து வெற்றி பெற்றது.

மும்பை அணியில் அதிகபட்சமாக ஸ்மித் 59 ரன்கள் எடுத்தார்.

போட்டியின் ஆட்டநாயகனாக மும்பை அணியின் ஸ்மித் தெரிவானார்.


## தபால் மூலம் ஆங்கிலக் கற்கைநெறி

Northern Academic and Leadership Training Center (NALTC) நிறுவனத்தினூடாக நடைபெறும் இலகு வழி (easy way) ஆங்கிலப் பேச்சுப் பயிற்சியினை வெளிமாவட்டங்களில் இருப்போரும் பெற்றுக்கொள்ள விரும்பினால் உங்களுக்கான தபால் மூலமான பயிற்சியினை எம்மால் வழங்க முடியும் என்பதனை அறியத் தருகின்றோம்

உங்களுக்கான புத்தகங்கள், சஞ்சிகைகள் அனுப்பி வைக்கப்படும். வயதெல்லை இல்லை விரும்பியவர்கள் கீழுள்ள முகவரிக்கு உங்கள் விபரங்ளை அனுப்பலாம்.

தொடர்புகளுக்கு :
116, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (C-5031)



## ஸ்ரீ தேவி சித்த ஆயுர்வேத வைத்தியசாலை

குழந்தையின்மையா?
ஆண்மைக்குறைவா?
சொரியாசிஸ் நோயா?
கவலை வேண்டாம்
பலன் பெறுவது உறுதி
100% உத்தரவாதம் அளிக்கப்படும்







செல்: 0091 9600336009
இலங்கைச் செல்: 0754154364
இராமபுரம், சென்னை-89, இந்தியா.
Skype ID: sridevisiddha
(C-5035)


# மரண அறிவித்தல்

## கந்தப்பர் சின்னையா



கண்டியைப் பிறப்பிடமாகவும் உடுவிலை வதிவிடமாகவும் கொண்ட **கந்தப்பர் சின்னையா** நேற்று (05.10.2013 ) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் கனகம்மாவின் அன்புக் கணவரும் சித்திரா, விசாகன் ஆகியோரின் அன்புத் தந்தையும் கஜாணனன், டினோஜா ஆகியோரின் அன்பு மாமனாரும் கோபால், சுப்புரமணியன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் அணிருத், ஹரிஸ்ணவி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.10.2013) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

077 959 6763 (4110) தகவல்: குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

## சங்கரப்பிள்ளை துரைச்சாமி

(அம்பாள் பேக்கரி உரிமையாளர், ஆனைப்பந்தி)



ஆனைப்பந்தியைப்பிறப்பிடமாகவும் இராசாவின்தோட்டத்தை வசிப்பிடமாகவும் கொண்ட **சங்கரப்பிள்ளை துரைச்சாமி** அவர்கள் 03.10.2013 வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை-சின்னம்மா தம்பதியரின் பாசமிகு மகனும் காலஞ்சென்ற வீரகத்தி-சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் கண்மணியின் பெறாமகனும் திலகவதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற ஆறுமுகம் மற்றும் சண்முகலிங்கம், பரமலிங்கம், கமலாம்பிகை, ஆனந்தலக்சுமி, கேதீஸ்வரன், தனலக்சுமி, யோகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஜெயவதனி, ஜெயகௌரி, விஜயமோகன், ஜெயகீதா, விஜயகாந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் பஞ்சாட்சரம், சிவசுந்தரம், சபாநந்தினி, கி.ஸ்ரீறங்கன் ஆகியோரின் அன்பு மாமனும் காலஞ்சென்ற நாகராசா மற்றும் செல்வநாயகம், கனகலிங்கம், இராசலிங்கம், கந்தசாமி, ரூபாவதி, புஸ்பராணி காலஞ்சென்ற பாக்கியம், சவுந்தலாதேவி மற்றும் விஜயலக்சுமி, காலஞ்சென்ற சந்திரன் மற்றும் வதனி, தவேந்திரன் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் யனுஜா, கபிஷன், நக்சிகா, திசிஜா, விதுஷ், டிருஷ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.10.2013) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

39/3, இராசாவின்தோட்ட வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 0170

(4109)

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சர்கள் தெரிவு...

சத்து 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விருப்பு வாக்குகளைப்பெற்று முதலமைச்சராக தெரிவு செய்யப்பட்டுள்ள முன்னாள உயர் நீதிமன்ற நீதியரசர் க.வி. விக்னேஸ்வரனிடம் வடக்கு மாகாணத்தின் ஏனைய அமைச்சர்கள் யார் என்பது தொடர்பில் இறுதி முடிவு எடுப்பதற்கான அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தின் அமைச்சர்கள் யார் என்பது தொடர்பாகவும் எந்தக் கட்சிக்கு எத்தனை அமைச்சுப்பதவி, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் அமைச்சுப் பதவிகளைப் பங்கிடுவது தொடர்பிலும் இறுதி முடிவை முதலமைச்சரே எடுப்பார் என்றும் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் தலைவர் நேற்றைய கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.

இதன் பின்னர் கருத்து தெரிவித்த முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன், முதலமைச்சரின் சத்தியப் பிரமாணத்திற்கு பின்பே வடக்கு மாகாணத்தின் ஏனைய அமைச்சர் யார் என்பது தொடர்பாக அறிவிக்கப்படும் என்றார்.

இந்தக் கூட்டத்தில் வடக்கு மாகாணத்தின் முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் ஈபிஆர்எல்எப் தலைவருமானசுரேஷ்பிரேமசந்திரன்,புளொட் அமைப்பின் தலைவரும் மாகாணசபை உறுப்பினருமான தர்மலிங்கம சித்தார்த்தன், ரெலோ இயக்கத்தின் தேசிய அமைப்பாளரும் மாகாணசபை உறுப்பினருமான எம்.கே. சிவாஜிலிங்கம் உள்ளிட்டவர்கள் பங்கு கொண்டனர். (செ-6)

# உழவு இயந்திரம்...

செல்வராசசிங்கம் கஜந்தன் (வயது 25) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, சடலமாக மீட்கப்பட்ட குறித்த நபர் நேற்று முன்தினம வெள்ளிக்கிழமை இரவு 8 மணியளவில் போக்கறுப்பிலிருந்து மணற்காட்டுப் பகுதிக்கு மணல் விநியோக நடவடிக்கைக்காக சென்றுள்ளார்.

எனினும் இவர் அதிக நேரமாகியும் வீடு திரும்பாததனால் உறவினர்கள் இவரை தேடிச் சென்றுள்ளனர்.

இதன்போது வடமராட்சி கிழக்கு எல்லைக்கும் பளை பிரதேச எல்லைப் பகுதிக்கும் இடையில் குறித்த நபர் கொண்டு சென்ற உழவு இயந்திரத்தின் பெரிய சில்லுக்குள் அகப்பட்டு இறந்து கிடந்த நிலையில சடலமாகக் காணப்பட்டார்.

சம்பவம் தொடர்பில் பளைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதோடு இது விபத்தா அல்லது திட்டமிடப்பட்டு செய்யப்பட்ட கொலையா? என்ற கோணத்தில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சடலமானது பிரேதப் பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.(செ-9-64)

# தற்காலிக...

ஆய்வு செய்ய இந்தியா 'மாம்' என்ற விண்கலத்தை வரும் 28-ம் திகதி செலுத்த திட்டமிட்டிருந்தது. இதற்கான ஏற்பாடுகள் நடந்து வருகிறது.

ஆனால் அமெரிக்காவில் ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடி இந்தியாவின் செவ்வாய் கிரக ஆய்வுத் திட்டத்தில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்தியா அனுப்பும் மாம் விண்கலத்தின் தகவல் தொடர்பை நாசா மூலம் பெற ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

நாசா செயல்படாததால் இந்தியாவின் மாம் விண்கலத்தை வரும் 28-ம் திகதி திட்டமிட்டபடி ஏவ முடியாது என்ற சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

நாசா உதவி கிடைக்காததால் இந்தியா செவ்வாய்க்கு அனுப்பும் விண்கல திட்டத்தில் தாமதம் ஏற்படும் என்று தெரிகிறது. குறைந்த பட்சம் 2 ஆண்டுகள் தாமதம் ஏற்படலாம் என்று கூறப்படுகிறது.

எதிர்பாராதவிதமாக ஏற்பட்டுள்ள இந்தத் தடையால் இந்திய விஞ்ஞானிகள் கவலை அடைந்துள்ளனர். (செ-11)

# படகு...

பேரை கடற்படையினர் காப்பாற்றியுள்ளனர்.

கொழும்பு மாலபே பிரதேசத்தை சேர்ந்த இவர்கள் வில்பத்தில் இருந்து மீன்பிடி படகொன்றின் மூலம் கடலுக்கு விநோத பயணம் மேற்கொண்ட போது இந்த விபத்தில் சிக்கியதாக தெரியவந்துள்ளது.

இவர்கள் சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவுக்கு செல்ல முயற்சித்த சட்டவிரோத குடியேறவாசிகளாக இருக்கலாம் என கடற்படையினர் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (செ-11)


## சேவை முகவர்

**காணிகள், வீடு விற்பனைக்கு**

கொக்குவில், உரும்பிராய், ஊரெழு, மணற்தறை லேன், கெனடிலேன், நுணாவில் 21 பரப்பு புதிய தென்னங்காணி, வைமன் வீதி மற்றும் யாழில் இரு கடைகளும் விற்பனைக்குண்டு. யாழ்.நல்லூரில் விற்க விரும்புவோரும் தொடர்பு கொள்ளலாம்.

திரு.வி.சுந்தரம் T.P: 077 481 9801 (சி-5034)

## சிங்கள வகுப்புக்கள்

கதைக்க, எழுத இலகுவாகவும் விரைவாகவும் கற்றுக் கொள்ளலாம்...

**ஆரம்பம்:** 08.10.2013 செவ்வாய்க்கிழமை 4.30PM

French Language Centre: 0779 789 456

181, 1-வது மாடி, பிரதான வீதி, நெல்லியடி. (சி-5020)

## பிரத்தியேக கணினி வகுப்பு

*உங்கள் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும்
*DTP(Photoshop CS5, CorelDraw X4, PageMaker) Ms office, Internet & E-mail, Web Design.
*சிறுவர்களிற்கான கற்கைநெறி-(ஆண்டு 1-6)
*பெறுமதிமிக்க சான்றிதழ்கள் வழங்கப்படும் 10வருட அனுபவம்
*குறிப்பு: கணினி இல்லாதவர்களிற்கு எனது Laptop மூலமாக கற்பிக்கப்படும்.
TP:0779672038 ஆசிரியர்:KRC

கட்டட நிர்மாணத்துறையில் தேர்ச்சி பெற்றவரா? கொழும்பு/ யாழ்/நுவரெலியா மற்றும் பல்வேறு பிரதேசங்களில் மேசன்/செடலின்பஸ்/ தச்சு/ பெயின்டர் (1300/- மேல்) கையுதவியாளர் (1000/- மேல்) வாரச் சம்பளம்/ தினமும் கைச்செலவு, தங்குமிடம் உண்டு.

தொடர்பு: 077 556 1883 (சி-5008)

**Chartered Accounting**
**CA** CAB - I CAB - II **AAT**

யாழ்ப்பாணத்தில் நவீன மயப்படுத்தப்பட்ட வகுப்பறைகளில் குறைந்த செலவில் வகுப்புக்கள் ஆரம்பம்.

**12-10-2013**

பேராசிரியர் கே. தேவராஜாவின் ஆலோசனையுடனும் கொழும்பின் மூத்த விரிவுரையாளர் A.M. Roy Fernandoவின் வழிநடத்தலில் அனுபவம் வாய்ந்த விரிவுரையாளர்களால் வகுப்புகள் நடாத்தப்பட உள்ளன.

**Mind Vision Technology CAMPUS**

மணிக்கூட்டு ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
077 933 9353
(C-4997)
(C-4997)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



மு/ வற்றாப்பளை மகா வித்தியாலயத்தில் நல்ல ஆசான் எனும் சொல்லுக்கு இலக்கணமாகி 2013-ஆம் வருடத்திற்குரிய "பிரதீபா பிரபா" விருதினைத் தனதாக்கிக் கொண்ட நம் ஆசிரியர் திருமதி

**சாந்தகுமாரி கமலகாந்தன்**

அவர்களை பாராட்டி வாழ்த்துவதில் உளம் நிறைகின்றோம்.

- மு/ வற்றாப்பளை மகா வித்தியாலய கல்விச் சமூகம் -
வற்றாப்பளை, முள்ளியவளை

(சி-5036)

விரைவான தொழில்வாய்ப்பு கொழும்பை அண்மித்த பிரதான தொழிற்சாலைகளில் ஜேம்/சொலட்/கோழி இறைச்சி/தேயிலை/பென்சில்/ஆடைத் தொழிற்சாலை போன்ற தயாரிப்புகளுக்கு ✶ உற்பத்தி உதவியாளர் ✶லேபல் ✶பொதியிடல் ✶தரம் பிரித்தல் ✶பொதியிடல் பிரிவுக்கு ஆண்-பெண் 18-50 வயதினர் தேவை. உணவு தங்குமிடம் குறைந்த விலைகளில் சம்பளம் 18000/-, 25000/-, 30000/- வருகை தரும் நாளிலே வேலைக்கு சேர்த்துக் கொள்ளப்படுவீர்கள்.

**தொடர்பு: 077 843 0179 / 077 556 1883** (சி-5006)

நிரந்தர வேலைவாய்ப்பு துறைமுகத்திலும் விமான நிலையத்திலும் (தனியார்) கப்பல் புனர்நிர்மாணித்தல் பிரிவில் சாதாரண ஊழியர்கள்/வெல்டர்/மெக்கானிக்/ பெயின்டர் மற்றும் விமான நிலையத்தில் கேட்டரீஸ்/ காகோ/சுத்திகரிப்பாளர் 18-50 ஆண்-பெண் தேவை. சம்பளம் 18000/-, 35000/-. தொழில் அடிப்படையில் சம்பளம். தொடர்புகளுக்கு விரையுங்கள்:

**077 556 1883 / 077 599 7579** (சி-5007)

தொழில்வாய்ப்பு: கொழும்பை அண்மித்த பிரதேசங்களில் தனியார் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தேவை. (JSO/LSO/OTC/SSO) பாடசாலை / வங்கி / Food City/ தனியார் நிறுவனங்களுக்கு 18-50 ஆண்-பெண் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தேவை. சம்பளம் 18000/- 35000/-மேல். உணவு, தங்குமிட வசதி செய்து தரப்படும்.

**தொடர்பு: 077 556 1883 / 077 431 2176** (சி-5009)

## பதவி வெற்றிடங்கள்

யாழ்.மண்ணில் மிக அண்மையில் ஆரம்பிக்கப்பட்டு மிக வேகமாக வளர்ச்சியடைந்து வரும் கனேடியன் பல்தேசிய கம்பனி ஒன்றிற்கு ஆர்வமும், துடிப்பும் நிறைந்த ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க முடியும்.

| | |
|---|---|
| தகைமை | : க.பொ.த (சா/த) |
| வயது | : 18 தொடக்கம் 30 வரை |
| நேர்முகத் தேர்வு | : திங்கள் (07.10.2013), செவ்வாய் (08.10.2013) தினங்களில் எமது பிரதான காரியாலயத்தில் நடைபெறும். |
| நேரம் | :முற்பகல் 9.30 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை |

(4098)

தொடர்புகள்: 077 445 5888, 021 499 3166

## Dutch, Deutsch, French



தூதரக பரீட்சைக்கான ஜேர்மன் - **Deutsch** (டொச்) மற்றும் நெதர்லாந்து - **Dutch** (டச்) புதிய பிரிவுகள் திங்கட்கிழமை ஆரம்பமாகின்றன.

✶ French, Italian, English (A-1 Exam) வகுப்புகளும் நடைபெறுகின்றன.

✶ வடமாகாணத்தில் அரசாங்க அங்கீகாரம் பெற்று ஜேர்மன் கலாசார நிலையத்தின் அனுசரணையுடன் இயங்கும் ஒரே வெளிநாட்டு மொழிக் கல்வி நிறுவனம் எங்களுடையதே.

✶ Dutch மற்றும் Deutsch தூதரக பரீட்சைகளில் நீங்கள் சித்தியடைவதை தற்பொழுது நாம் 100% உத்தரவாதப்படுத்துகின்றோம்.

✶ Audio, Video வசதிகளுடன் குளிரூட்டப்பட்ட வகுப்பறைகள்.

(Gov. Reg.No: W/A 76795)

**Vivekananda Academy**, 0212220393

**221/1, மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம்.**

Tel: 0213216928, 0774842464 (Gov. Reg.No: W/A 76795)

(C-5010)

## ALLIANCE FRANÇAISE DE JAFFNA

*Learn French The French Way*

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

France, Canada வுக்கு திருமணம் முடித்து செல்வோர், மாணவர்கள் மற்றும் French கற்கவிரும்பும் யாவரும் (மன்னார், வன்னி மற்றும் வவுனியாவைச் சேர்ந்தவர்களும்) படிக்கிறார்கள். France இல் தொடர்ந்து French கற்பதற்கும் Embassy விடயங்களுக்கும் எமது *Certificate* அவசியமாகும். ஏனெனில் உலகில் French கற்பிப்பதற்கு France அரசாங்கம் அங்கிகரிக்கும் ஒரே நிறுவனம் "AF" மட்டுமே. யாழில் 1976 இல் இருந்து...



- An international language, the language of culture
- A language for education, a language for job market
- A language that is fun to learn

➢ Just say "*Yes, I can... speak French*"

குறிப்பு: தற்போது *A/L* எடுத்த மாணவர்களுக்கு விசேட அனுமதிகள்...

(4091)

புதிய வகுப்புகளுக்கு உடன் பதிவு செய்யவும் (சனி, ஞாயிறு)

61, Kachcheri-Nallur Road, Jaffna T.P. 021 222 8093

(கச்சேரியை அடுத்து வரும் சந்தியில் அமைந்துள்ள வெள்ளை மாடிக்கட்டடம்)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.10.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org